REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2024 ஏப்ரல் 3 புதன்கிழமை
# தினகரன்
THINAKARAN 92 ANNIVERSARY
வரு. 92 இல. 81 | Wednesday 03, April, 2024 | 16 பக்கங்கள் | 50/-

## மாத்தளையில் அரச வெசாக் விழா; மே 24 முதல் 27 வரை ஏற்பாடுகள்

**22, 23, 24 ஆம் திகதிகளில் இறைச்சிக் கடைகள் மற்றும் மதுபான சாலைகளுக்கு பூட்டு**

2,568 ஆவது ஸ்ரீ பௌத்த வருடத்தின் அரச வெசாக் விழா கொண்டாடப்படவுள்ளது.

இதையிட்டு, 2024.05.21 தொடக்கம் 2024.05.27 வரை வெசாக் வாரம் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. இதன் ஆரம்ப விழா மாத்தளை தர்மராஜ பிரிவெனாவிலும், இறுதி நிகழ்வு ஸ்ரீ சுனந்தாராம 06

**கொழும்பு கல்வி வலயத்துக்குட்பட்ட அனைத்து**

# முஸ்லிம் பாடசாலைகளின் பிரச்சினைகளுக்கு தீர்வு

**விரைவில் கண்டறியுமாறு அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்பு**



**அமைச்சர் அலி சப்ரி தலைமையில் அதிபர்கள், அமைப்புகளின் பிரதிநிதிகள் ஜனாதிபதியிடம் பிரச்சினைகளை எடுத்துரைப்பு**

கொழும்பு கல்வி வலயத்திலிருக்கும் முஸ்லிம் பாடசாலைகளின் பிரச்சினைகள் குறித்து கண்டறிந்து அவற்றுக்கு விரைவில் தீர்வை பெற்றுக்கொடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். கொழும்பு பிரதேசத்திலுள்ள முஸ்லிம் பாடசாலைகள் எதிர்கொள்ளும் கல் விசார்ந்த பிரச்சினைகள் தொடர்பாக நேற்று (02) ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு பணிப்புரை விடுத்தார்.

கொழும்பிலுள்ள முஸ்லிம் பாடசாலைகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மற்றும் பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் அமைப்புகளின் பிரதிநிதிகள் ஜனாதிபதியிடம் பிரச்சினைகள் தொடர்பில் எடுத்துரைத்தனர்.

ஆசிரியர் பற்றாக்குறை, இடநெருக்கடி, 06

**அபாயகரமான பொருட்களுடன் பாலத்தில் மோதிய கப்பல்**

# விபத்து குறித்து முறையான விசாரணைகள் நடத்தப்படும்

**எதிரணியின் கேள்விக்கு இராஜாங்க அமைச்சர் ஜானக்க வக்கும்புர பதில்**




**லோரன்ஸ் செல்வநாயகம்**

அபாயகரமான பொருட்கள் அடங்கிய கொள்கலன்களுடன் சிங்கப்பூர் சரக்கு கப்பல் இலங்கை கடற்பரப்புக்குள் பிரவேசிப்பதற்கு மத்திய சுற்றாடல் அதிகாரசபை அனுமதி வழங்கவில்லை என்றும் அதற்கிணங்க அமெரிக்காவில் பாலத்தில் மோதுண்ட கப்பல் தொடர்பில் முறையான விசாரணைகள் நடத்தப்படும் என சுற்றாடல் இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் சரித்த ஹேரத் ஆகியோர் முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு 06

## அதிவேக நெடுஞ்சாலைகள் எதுவும் தனியாருக்கு வழங்கப்படவில்லை

**செய்திகளில் எதுவித உண்மையுமில்லை**



அதிவேக நெடுஞ்சாலைகள் எதுவும் தனியாருக்கு வழங்கப்படவில்லை. இது தொடர்பிலான செய்திகள் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானதென அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (02) நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில், அதிவேக நெடுஞ்சாலை தனியார் நிறுவனம் ஒன்றுக்கு வழங்கப்படுமா? 06

**வங்கி திருத்த சட்டமூலம் சமர்ப்பிப்பு**

## சர்வதேசத்தின் முறைமைக்கமைய வங்கிக் கட்டமைப்புக்கள் புதுப்பிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டின் வங்கி கட்டமைப்பை சர்வதேசத்தின் முறைமைக்கு இணங்க புதுப்பிக்கும் நோக்கிலேயே வங்கி திருத்த சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய சபையில் தெரிவித்தார்.

18 வருடங்களுக்குப் பின் மேற்கொள்ளப்படும் இத்திருத்தங்கள் மூலம் நாட்டின் ஐந்து கோடியே 06

## பெருந்தோட்டத்துறை மக்களுக்கு காணி உரிமை வழங்கும் திட்டம்

**ஜனாதிபதி ரணில், அமைச்சர் ஜீவன் முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவையில் அங்கீகாரம்**

கம்பனிகள் மற்றும் அரசுக்குச் சொந்தமான பெருந்தோட்டக் கம்பனிகளுக்குரிய தோட்டங்களில் வாழ்கின்ற பெருந்தோட்டத்துறை மக்களுக்கு காணி உரிமை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகள் மற்றும் அரசுக்குச் சொந்தமான பெருந்தோட்டக் கம்பனிகளுக்குரிய தோட்டங்களில் வாழும் 4,151 பயனாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இக் குடும்பங்கள் தற்போது வசிக்கின்ற காணிக்களுக்கான அறுதி உறுதியை வழங்குவதற்காக 06

**ஜப்பானிய 'Child Fund' நிதியத்தினால்**

## கஷ்டப் பிரதேச மாணவர்களுக்கு இலவச சைக்கிள்கள் கையளிப்பு



நாட்டின் கஷ்டப்பிரதேசங்களில் உள்ள மாணவர்களின் பாடசாலை வருகையை ஊக்குவிக்கும் நோக்கில், ஜப்பானின் 'Child Fund' நிதியம் சைக்கிள்களை அன்பளிப்புச் செய்துள்ளது. ஐநூறு சைக்கிள்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இதன்மூலம் கஷ்டப்பிரதேச மாணவர்களுக்கு தொடர்ச்சியாக பாடசாலைக்கு செல்லும் வாய்ப்பை இது 06

## ஞானசார தேரருக்கு பிணை வழங்க கோரிய மனு நிராகரிப்பு

நான்கு வருட கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொடஅத்தே ஞானசார தேரருக்கு, பிணை வழங்குமாறு முன்வைக்கப்பட்ட மனுவை கொழும்பு மேல் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

தனது சேவை பெறுபவரைப் பிணையில் விடுவிக்குமாறு கோரி சட்டத்தரணிகள் முன்வைத்த 06

## கல்முனை தமிழர்களுக்கு தனியான எல்லையுடன் பிரதேச செயலகம் அவசியம்



**அதனையே நாம் வலியுறுத்துகிறோம் - எச்.எம்.எம். ஹரீஸ்**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

தமிழ் மக்களுக்கு தாம், எதிரானவர்கள் அல்ல என்றும் கல்முனையில் தமிழர்களுக்காக ஒரு எல்லையுடன் பிரதேச செயலகம் அமைத்து வழங்கப்படுவது அவசியமென்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எம்.பி, எச்.எம்.எம். ஹரீஸ் 06



## மலையகப் பிரதேசங்களில் பொலிஸ் வெற்றிடங்கள்

**விண்ணப்பிக்குமாறு சுரேஷ் MP வேண்டுகோள்**

இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் ஆட்சேர்ப்புக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. மலையக பகுதியில் தமிழ் மொழியில் சேவையாற்றுவதற்கு அதிக வெற்றிடம் நிலவுவதால், இதற்குத் தகுதியுடையவர்கள் 06

## ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு குத்தகைக்கு 04 விமானங்கள்

**ஒப்பந்தம் செய்ய அமைச்சரவை அங்கீகாரம்**

குத்தகை அடிப்படையின் கீழ், ஸ்ரீலங்கன் விமான நிறுவனம் நான்கு பெரிய ரக விமானங்களைக் பெற்றுக்கொள்ளும் ஒப்பந்தங்களுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.


ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்துக்கு ஐந்து (05) பெரிய ரக விமானங்களுக்கான தேவை ஏற்பட்டுள்ளது.

இருந்தபோதும் அதில் இரண்டு (02) விமானங்களை குத்தகையின் கீழ் பெற்றுக் கொள்ள ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளது. இதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியுள்ளது. தொழிநுட்ப 06

## பண்டிகைக்கால தேவைகள் கருதி 2,000 மெ.தொ.உளுந்து இறக்குமதி

**இறக்குமதித் தடையும் தற்காலிக நீக்கம்**

**லோரன்ஸ் செல்வநாயகம்**



இலங்கைக்கு 2,000 மெற்றிக் தொன் உளுந்தை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. பண்டிகைக் காலங்களில் உளுந்துக்கான தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கும், அதிகரித்துள்ள உளுந்து விலையை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் 06

### ரமழான் தொழுகை நேரம்

| திகதி | 03-05 |
|---|---|
| ஸஹர் முடிவு | 04.37 |
| ஸுபஹ் | 04.52 |
| சூரிய உதயம் | 06.08 |
| ழுஹர் | 12.15 |
| அஸர் | 03.19 |
| மஃரிப் | 06.20 |
| இஷா | 07.30 |





பொருளாதார சவால்களை எதிர்கொள்ளும் 100,000 பாடசாலை மாணவர்களுக்கு ஜனாதிபதி நிதியத்தினால் வழங்கப்படும் புலமைப்பரிசில் திட்டம் 2024/2025

பாடசாலை அதிபரின் பரிந்துரையோடு இப்புலமைப்பரிசிலுக்கு தகைமை பெற்ற பிள்ளைகளுக்கு 250/- ரூபாய் ஆரம்ப வைப்பு மற்றும் சகல சலுகைகளுடன் ரண் கெகுளு smart விசேட சிறுவர் கணக்கொன்றை ஆரம்பிப்பதற்கு இலங்கை வங்கி தயாராகவுள்ளது.

அருகிலுள்ள இலங்கை வங்கிக் கிளையின் முகாமையாளரிடம் மேலதிக விவரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# நகர்வலம்



அரசாங்கத்தை பொறுப்பேற்குமாறு

## தூதுவர்களோ, தூதரகங்களோ என்னிடம் கோரவில்லை

### சபையில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடிகளின்போது அரசாங்கத்தை பொறுப்பேற்குமாறு வெளிநாட்டுத் தூதரகங்கள் அல்லது தூதுவர்கள் எவரும் நம்மிடம் வலியுறுத்தவில்லை என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன சபையில் தெரிவித்தார். அப்படி வலியுறுத்தியதாக தாம் எந்த சந்தர்ப்பத்திலும் எங்கும் கூறவுமில்லையெனவும் அது தொடர்பில் தவறான கருத்துக்களை வெளியிட வேண்டாம் என்றும் சபாநாயகர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் எதிரணி சுயாதீன எம்.பி கவிந்து குமாரதுங்க தெரிவித்த கூற்று ஒன்றுக்குப் பதிலளித்த போதே சபாநாயகர் இவ்வாறு தெரிவித்தார்.



அது தொடர்பில் கவிந்து குமாரதுங்க மேலும் தெரிவிக்கையில்,

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்ட கருத்து தற்போதைய பிரதான பேசு பொருளாக காணப்படுகிறது. அவர் நீதிமன்றத்தில் ஆஜராகவுள்ளார.

இந்த நிலையில் 2022 ஆம் ஆண்டு அரசியல் குழப்பங்கள், நெருக்கடிகள் தீவிரமடைந்த போது அரசியலமைப்புக்கு முரணாக அரசாங்கத்தை பொறுப்பேற்க வெளிநாட்டு தூதுவராலயங்கள் உங்களுக்கு அழுத்தம் பிரயோகித்ததாக நீங்கள் குறிப்பிட்டீர்கள். ஆனால் அவ்வாறு அழுத்தங்களை பிரயோகித்த தூதரகங்களினதோ தூதுவர்களினதோ பெயரை குறிப்பிடவில்லை.

ஆகவே, அரசியலமைப்புக்கு முரணாக அரசாங்கத்தை பொறுப்பேற்குமாறு அழுத்தம் பிரயோகித்த தூதுவராலயங்கள் , தூதுவர்கள் யார் என்பதை சபையில் அறிவியுங்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

இதன்போது சபைக்கு தலைமை தாங்கிய சபாநாயகர் 'நீங்கள் தவறான விடயங்களை கூறுகின்றீர்கள். நாட்டில் ஏற்பட்ட அரசியல் குழப்பங்கள், நெருக்கடிகளின் போது அரசாங்கத்தை பொறுப்பேற்குமாறு வெளிநாட்டு தூதரகங்கள் ,தூதுவர்கள் எவரும் என்னிடம் வலியுறுத்தவில்லை. அப்படி வலியுறுத்தியதாக நான் கூறவுமில்லை, எனவே சபையில் தவறான விடயங்களை வெளியிட வேண்டாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

கிராமிய பிரதேசங்களில் வாழும்

## பொதுமக்கள் சுற்றுப்புறச் சூழலை சுத்தமாக வைத்திருக்க கோரிக்கை

### பிரதேச சுகாதார அதிகாரிகள் பணிப்பு

**திறப்பனை தினகரன் நிருபர்**

கிராமிய பிரதேசங்களில் வாழும் பொது மக்கள் தாம் வாழும் சுற்றுப்புறச் சூழலை துப்புரவாக வைத்துக் கொள்வதில் அசிரத்தை காட்டி வருவதுடன் சில பிரதேசங்களில் ஆங்காங்கு குப்பை கூளங்கள் உட்பட தண்ணீர் தேங்கி நிற்கக் கூடிய பொருட்கள் போன்றவற்றை ஒதுக்கி வைத்திருப்பதையும் காணமுடிகின்றது.

இதனால் பின் நாட்களில் டெங்கு போன்ற தொற்று நோய்கள் பரவும் சாத்தியம் இருப்பதை இவர்கள் உணர்வதில்லை என தெரிவிக்கும் சுகாதார அதிகாரிகள், எதிர்காலத்தில் மழை பெய்யும் போது தேக்கி வைத்துள்ள கழிவுப் பொருட்களால் தொற்று நோய்கள் ஏற்படும் வாய்ப்பு உருவாகும் என நம்பப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

பொது மக்கள் குப்பை கூளங்கள் மற்றும் தண்ணீர் தேங்கி நிற்கக் கூடிய பாத்திரங்கள் மற்றும் கழிவு பொருட்களை உடனுக்குடன் புதைத்து விடுமாறு அல்லது அவற்றை அகற்றி விடுமாறு பிரதேச சுகாதார அதிகாரிகள் பொதுமக்களை கேட்டுக் கொள்வதுடன் தவறுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்க நேரிடலாம் எனவும் தெரிவித்துள்ளனர்.

## விபசார விடுதி சுற்றிவளைப்பு; நான்கு பெண்கள் கைது

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

மசாஜ் நிலையமென்ற போர்வையில் விபசார விடுதியினை நடாத்திச் சென்ற இரு இடங்களை அநுராதபுரம் பொலிஸார் சுற்றிவளைத்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய நேற்று முன்தினம் மாலை அநுராதபுரம் சாலிய மாவத்த மற்றும் தம்மன்னா புர பகுதியில் நடாத்திய சுற்றிவளைப்பில் துர்நடத்தையில் ஈடுபட்ட பெண்கள் நான்கு பேரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

## சவுதி தூதுவரினால் பேரீச்சம் பழம் வழங்கி வைப்பு







இரு புனித பள்ளிவாசல்களின் காவலரும் சவுதி அரேபிய மன்னருமான சல்மான் பின் அப்துல் அஸீஸ் இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ள பேரீச்சம் பழங்களில் ஒரு தொகுதியை இலங்கைக்கான சவுதி அரேபியத் தூதுவர் காலித் பின் ஹமூத் அல் கஹ்தானி கொழும்பு ஜாவத்த ஜும்ஆப் பள்ளிவாசல், கொள்ளுப்பிட்டி ஜும்ஆ பள்ளிவாசல், வெள்ளவத்தை ஜும்ஆ பள்ளிவாசல், கொழும்பு பெரிய பள்ளிவாசல், சம்மான்கோட்டு ஜும்ஆ பள்ளிவாசல், சாஹிரா ஜும்ஆ பள்ளிவாசல் உள்ளிட்ட பள்ளிவாசல்களுக்கு நேரில் சென்று பகிர்ந்தளித்த போது பிடிக்கப்பட்ட படம்.

## பட்டதாரிகள் நீதி கோரி ஆர்ப்பாட்டம்



வடமத்திய மாகாணத்தில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிவர்த்திக்கும் வகையில் கடந்த (09) நடைபெற்ற எழுத்து மூலப்பரீட்சை பெறுபேறுகளில் அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக கூறி அநுராதபுரத்தில் அமைந்துள்ள மாகாண சபை வளாகத்துக்கு முன்னால் 50கும் மேற்பட்ட பட்டதாரிகள் நீதி பெற்றுத்தருமாறு கோரி நேற்று (02) கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டபோது எடுக்கப்பட்ட படம்.

(படம்: அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

## நீதி அமைச்சரின் இப்தார் நிகழ்வு கொழும்பில்



கொழும்பு சங்கராஜ மாவத்தையில் அமைந்துள்ள நீதி மற்றும் சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்சவின் ஏற்பாட்டில் இஃப்தார் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இதில் வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி, இராஜாங்க அமைச்சர்களான அனுராதா ஜயரத்ன, காதர் மஸ்தான், கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச் எம் பௌசி மற்றும் இந்தோனேசிய தூதுவர், முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினர் நௌசர் பௌசி மற்றும் சர்வமத தலைவர்கள் உட்பட அரச அதிகாரிகளும் இப்தார் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.





பெருநாளை முன்னிட்டு

## புத்தளம் நகர் பிரதேசங்கள்தோறும் மின் விளக்குகளால் அலங்கரிக்க முடிவு

### அலி சப்ரி ரஹீம் எம்.பி நடவடிக்கை

**புத்தளம் தினகரன் நிருபர்**

புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமின் நிதி ஒதுக்கீட்டில் எதிர்வரும் நோன்பு பெருநாளை முன்னிட்டு புத்தளம் நகர், நுரைச்சோலை மற்றும் கற்பிட்டி நகர் முழுவதும் மின் விளக்குகளால் பந்தல் அமைக்கப்பட்டு ஒளிரவிடப்படவுள்ளன.

இம்முறை இரு பெருநாட்களும் சம காலத்தில் வருவதால் நகருக்குள் பிரவேசிக்கும் பொதுமக்களுக்கு வீதி ஒழுங்குகளை பேணுதல், அவரவர் உடைமைகளை பாதுகாத்துக் கொள்ளுதல் தொடர்பாக அறிவுறுத்தல்களை வழங்கும் விதத்தில் நகர் முழுவதும் ஒலிபெருக்கிகள் பொருத்தப்பட்டு உரிய அறிவுறுத்தல்களை வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை, நோன்பு பெருநாள் தினத்தில் இரவன்று சிறுவர்களை மகிழ்விக்கும் வகையில் புத்தளம் கொழும்பு முகத்திடலில் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் தலைமையில் வான வேடிக்கை நிகழ்வுகளும் இடம்பெற உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மியன்மார் பயங்கரவாதிகள் கோரும் நிதியை வழங்க முடியாது

### சபையில் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

மியன்மாரில் அந்நாட்டு பயங்கரவாதிகளினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையர்களை விடுவிப்பதற்கு அந்த பயங்கரவாதிகள் கோரும் நிதியை வழங்க முடியாதென வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியின் பிரதம கொரடா லக்ஸ்மன் கிரியெல்ல எம்.பி. முன்வைத்த விசேட கூற்றொன்றிற்கு பதிலளிக்கும் போதே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.



லக்ஷ்மன் கிரியெல்ல எம்பி தமது கேள்வியின் போது; மியன்மாரில் பயங்கரவாதிகளின் கட்டுப்பாட்டில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 50 ற்கும் மேற்பட்ட இலங்கையர்கள் பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர். அவர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன? அது தொடர்பில்அரசாங்கம் விரைவாக செயற்படுகிறதா என்பதில் சந்தேகம் நிலவுகிறது. அந்த வகையில் அவர்களை நாட்டுக்கு அழைத்து வர அரசாங்கம் துரிதமான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். அதற்கு பதிலளித்த வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய 'மியன்மார் அரசாங்கத்தின் நிர்வாகத்துக்கு அப்பாற்பட்ட பயங்கரவாதிகளின் கட்டுப்பாட்டுக்குள் தான் இலங்கையர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

தற்போதைய நிலையில் அவர்கள் கோரும் நிதியை செலுத்தி இவர்களை விடுவிக்க முடியாத நிலையே காணப்படுகிறது. எனவே பேச்சுவார்த்தைகள் ஊடாக தீர்வு பெற்றுக்கொள்ள தாய்லாந்து மற்றும் மியன்மார் அரசாங்கத்துடன் அரசாங்கம் என்ற வகையில் நாம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளோம் என்றார்.



தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை ஆரம்பிக்கப்பட்டு 45 ஆண்டுகள் பூர்த்தியாவதை முன்னிட்டு கொழும்பு தலைமைக்காரியாலயத்தில் (01) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் ரஜிவ் சூரியாரச்சி தலைமையில் விசேட நிகழ்வுகள் இடம்பெற்றன. இதன்போது தலைவர் ஞாபகார்த்த கேக் வெட்டுவதை படத்தில் காணலாம். இந்நிகழ்வில் ஊழியர்களும் கலந்து சிறப்பித்தனர். (படம்: அஷ்ரப் ஏ சமத்)

## மதுரங்குளி ஆசிரியர் தொழிற்சங்க உறுப்பினரின் வீடு, சொத்துக்களுக்கு தீவைப்பு

### சந்தேக நபர்களை கைது செய்ய கோரி மக்கள் ஆர்ப்பாட்டம்

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

மதுரங்குளி மூக்குத்தொடுவாய் பிரதேசத்தில் உள்ள இலங்கை ஆசிரியர் தொழிற் சங்க உறுப்பினர் ஒருவரின் வீடு மற்றும் அவரின் சொத்துக்களுக்கு தீ வைக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேக நபர்களை கைது செய்யுமாறு கோரி நேற்று (02) மதுரங்குளிதொடுவா பிரதான வீதியை மறித்து மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும், மதுரங்குளி மூக்குத்தொடுவா பகுதியில் இயங்கி வரும் செமன் தொழிற்சாலையினால் தமது பிரதேசத்தில் சுகாதார சீர்கேடு ஏற்பட்டுள்ளதாக ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர்.

குறித்த தொழிற்சாலையை சட்ட ரீதியான முறையில் முன்னெடுக்க வேண்டும் என இலங்கை ஆசிரியர் தொழிற் சங்க உறுப்பினர் தலைமையில் சிலர் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தனர். இந்த நிலையிலேயே, இலங்கை ஆசிரியர் தொழிற் சங்க உறுப்பினரின் வாகனம் உள்ளிட்ட சொத்துக்கள் சிலரால் தீவைத்து எரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதனை கண்டித்தும், சந்தேக நபர்களை கைது செய்ய கோரியும் மதுரங்குளி தொடுவா பிரதான வீதியை மறைத்து நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கோஷங்களை எழுப்பியும் சுலோகங்களை ஏந்தியும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது மதுரங்குளி பொலிஸ் நிலையைப் பொறுப்பதிகாரி உட்பட பொலிஸார் சம்பவ இடத்திற்கு விஜயம் செய்து ஆர்ப்பாட்டக்காரர்களுடன் கலந்துரையாடினர்.



தீவைப்பு சம்பவத்துடன் தொடர்புடையவர்களை உடனடியாக கைது செய்ய வேண்டும் எனவும் , செமன் தொழிற்சாலையை நடத்த சட்டரீதியாக அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலிஸாரிடம் தெரிவித்தனர்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 ஏப்ரல் 3 புதன்கிழமை

தினகரன்
THINAKARAN



# சபையில் நிறைவேறிய சட்டமூலங்கள் சிலவற்றை சான்றுரைப்படுத்தினார் சபாநாயகர்

பாராளுமன்றத்தில் அண்மைக் காலத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டமூலங்கள் சிலவற்றை சான்றுரைப்படுத்தியிருப்பதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன நேற்று (02) சபையில் அறிவித்தார்.

பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள், ஆவணங்களைப் பதிவுசெய்தல் (திருத்தம்), நம்பிக்கைப் பொறுப்பு பற்றுச் சீட்டுக்கள் (திருத்தம்), ஈடு (திருத்தம்), நிதிக் குத்தகைக்கு விடுதல் (திருத்தம்), உள்நாட்டு நம்பிக்கைப் பொறுப்பு (திருத்தம்) மற்றும் கம்பனிகள் (திருத்தம்) ஆகிய சட்டமூலங்களையே சான்றுரைப் படுத்தியிருப்பதாக அவர் அறிவித்தார்.



இதற்கமைய, குறிப்பிட்ட சட்டமூலங்கள் 2024 17ஆம் இலக்க பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சட்டம், 2024ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க ஆவணங்களைப் பதிவுசெய்தல் (திருத்த) சட்டம், 2024ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க நம்பிக்கைப் பொறுப்பு பற்றுச்சீட்டுக்கள் (திருத்த) சட்டம், 2024ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க ஈடு (திருத்த) சட்டம், 2024ஆம் ஆண்டின் 21ஆம் இலக்க நிதிக் குத்தகைக்கு விடுத்தல் (திருத்த) சட்டம், 2024ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க உள்நாட்டு நம்பிக்கைப் பொறுப்பு (திருத்த) சட்டம் மற்றும் 2024 ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க கம்பனிகள் (திருத்த) சட்டம் எனும் பெயரில் நேற்று முன்தினம் (01) முதல் நடைமுறைக்கு வருகின்றன.




## ஸகாத்துல் பித்ரை நிறைவேற்றுவோம்

ஸகாத்துல் ஃபித்ர் என்பது ரமழான் மாதம் முடிந்து ஷவ்வால் மாதத் தலைப்பிறையைக் கண்டதும் நிறைவேற்ற வேண்டிய கடமையாகும். அதாவது தனக்கும் தனது பொறுப்பில் உள்ளவர்களின் பெருநாளுடைய தேவைக்கும் மேலதிகமாக கொண்டிருப்பவர்கள் நிறைவேற்ற வேண்டிய கடமையாகும் இது.

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், 'ஸகாத்துல் ஃபித்ர் என்பது நோன்பாளியிடமிருந்து நிகழ்ந்த வீணான செயல்கள் மற்றும் தீய வார்த்தைகளுக்கு குற்றப்பரிகாரமாகவும் ஏழைகளுக்கு உணவாகவும் அமைகின்றது.' என்றுள்ளார்கள். (நபிமொழி)

இதனால், ஸகாத்துல் பித்ரை இஸ்லாமிய விதிமுறைகளுக்கு அமைய நிறைவேற்றுவதன் மூலம் நோன்பாளியிடமிருந்து ஏற்பட்ட வீணான செயல்களுக்கு குற்றப்பரிகாரமாக அமைந்து விடுவதோடு ஏழைகளுக்கு உணவாகவும் அது விளங்கும்.

அதனால், இந்த ஸக்காத்துல் பித்ரை நிறைவேற்ற வேண்டிய காலம், நிறைவேற்றப்பட வேண்டிய பொருட்கள், அளவு என்றபடி மிகவும் தெளிவாக நபி (ஸல்) அவர்கள் எடுத்தியம்பியுள்ளார்கள். ஷவ்வால் பிறைக் கண்டது முதல் மறுநாள் காலையில் பெருநாள் தொழுகைக்கு புறப்பட முன்னர் இதனை நிறைவேற்றிட வேண்டும். அதுவே சுன்னாவாகும்.

இமாம் ஷாபிஈ (ரஹ்) இமாம் அஹ்மத் ரஹ்) போன்ற பெரும்பான்மையான அறிஞர்களின் கருத்துப்படி, பிரதான உணவாக உட்கொள்ளக்கூடிய தானிய வகையில் இருந்தே இதனை வழங்கப்பட வேண்டும். அதனால், ஒவ்வொரு வரும் 'ஒரு ஸாஃ' அளவு வீதம், அதாவது 2.4 கிலோ கிராம், ஸகாத் பெறத்தகுதியானவர்களை இணங்கண்டு கொடுத்தல் அவசியதாகும்.

எனவே, ஸக்காதுல் ஃபித்ரை உரிய முறையில் நிறைவேற்றி அல்லாஹ்வின் அன்பை பெற்றுக் கொள்வோம்.

**முப்தி எ.எச்.எம் மின்ஹாஜ்**
(காஷிபி, மழாஹிரி) நிந்தவூர்

# பாதாள கோஷ்டியின் ஒன்பது பேர் கைது

நாடளாவிய ரீதியில் கடந்த திங்கட்கிழமை மேற்கொள்ளப்பட்ட சோதனைச் செயற்பாடுகளில் பாதாள கும்பலைச் சேர்ந்த ஒன்பது பேருடன் மேலும் மூவர் கைதாகினர்.

மேல் மாகாணம் மற்றும் தென் மாகாணம் உள்ளிட்ட பகுதிகளில் இடம்பெறும் பாதாள உலக குற்றச் செயற்பாடுகளை இலக்கு வைத்து, இச்சோதனை நடவடிக்கைகள்

முன்னெடுக்கப்பட்டன. கோனாபீனுவெல பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் 32 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டார். பேருவளை பிரதேசத்திலும் 360 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் கைதானார்.

ஹிக்கடுவை பொலிஸ் பிரிவிற்குற்பட்ட பகுதியிலும் இந்த சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இதிலும் 32 வயதுடைய நபரொருவர் கைதானார்.

களுத்துறை, நீர்கொழும்பு மற்றும் கணேமுல்ல உள்ளிட்ட பகுதிகளிலும் இவ்வாறு சோதனைகள் மேற்கொள்ளப்பட் டன. வன்முறைகளைத் தூண்டி மக்களின் சொத்துக்களைப் பறித்தல், போதை வியாபாரம் உள்ளிட்டவற்றை ஒழிக்கும் நோக்கில் இந்நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பண்டிகை காலத்தை முன்னிட்டு

# வெங்காயம், கிழங்கு, பால் மா உட்பட 09 பொருட்களின் விலைகள் குறைப்பு

பண்டிகை காலத்தை முன்னிட்டு 09 அத்தியாவசிய பொருட்களின் விலைகளை லங்கா சதொச நிறுவனம் குறைத்துள்ளது.

இந்த விலை குறைப்பு நேற்று செவ்வாய்க்கிழமை (02) முதல் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதாக நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒரு கிலோ பெரிய வெங்காயம் 55 ரூபாவால் குறைக்கப்பட்டு 495 ரூபாவாகவும், ஒரு கிலோ சின்ன வெங்காயம் 30 ரூபாவால் குறைக்கப்பட்டு 290 ரூபாவாகவும், ஒரு கிலோ நிலக்கடலை 16 ரூபாவால் குறைக்கப்பட்டு 494 ரூபாவாகவும், ஒரு கிலோ உருளைக் கிழங்கு 15 ரூபாவால் குறைக்கப்பட்டு 195 ரூபாவாகவும் விற்பனை செய்ய சதொச தீர்மானித்துள்ளது.



அத்துடன் 400 கிராம் பால் மா 10 ரூபாவால் குறைக்கப்பட்டு 925 ரூபாவாகவும், ஒரு கிலோ கோதுமை மா 08 ரூபாவால் குறைக்கப்பட்டு 192 ரூபாவாகவும், ஒரு கிலோ பச்சரிசி 03 ரூபாவால் குறைக்கப்பட்டு 192 ரூபாவாகவும், ஒரு கிலோ சோயா மீட் 02 ரூபாவால் குறைக்கப்பட்டு 593 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுவதாகவும் சதொச அறிவித்துள்ளது.

இதேவேளை இறக்குமதி முட்டை விலையும் 07 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது. தற்போது முட்டை 37 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

## மகாதேவனின் மாமனார் காலமானார்

*உடப்பு குறூப் நிருபர்*

உடப்பு குறூப் நிருபர் க.மகாதேவனின் மாமனார் ஜோன் பர்னாந்து வயது76 (ஜோன் சிங்கம்) நேற்று செவ்வாய்க்கிழமை 02 ஆம் திகதி காலமானார்.



சில மாதங்களாக சுகவீனமுற்ற நிலையில் நேற்று தனது இல்லத்தில் காலமானதாக அறிவிக்கப்பட்டுள்ளது. உடப்பு சின்னக்கொலனி பகுதியில் வசிக்கும் இவர் கதிரவேல் மல்லிகாதேவியின் அன்புக் கணவரும் ஆவார். இவருக்கு இரண்டு ஆண் பிள்ளைகளும், மூன்று பெண் பிள்ளைகளும் உள்ளனர். அன்னாரின் பூதவுடல் நல்லடக்கம் குறித்து பின்னர் அறிவிக்கப்படும்.

# வங்கித் தொழில், நிதிச் சேவை குழுவின் தலைவராக காமினி லொக்குகே

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத்தொடருக்கான வங்கித் தொழில் மற்றும் நிதிச் சேவைகள் பற்றிய குழுவின் தலைவராக, பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ காமினி லொக்குகே ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார். ஒன்பதாவது பாராளுமன்றத்தின் ஐந்தாவது கூட்டத் தொடருக்கான இக்குழுவின் முதலாவது கூட்டம் (01) நடைபெற்றபோதே அவர் தெரிவுசெய்யப்பட்டார்.

பாராளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகேவின் பெயரை பாராளுமன்ற உறுப்பினர் கோகிலா குணவர்தன பிரேரித்ததுடன், பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ உதய கம்மன்பில அதனை வழிமொழிந்தார்.

நான்காவது கூட்டத்தொடரில் இந்தக் குழுவின் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே பதவி வகித்தார். இங்கு உரையாற்றிய அவர் குறிப்பிடுகையில், முன்னைய கூட்டத்தொடர்பில் இந்தக் குழுவின் செயற்பாடுகளை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு ஆதரவளித்த அனைத்து உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவிப்பதாகவும் எதிர்காலத்திலும் அவர்களது ஆதரவை பெற்று குழுவின் செயற்பாடுகளை வெற்றிகரமாக மேற்கொள்ள எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

அத்துடன், கூட்டுறவுத் துறை தொடர்பில் இந்தக் குழுவின் ஊடாக அதிக கவனம் செலுத்தப்பட்டதுடன், கூட்டுறவு நிதித் துறையில் காணப்படும் நெருக்கடிகளை நிவர்த்தி செய்து அத் துறையின் முன்னேற்றத்துக்குத் தேவையான பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையை எதிர்வரும் காலத்தில் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல், பாராளுமன்ற உறுப்பினர்களான சமல் ராஜபக்ஷ, அனுர பிரியதர்ஷன யாப்பா, பி.வை.ஜி. ரத்னசேக்கர, சம்பத் அத்துகோரல, கருணாதாச கொடிதுவக்கு மற்றும் யதாமினி குணவர்த்தன ஆகியோர் கலந்துகொண்டனர்.

# யாழ். புறநகர் பகுதியில் வாள்வெட்டு அடிதடி; 22 பேர் ஆஸ்பத்திரியில் அனுமதி

*(யாழ்.விசேட நிருபர்)*

யாழ்ப்பாணம் புறநகர் பகுதியில் வன்முறை கும்பல்களுக்கிடையில் இடம்பெற்ற வாள்வெட்டு மற்றும் அடிதடி மோதலில், 22 பேர் காயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

தாக்குதல்களுக்கிலக்காகி காயங்களுடன் திடீரென 22 பேர் வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவுக்கு சில மணி நேரங்களுக்குள் அனுமதிக்கப்பட்டதால், வைத்தியர்கள், தாதியர்கள், சிற்றூழியர்கள் பெரும் சிரமத்தையும், நெருக்கடிகளையும எதிர்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது. அதேவேளை சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டவர்கள் , அவர்களுடன் உதவிக்கு வந்தவர்கள் எனப் பலரும் வைத்தியசாலையினுள் வந்ததால் அங்கும் சற்று மோதல் போக்கு காணப்பட்டதுடன் , மோதலில் ஈடுபடவும் சிலர் முயன்றனர்.

சம்பவம் தொடர்பில் யாழ். பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதால், பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# விசாயின்றி நாட்டுக்கு வரும் அனுமதி நீடிப்பு

இந்தியா, சீனா மற்றும் ரஷ்யா உள்ளிட்ட ஏழு நாடுகளைச் சேர்ந்த சுற்றுலா பயணிகள் விசா கட்டணமின்றி நாட்டுக்குள் நுழைய அனுமதிக்கப்படுவர். இதற்கான முன்னோடித் திட்டம் 2024 ஏப்ரல் 30 வரை நீடிக்கப்பட்டுள்ளதாக சுற்றுலாத் துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இந்த முன்னோடித் திட்டத்தின் இறுதி முடிவு அடுத்த சில வாரங்களில் எடுக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

கடந்த வருடம் அக்டோபரில், இந்தியா, சீனா, ரஷ்யா, மலேசியா, ஜப்பான், இந்தோனேசியா மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து வருபவர்கள் மார்ச் 31 வரை விசா கட்டணமி ன்றி, நாட்டுக்குள் அனுமதிக்கப்பட்டனர்.

இந்த முன்னோடி திட்டத்துக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ் மொழிபெயர்ப்பு

**எக்ஸ்போலங்கா ஹோல்டிங்ஸ் பி எல் சி (PB 744)**
**பொது மக்களுக்கான அறிவிப்பு**

2001 டிசம்பர் 18ஆந் திகதிய அதிவிஷேட வர்த்தமானி இல. 1215/2 இல் வெளியிடப்பட்ட இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு விதிகளின் 5 (2) (ய) ஆம் விதியில் வரையறுக்கப்பட்டுள்ள அடிப்படையில், 2024 மார்ச் 27ஆந் திகதி நடைபெற்ற அதிவிஷேட பொதுக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் விஷேட தீர்மானங்களாக நிறுவனத்தின் பங்குதாரர்களால் முறையாக அங்கீகரிக்கப்பட்டன என்பதை இத்தால் பொது மக்களுக்கு அறியத்தருகின்றோம்:

1.பட்டியலிலிருந்து நீக்குவதற்காக நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும் விண்ணப்பத்தை 2001 டிசம்பர் 18ஆந் திகதிய அதிவிஷேட வர்த்தமானி இல. 1215/2 இல் வெளியிடப்பட்ட இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு விதிகளின் 5 ஆம் விதியின் கீழ் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு அங்கீகரித்தல் வேண்டும் என்ற நியதியின் அடிப்படையில், எக்ஸ்போலங்கா ஹோல்டிங்ஸ் பி எல் சி யின் ("நிறுவனம்") சாதாரண பங்குகள் கொழும்பு பங்குச் சந்தையின் உத்தியோகபூர்வ பட்டியலிலிருந்து நீக்கப்படுவதுன், பட்டியலிலிருந்து நீக்கப்பட்டதைக் கருத்தில் கொண்டு தமது பங்குகளை விற்பனை செய்ய விரும்பும் பங்குதாரர் ஒருவரின் பங்குகள், ஒரு பங்கிற்கு நூற்று எண்பத்தைந்து ரூபாய் (ரூபா. 185.00) என்ற விலையின் அடிப்படையில் எஸ்.ஜி. ஹோல்டிங்ஸ் குளோபல் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தால் கொள்வனவு செய்யப்படும்.

2.கொழும்பு பங்குச் சந்தையின் உத்தியோகபூர்வ பட்டியலிலிருந்து தனது பங்குகளை நீக்கியவுடன், நிறுவனம் பொதுப் பட்டியலிடப்பட்ட நிறுவனம் என்ற நிலையிலிருந்து பொது நிறுவனம் என்ற நிலைக்கு மாற்றப்பட்டதாகக் கருதப்படுவதால், 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் விதிகளுக்கு அமை

3.மவாக நிறுவனத்தின் பெயர் "எக்ஸ்போலங்கா ஹோல்டிங்ஸ் பி எல் சி" என்பதிலிருந்து "எக்ஸ்போலங்கா ஹோல்டிங்ஸ் லிமிடெட்" என மாற்றியமைக்கப்படும்.

மேற்படி ஆவணம், எனக்கு கையளிக்கப்பட்ட 'எக்ஸ்போலங்கா ஹோல்டிங்ஸ் பி எல் சி (PB 744) - பொது மக்களுக்கான அறிவிப்பு' என்ற ஆங்கில மொழியிலான ஆவணத்தின் உண்மையான தமிழ் மொழிபெயர்ப்பு என அத்தாட்சிப்படுத்துகின்றேன்.



தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சோபகிருது வருடம் பங்குனி மாதம் 21ஆம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ரமழான் பிறை 23

### குறள் தரும் சிந்தனை



ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து

*மற்றவரை அறநெறியில் ஒழுகச்செய்து தானும் அறம் தவறாத இல்வாழ்க்கை, தவம் செய்வாரைவிட மிகச்சிறந்த வல்லமை உடைய வாழ்க்கையாகும்.*

# மக்களின் நலன்களை முன்னிட்டு சமையல் எரிவாயு விலைக்குறைப்பு

சமையல் எரிவாயு விலை நேற்று நள்ளிரவு முதல் குறைக்கப்பட்டுள்ளது. சமையல் எரிவாயு நிறுவனங்கள் இந்த விலைக்குறைப்புக்கான அறிவிப்பை விடுத்துள்ளன.

இந்த விலைக்குறைப்பின்படி 12.5 கிலோ கிராம் எடை கொண்ட எரிவாயு சிலிண்டர் ஒன்றின் விலை லிற்றோ நிறுவனத்தினால் ரூ. 135.00 இனாலும், லாப் கேஸ் நிறுவனத்தினால் ரூ. 625 இனாலும் குறைக்கப்பட்டுள்ளது. இந்த விலைக்குறைப்பைத் தொடர்ந்து இந்த இரண்டு நிறுவனங்களதும் 12.5 கிலோ கிராம் எடை கொண்ட ஒரு சமையல் எரிவாயு சிலிண்டர் ஒன்றின் விலை ரூ. 4115.00 ஆக இருக்கும். எரிவாயு சிலிண்டருகளுக்கான இவ்விலைக்குறைப்பை பாவனையாளர்கள் பெரிதும் வரவேற்றுள்ளனர்.

உலக சந்தையில் சமையல் எரிவாயு விலையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியின் பிரதிபலன்களை நாட்டு மக்களுக்கும் பெற்றுக்கொடுக்கும் வகையிலேயே இந்நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருக்கிறது.

என்றாலும் அற்ப அரசியல் இலாபம் தேடும் முயற்சியில் ஈடுபட்டுள்ள சிலர், 'இது தேர்தலை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை' என்றுள்ளனர். இது மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவது போன்ற கதையாகும்.

உலக சந்தையில் எரிவாயுவின் விலையில் வீழச்சி ஏற்பட்டிருக்கிறது. அதன் பிரதிபலன்களை மக்களுக்கு பெற்றுக்கொடுக்க இவ்விலைக் குறைப்பின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

அதேநேரம் சமையல் எரிவாயு சிலிண்டர்களுக்கு மாத்திரம் விலை குறைக்கப்பட்டவில்லை. ஏற்கனவே பல பொருட்களுக்கும் விலைகள் அவ்வப்போது குறைக்கப்பட்டுள்ளன.

2022 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் இந்நாடு கடும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளானது. அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட அனைத்துப் பொருட்களதும் விலைகள் பெரிதும் அதிகரித்தன. எரிபொருள், எரிவாயு என்பவற்றைப் பெற்றுக் கொள்வதற்காக நாட்கணக்கில் நீண்ட வரிசைகளில் காத்திருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு பாவனையாளர்கள் உள்ளாகினர்.

அந்த நெருக்கடியிலிருந்து மக்களுக்கு நிவாரணங்களையோ சலுகைகளையோ பெற்றுக்கொடுக்க முடியாத நிலையில் அன்றைய ஆட்சியாளர்களே பதவி விலகினர்.

அந்த இக்கட்டான சூழலில் நாட்டின் தலைமையை ஏற்க எவரும் முன்வராத சூழ்நிலை ஏற்பட்டது. அந்த சூழலில் நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டின் தலைமையை ஏற்றார். அதனைத் தொடர்ந்து பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டையும் மக்களையும் மீட்டெப்பதற்கான வேலைத்திட்டங்களை அவர் முன்னெடுத்தார்.

அந்த வேலைத்திட்டங்களின் பயனாக குறுகிய காலத்தில் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாடு மீட்சி பெறத் தொடங்கியது. குறிப்பாக எரிபொருள், எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களுக்கு நாட்கணக்கில் காத்திருக்கும் நிலைமை முடிவுக்கு வந்ததோடு, பொதுப்போக்குவரத்து சேவையும் வழமைக்குத் திரும்பியது. அதன் ஊடாக நாட்டு மக்கள் மத்தியில் புதிய நம்பிக்கையும் எதிர்பார்ப்புக்களும் ஏற்பட்டன.

அந்த பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களின் ஊடாக நாடு கட்டம் கட்டமாக மீட்சி பெற்று வந்ததோடு மறுமலர்ச்சிப் பாதையிலும் பிரவேசித்து இருக்கிறது.

இதன் பயனாக பொருளாதார நெருக்கடி காலப் பகுதியில் நாட்டில் நிலவிய அசௌகரியங்களும் நெருக்கடிகளும் பெரும்பாலும் நீங்கியுள்ளன. ஜனாதிபதி நாட்டின் தலைமையை ஏற்றதும் கட்சி நலன்களுக்கு அப்பால் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுக்கும் நோக்கில் வேலைத்திட்டங்களை முன்னெடுத்தார். அதற்கேற்ப பொருளாதார ரீதியில் நாடு அடைந்து கொள்ளும் பிரதிபலன்களாக விலைக்குறைப்புகள், மற்றும் நிவாரணங்கள், சலுகைகள் ஊடாக மக்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டு வருகின்றன. அந்த அடிப்படையில்தான் தற்போது சமையல் எரிவாயுவுக்கும் விலை குறைப்பு செய்யப்பட்டிருக்கிறது.

நாடு பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகி இருந்த போது அதன் பாதிப்புக்கள் மற்றும் தாக்கங்களின் போது பெரும்பாலான மக்கள் பொறுமை காத்ததோடு நெருக்கடிகளையும் சகித்துக் கொண்டார்கள்.

தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் பொருளாதார மேம்பாட்டு திட்டங்கள் நம்பிக்கை அளிக்கும் வகையில் முன்னேற்றப்பாதையில் பயணித்துக் கொண்டிருக்கின்றன. அதனால் நாடு அடைந்து கொள்கின்ற பொருளாதாரப் பிரதிபலன்கள் அவ்வப்போது மக்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டு வருகின்றன. பொறுப்பு மிக்க அரசொன்றின் பணியே இது.

பொருளாதார நெருக்கடியின் போது அதன் தாக்கங்கள் மற்றும் பாதிப்புக்களின் முன்பாக பொறுமை காத்த மக்களுக்கு பொருளாதாரம் முன்னேற்றப் பாதையில் பயணிக்கும் போது அதன் பிரதிபலன்களைப் பெற்றுக்கொடுப்பதில் எவ்வித தவறும் இல்லை. அதனை தவறான கண்கொண்டு நோக்கவும் முடியாது. அதுவே மக்களின் கருத்தாகும்.

editor.tkn@lakehouse.lk

# தொற்றாநோய்களிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கு உதவும் சைக்கிள் சவாரி

போக்குவரத்து என்பது மனித வாழ்வின் அன்றாட செயற்பாட்டுக்கான அத்தியாவசிய தேவையாகும். நாட்டின் தற்போதைய எரிபொருள் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக மக்கள் வேலைகளுக்கு செல்லவும் ஏனைய அன்றாட செயற்பாடுகளுக்கும் சைக்கிள் சவாரி அல்லது நடை போன்ற மாற்றுவழிகளில் கவனம் செலுத்தத் தொடங்கி உள்ளனர். இதைக் கருத்திற் கொண்டு சுகாதார அமைச்சு இலங்கை விளையாட்டு மருத்துவ சங்கத்தின் ஒத்துழைப்போடு சைக்கிள் சவாரி அல்லது நடையின் போது பொதுமக்கள் முறையான நுட்பங்களைப் பின்பற்றி அவற்றின் மூலமான சிறந்த சுகாதார ஆரோக்கிய பலன்களைப் பெற்று சுகாதார ரீதியான ஆபத்துக்களையும் தவிர்த்துக் கொள்ளும் வகையில் அறிவூட்டல் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளது.

அலுவலகங்களுக்கு சைக்கிள் மூலம் அல்லது கால்நடையாகச் செல்ல சிலர் எண்ணியிருக்கலாம். அவர்கள் ஒரு இடைவெளியின் பின் சைக்கிள் சவாரி செய்பவராக இருக்கலாம். அப்படியாயின் பின்வரும் காரணிகளில் அவர்கள் அவதானம் செலுத்த வேண்டும்.


பின்வரும் பிரச்சினைகள் இருப்பின் சைக்கிள் ஓட்டத் தொடங்குமுன்னர் மருத்துவ ஆலோசனைகளைப் பெற வேண்டும்:

இருதய நோய் அல்லது நாள்பட்ட நோய்கள் அல்லது நாள்பட்ட நோய்களுக்காக நீண்டகாலமாக மருந்துகள் எடுப்பவர்கள். மார்புவலி, சுவாசக் கோளாறு, உடற் செயற்பாடுகளின் பின்னரான ஓய்வின்போது மயக்கம் அல்லது சுயநினைவு இழப்பு ஏற்படுபவர்கள். எலும்பு, மூட்டு அல்லது தசைவலி என்பன ஏற்பட்டு அவை சைக்கிள் ஓட்டத்தின் பின் மற்றும் நீண்ட தூர நடையின் பின் மோசமடைந்தால் அல்லது சைக்கிள் ஓட்டத் தொடங்கிய பின் இந்நிலை ஏற்பட்டால் ஆலோசனை பெற வேண்டும்.

காய்ச்சல், தடிமல், அல்லது வயிற்றோட்டம் இருப்பின் அவை குணமடையும் வரை சைக்கிள் ஓடுவதை தவிர்ப்பதே சிறந்தது.

40 வயதுக்கு மேற்பட்டவராக இருந்து குறிப்பிட்டதோர் காலப்பகுதிக்கு எவ்விதமான தீவிரமான உடற்பயிற்சியும் செய்யாதவர்கள். கர்ப்பமுற்றிருந்தால்அல்லது மேற்குறிப்பிட்ட ஏதாவது ஒரு நிலையில் இருந்தால் சைக்கிள் ஓட்டத் தொடங்கு முன் மருத்துவ ஆலோசனையைப் பெற்றுக் கொள்ள வேண்டும். மேலும் மருத்துவ கண்காணிப்பு இன்றி உடற்பயிற்சி செய்யக்கூடாது என முன்னர் மருத்துவ ஆலோசனை வழங்கப்பட்டிருந்தால் மேலதிக மருத்துவ ஆலோசனையையும் பெற்றுக்கொள்ள வேண்டும். உடல் செயற்பாடு தயார் நிலை கேள்விக் கொத்து ஒன்றுக்கு இணையவழி மூலம் (Physical Activity Readiness Questionnaire (PARQ) online) பதில் அளித்து சுய மதிப்பீடு ஒன்றை செய்து கொள்ளவும் முடியும். இதன் மூலம் ஒரு வைத்தியரின் சிபார்சுகள் தேவையா என சுயமாக முடிவு செய்து கொள்ளலாம்.





ஒருவர் சைக்கிள் ஓட்டுகின்ற போது எவ்வாறு அதில் நிலை கொள்ள வேண்டும் என்பதில் நாம் உங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகின்றோம். சரியான நிலையில் அமர்ந்து சைக்கிளை ஓட்டுவதற்கு கீழே உள்ள படத்தில் காட்டப்பட்டுள்வாறு சைக்கிள் ஆசனத்தின் உயரத்தையும், சைக்கிள் கைப்பிடியின் உயரத்தையும் அமைத்துக் கொள்ள வேண்டும்.

சைக்கிள் கைப்பிடியின் உயரம் சைக்கிளின் ஆசனத்தின் மட்டத்தோடு சமமாக இருக்க வேண்டும். அல்லது 10 சென்ரி மீட்டருக்கு மேல் உயரக் கூடாது. முழங்கை மூட்டு 165 பாகை வளைவில் இருக்க வேண்டும்.

கால் மிதிப்பு முன்னாலும் தரைக்கு சமாந்தரமாகவும் இருக்கின்ற போது முழங்கால் மூட்டின் முன்பகுதி கால் மிதிப்பின் அதே செங்குத்து மட்டத்தில் இருக்க வேண்டும்.

சைக்கிள் கைப்பிடியின் உயரம் சைக்கிளின் ஆசனத்தின் மட்டத்தோடு சமமாக இருக்க வேண்டும். அல்லது 10 சென்ரி மீட்டருக்கு மேல் உயரக் கூடாது.

இடுப்பு மூட்டு, முழங்கால் மூட்டு மற்றும் கணுக்கால் மூட்டு என்பன சைக்கிளை ஓட்டும் போது சமமான செங்குத்து மட்டத்தில் இருக்க வேண்டும்.

முன்காலைப் பாவித்து சைக்கிளை மிதிக்க வேண்டும். அது சைக்கிள் ஓட்டுபவரின் பாதத்தின் முன் பகுதியாகும்.

சைக்கிள் ஓட்டமும் நடையும் பாதுகாப்பான உடல்பயிற்சி முறைகளாகக் கருதப்படுகின்றன. சைக்கிளை சரியான முறையில் பயன்படுத்துவதும் முறையான நடையும் தொற்றாநோய்கள் பலவற்றைக் குறைக்கக் கூடியவை. ஏற்கனவே இருக்கின்ற பல தொற்றாநோய்களை கட்டுப்படுத்தக் கூடியவை. இவை உடல் நல ஆரோக்கியத்தையும், உள நல ஆரோக்கியத்தையும் மேம்படுத்தக் கூடியவை.

வீதிவிபத்துக்களையும் அதனால் ஏற்படும் காயங்களையும் தவிர்க்க பின்வரும் விடயங்களில் அவதானம் செலுத்தவும்.

சைக்கிளை பரிசோதித்துக் கொள்ளுங்கள். பிரேக் சரியாக வேலை செய்கின்றது என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். டயர்கள் சரியாகப் பொருத்தப்பட்டுள்ளனவா, செயினுக்கு போதிய எண்ணெய் இடப்பட்டுள்ளதா என்பதையும் பரிசோதித்துக் கொள்ளுங்கள். இரவு நேரத்தில் செல்வதாயின் பின்பகுதியில் ஒரு சிவப்பு நிற விளக்கையும், முன் பகுதியில் ஒரு வெள்ளை நிற விளக்கையும் பயன்படுத்துங்கள்.

உங்கள் தலைக்கவசத்தை முறையாக அணிந்து கொள்ள மறவாதீர்கள். வெறும் வயிற்றோடு சைக்கிள் ஓட்டாதீர்கள். கையடக்க தொலைபேசி போன்ற கருவிகளுடனான தொடர்பை தவிர்த்துக் கொள்ளுங்கள். சைக்கிள் ஓட்டத்தின் பின் சிறிய ஆரோக்கியமான உணவை உண்ணுங்கள். மேற்கூறிய விடயங்களைக் கவனத்தில் கொள்வதன் மூலம் உங்களதும் மற்றவர்களினதும் பாதுகாப்பை உறுதி செய்து கொள்ளலாம்.

டொக்டர் இர்சாத் ஜப்பார்...
(மருத்துவ ஆலோசகர்)
விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மருத்துவம், களுபோவில போதனா வைத்தியசாலை

# சிட்னி நகரில் விபுலாநந்த அடிகளாரின் உருவச்சிலை திறப்புவிழாவில் பன்னாட்டு அறிஞர்கள் பங்கேற்பு

உலகம் போற்றும் அறிஞராக இன்றும் போற்றப்படுகின்ற முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் உருவச்சிலை அவுஸ்திரேலிய மண்ணில் சிட்னி மாநகரில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு கோலாகலமாக திறந்து வைக்கப்பட்டது.

உலகில் முதல் தடவையாக இலங்கைக்கு வெளியே நிறுவப்படும் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாருக்கான முதலாவது சிலை திறப்புவிழா இது என்பதால் உலக வரலாற்றில் இந்நிகழ்வானது முக்கிய இடத்தைப் பிடிக்கின்றது.

இலங்கைக்கு வெளியில் முதல்முறையாக இடம்பெற்ற இவ்வாறானதொரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வில் உலகின் பன்னாட்டு அறிஞர்கள் பலரும் பங்கேற்றனர்.





சிட்னி துர்க்கை அம்மன் ஆலய மண்டபத்தில் சிட்னி உதயசூரியன் மாணவர் உதவி மையத்தின் ஸ்தாபகரும், அவுஸ்திரேலியா காரைதீவு மக்கள் ஒன்றியத்தின்(AusKar) போஷகரும், சமூகசெயற்பாட்டாளருமான நாகமணி குணரெட்ணம் அவர்களுடைய முழுமுயற்சியின் பேரில் சுவாமி விபுலானந்த அடிகளார் உருவச்சிலை நிறுவப்பட்டுள்ளது.

இதனை சுபநேரத்தில் சிலைநிறுவுனர் குணரெத்தினம்_ மனோன்மணி தம்பதியினர் மங்கலபேரிகைகள் முழங்க, திரை நீக்கம் செய்து வைத்தனர். அதனையடுத்து சுவாமிகளின் உருவச்சிலைக்கு மாலை சூட்டி நெற்றித் திலகமிடப்பட்டது.

திரைநீக்க நிகழ்வில் பல்வேறு நாடுகளில் இருந்து வருகை தந்திருந்த பேராசிரியர்கள், தமிழ் அறிஞர்கள், கல்வியலாளர்கள் பங்கேற்றனர். சிட்னி மாநகரில் இடம்பெற்ற இவ்வைபவம் உலகின் பல நாடுகளிலுள்ள தமிழ் உணர்வாளர்களால் சமகாலத்தில் நேரலை வாயிலாக அவதானிக்கப்பட்டது.

இந்த நிகழ்வின் சிறப்பு அதிதிகளாக அண்ணாமலை பல்கலைக்கழக கனடா வளாகத்தின் தலைவர் காரைதீவைச் சேர்ந்த பேராசிரியர் பாலசுந்தரம் இளையதம்பி, மலேசியா தமிழ் பல்கலைக்கழக பேராசிரியர் மன்னர் மன்னன், இந்திய முனைவர் மு. இளங்கோவன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்த நிகழ்வில் 'சிட்னியில் அடிகளார் படிவமலர்' என்ற சிறப்பு மலர் வெளியிட்டு வைக்கப்பட்டது.

முதற் பிரதியை சிலைநிறுவுனரும் நூலாசிரியருமான நாகமணி குணரெட்ணம், பேராசிரியர் பாலசுந்தரம் அவர்களுக்கு வழங்கி வைத்தார்.

அழைக்கப்பட்ட பேராளர்களின் பேருரைகள், சிறப்புரைகள் மற்றும் தொகுப்புரைகள் என்று நடைபெற்ற நிகழ்வு களைகட்டியிருந்தது.

சிலை நிறுவுனர் உதயசூரியன் நாகமணி குணரெட்ணம் தம்பதியினர் பொன்னாடை போர்த்தி பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

மேலும், வாழ்நாள் சாதனையாளர் விருது 23 பேருக்கும், சிறப்பு விருது 14 பேருக்கும் வழங்கப்பட்டன.

மாலை 5.00 மணியளவில் தொடங்கிய விழா இரவு 10.30 வரை பல கலைநிகழ்ச்சிகளுடன் நடைபெற்றது.

வி.ரி.சகாதேவராஜா...
(காரைதீவு குறூப் நிருபர்)

# ஐரோப்பாவிலிருந்து காசாவுக்கு நிவாரணப் பொருட்களை கொண்டு செல்வதற்கு முதன்முறையாக கிடைத்த அனுமதி

கொடும் போரால் பாதிக்கப்பட்டு, பஞ்சத்தில் அவதியுறுகின்ற காசா நகருக்கு உணவுப் பொருட்கள், குடிநீர், மருந்துப் பொருட்கள் ஆகியவை சைப்ரஸ் நாட்டின் துறைமுகத்திலிருந்து கடல்வழியாக தற்போது அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

காசாவில் கடந்த ஒக்டோபர் ஏழாம் திகதி போர் வெடித்தது தொடக்கம் அந்தப் பகுதியை வெளியுலகில் இருந்து இஸ்ரேல் முடக்கி இருக்கும் நிலையிலேயே, அங்கு நேரடி உதவி விநியோகத்திற்கு தொண்டு நிறுவனங்கள் முயன்றுள்ளன.

இஸ்ரேல் இராணுவத்தினரின் தொடர் தாக்குதலால் நிலைகுலைந்து போயுள்ள பாலஸ்தீன மக்கள் கடும் நெருக்கடியில் வாழ்ந்து வருகின்றனர். உணவு, குடிநீர், மருந்துப் பொருட்கள் போன்ற அத்தியாவசியமான பொருட்கள் எதுவுமின்றியும், மின்சாரம் இல்லாமலும் பெரும் சிரமத்திற்குள்ளாகியுள்ளனர்.

பட்டினிச்சாவை எதிர்நோக்கியுள்ள அந்த மக்களுக்கு தற்போது தரைவழியாகவும், வான் வழியாகவும் அளிக்கப்பட்டு வரும் நிவாரணப் பொருள்கள் போதுமானதாக இல்லை.

இதனாலேயே சைப்ரஸில் இருந்து 500 தொன் உதவிகள் திரட்டப்பட்டிருப்பதாகவும், அவையும் காசாவுக்கு அனுப்பப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பலஸ்தீனம் மீதான போரில், பட்டினியை ஆயுதமாக இஸ்ரேல் பயன்படுத்துவதாக ஐ.நா குற்றம் சாட்டியுள்ளது.

மேலும், இந்தப் போக்கை உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் ஐ.நா கேட்டுக் கொண்டிருக்கிறது.

தொடரும் இஸ்ரேல்ஹமாஸ் போரை நிறுத்துவது குறித்து பல்வேறு தரப்பினர் வலியுறுத்தியும் கூட இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு, இதற்குத் தயாராக இல்லை. காசாவில் ஹமாஸ் படையை ஒழிக்கும் வரை போர் தொடரும் என்று அவர் எச்சரித்துள்ளார். இவரது கருத்துக்கு, அமெரிக்கா மற்றும் பல்வேறு தரப்புகளும் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

இஸ்ரேல் நாட்டு மக்களும் இக்கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இருந்த போதிலும் இஸ்ரேலுக்கு தற்போதுவரை அமெரிக்கா ஆயுதங்களை விநியோகம் செய்து வருகிறது.

யுத்தத்தினால் 32,000 இற்கும் அதிகமான பாலஸ்தீன மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இதில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் பெண்கள் மற்றும் குழந்தைகள் என்பது குறிப்பிடத்தக்கது. ஏவுகணைகளும், பீரங்கி குண்டுகளும் தாக்கி பலர் கொல்லப்பட்டாலும், போர் ஏற்படுத்தியுள்ள பசி, பட்டினியாலும் உயிரிழப்புகள் அதிகரிக்கின்றன.

தற்போது சர்வதேச நாடுகள் அனுப்பிய உணவு, மருந்துப் பொருட்கள் எகிப்தின் ரஃபா (Rafa) எல்லையில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. இந்நிலையில், போரில் பட்டினியை இஸ்ரேல் ஆயுதமாக பயன்படுத்துவதாக ஐநா குற்றம் சாட்டியுள்ளது. ஐ.நா மனித உரிமை அலுவலக செய்தித் தொடர்பாளர் ஜெரமி இக்குற்றச்சாட்டுகளை வெளிப்படுத்தியுள்ளார்.

**பட்டினியை ஆயுதமாகப் பயன்படுத்த வேண்டாமென இஸ்ரேலைக் கோருகின்றது ஐ.நா!**





கடந்த ஆறு மாதங்களாக இடம்பெற்று வரும் போரில், காசா மக்களுக்கு உணவு, உடை, இருப்பிடம், சுத்தமான குடிநீர், மருந்துப் பொருட்கள் ஆகியவை கிடைப்பது சிரமமாகியுள்ளது.

இந்த மனிதநேயமற்ற விவகாரம் குறித்து விசாரித்து வந்த சர்வதேச நீதிமன்றம், காசாவுக்கு மனிதாபிமான உதவிகள் கிடைப்பதற்கு இஸ்ரேல் குறுக்கே நிற்கக்கூடாது என்று உத்தரவிட்டிருந்தது. ஆனால், இந்த உத்தரவை இஸ்ரேல் வெளிப்படையாக கடைப்பிடிக்க மறுத்துவிட்டது. உணவு மருந்துகளை ஏற்றி வரும் வாகனங்கள் நாட்கணக்கில் எல்லையில் நிறுத்தி வைக்கப்படுகின்றன. எனவே உணவுகள் வீணாக்கப்படுகின்றன.

காசாவுக்கு உதவிகளை விநியோகிப்பதற்கான புதிய கடல் பாதை ஒன்றை ஏற்படுத்தும் முன்னோடித் திட்டமாக, சைப்ரஸ் துறைமுகத்தில் இருந்து இருநூறு தொன் உணவுப் பொருட்களை ஏற்றிய கப்பல் ஒன்று மார்ச் 12 காசாவை நோக்கி புறப்பட்டது. காசாவின் வட மேற்காக 320 கிலோ மீற்றர் தொலைவிலேயே சைப்ரஸ் நாடு உள்ளது.

இடம்பெயர்ந்த மக்களுக்கு மகிழ்ச்சியான ரமழானாக இம்முறை அமையவில்லை. மக்கள் குளிருக்கு மத்தியில் கூடாரங்களில் இருக்கிறார்கள்.

காசாவில் துறைமுகக் கட்டமைப்பு ஒன்று இல்லாத போதும், அழிக்கப்பட்ட கட்டடங்களின் இடிபாடுகளை பயன்படுத்தி இறங்குதுறை ஒன்றை உருவாக்கவிருப்பதாக தொண்டு நிறுவனங்கள் குறிப்பிட்டுள்ளன. தற்போது காசா கடலோரப் பகுதியில் தற்காலிக துறைமுகம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

இப்போது காசா மக்களுக்கு உணவு மற்றும் மருந்து பொருட்களைச் சேகரித்த ஸ்பெயின் நாட்டின் 'ஓப்பன் ஆர்ம்ஸ்' (Open Arms) என்ற அமைப்புக்குச் சொந்தமான கப்பல் காசாவுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

'ஓபன் ஆர்ம்' என்ற ஸ்பெயின் தொண்டு நிறுவனத்தின் இந்தக் கப்பல் அரிசி, மாவு மற்றும் உணவு பொருட்களை ஏற்றி சைப்ரஸின் லர்னாகா துறைமுகத்தில் இருந்து பயணத்தை ஆரம்பித்தது.

கடந்த 2005 ஆம் ஆண்டுக்குப் பிறகு ஐரோப்பாவிலிருந்து காசாவுக்கு நிவாரணப் பொருள்களைக் கொண்டு செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது இதுவே முதல்முறையாகும். இந்தத் திட்டத்திற்கு ஐக்கிய அரபு இராச்சியமே அதிக நிதி உதவி அளித்திருப்பதோடு, ஸ்பெயின் தொண்டு நிறுவனம் கப்பலை வழங்கியுள்ளது.



ஐங்கரன் விக்கினேஸ்வரா...




# மகத்தான வெற்றியுடன் 2023 ஆம் ஆண்டை நிறைவு செய்துள்ள மக்கள் வங்கி





வங்கியின் தனித்த வருமானங்களில் சுமார் 50 வீதம் கடந்த காலாண்டில் ஈட்டப்பட்டுள்ளமை வலுவான வளர்ச்சி வேகத்தைப் பிரதிபலிக்கின்றது. கணப்படுகின்றது. 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான பெறுபேறுகளை மக்கள் வங்கி இன்று அறிவித்துள்ளதுடன், ரூபா 96.8 பில்லியன் மற்றும் ரூபா 19.3 பில்லியன் தொகைகளை முறையே மொத்த திரட்டிய செயல்பாட்டு வருமானம் மற்றும் வரிக்கும் முந்தைய இலாபமாக பதிவு செய்துள்ளது.

2022 மற்றும் 2023 இன் ஆரம்பத்தில் காணப்பட்ட உயர் வட்டி வீத சூழ்நிலை காரணமாக கால வைப்பு நிதிக்கான உயர் வட்டிச் செலவுகள் மற்றும் நாட்டின் நன்மையைக் கருத்தில் கொண்டு வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட கணிசமான வட்டிச் சலுகைகள் ஆகியவற்றின் பிரதிபலிப்பாக தேறிய வட்டி வருமானமானது முந்தைய ஆண்டில் பதிவாக்கப்பட்ட ரூபா 91.0 பில்லியன் தொகையிலிருந்து வீழ்ச்சி கண்டு, இந்த ஆண்டில் ரூபா 67.8 பில்லியனாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனினும் இந்த ஆண்டின் கடைசி காலாண்டில் மேல்நோக்கிய வளர்ச்சி காணப்பட்டதுடன், தற்போதைய வட்டி வீத சூழலில் அதன் வட்டிச் செலவு தொடர்ந்தும் கட்டுப்படுத்தப்பட்டு வருகின்றது. திரட்டிய தேறிய கட்டணங்கள் மற்றும் தரகுப்பண வருமானம், 2022 ஆம் ஆண்டில் இடம்பெற்ற வழமைக்கு மாறான வருமானங்கள் நீங்கலாக, 11.0 வீத வளர்ச்சியைப் பிரதிபலித்து, ரூபா 13.9 பில்லியனாக பதிவாக்கப்பட்டுள்ளது.

பணவீக்கத்தினால் எழுந்த செலவு அழுத்தங்களுக்கு மத்தியிலும், மொத்த திரட்டிய செயல்பாட்டு செலவுகள் 5.5 வீதத்தினால் மாத்திரம் அதிகரித்து, ரூபா 62.2 பில்லியனை எட்டியுள்ளதுடன் (2022 இல் ரூபா 59.0 பில்லியன்), ஏனைய வங்கிகளுடன் ஒப்பிடுகையில், கடுமையான செலவுக் கட்டுப்பாட்டு மற்றும் திறன் மேம்பாடுகளை பிரதிபலித்துள்ளது.

## இலங்கையில் IFRS 17 ஐ செயற்படுத்தும் முதலாவது பொதுக் காப்புறுதி வழங்குனராகும் HNB பொதுக் காப்புறுதி



இலங்கையில் பொது காப்புறுதித் தீர்வுகளை வழங்கும் முன்னணி நிறுவனமான HNB General Insurance, WTW இனை முக்கிய ஆலோசகராக செயற்படுத்துவதன் மூலம், WTW இன் ResQ Financial Reporter (FR) தீர்வை நடைமுறைப்படுத்திய முதல் உள்ளூர் பொதுக் காப்புறுதி நிறுவனம் எனும் பெயரை பெற்று, சர்வதேச நிதி அறிக்கை தரநிலை (IFRS) 17 இற்கு இணங்குவதற்கான தனது பயணத்தில் முக்கிய மைல்கல்லை அடைந்துள்ளது.

WTW இன் ResQFR ஆனது, IFRS17 நிதிநிலை அறிக்கைகளை தயாரிப்பதற்கான, திறனான, நெகிழ்வான கட்டமைப்பை வழங்குகின்ற ஒரு தீர்வாகும் என்பதுடன், வெளிப்படுத்துகை தேவைகளையும் அது ஆதரிக்கிறது. ஒரு முனையிலிருந்து மறு முனைக்கு அறிக்கை செயன்முறைகளை மேற்கொள்ளும்போது காப்புறுதி வழங்குனர்களுக்கு நேரத்தையும் வேலையையும் மீதப்படுத்துகிறது. IFRS 17 தரநிலையானது, 2026 ஆம் ஆண்டளவில் இலங்கையில் உள்ள காப்புறுதி நிறுவனங்களுக்கு கட்டாயமாக்கப்பட்டுள்ள ஒன்றாகும். இந்த புதிய தரநிலையானது, காப்புறுதிப் பொறுப்புகளை அளவிடுவதற்கும், நிதி அறிக்கையிடலில் அதிக வெளிப்படைத்தன்மை மற்றும் ஒப்பீட்டுத் தன்மையை ஏற்படுத்துவதற்கும் நியாயமான மதிப்பீட்டு அணுகுமுறையைப் பின்பற்றுவதற்கு காப்புறுதி வழங்குனர்களை கட்டாயப்படுத்துகிறது.

HNB பொதுக் காப்புறுதியின், ResQFR புத்தாக்க தழுவலானது, சர்வதேச ரீதியான சிறந்த நடைமுறைகளை முன்கூட்டியே ஏற்றுக்கொள்வதற்கான அதன் சிறந்த உறுதிப்பாட்டை எடுத்துக் காட்டுகிறது. இந்த தொகுதியானது, IFRS 17 இன் கீழ் அதன் நிதி செயற்றிறனைத் துல்லியமாக மதிப்பிடுவதற்கும் வெளிப்படுத்துவதற்கும் தேவையான கருவிகள் மற்றும் திறன்கள் மூலம் நிறுவனத்தை நிலைநிறுத்துகிறது.

HNB General Insurance Limited இன் பிரதம நிறைவேற்று அதிகாரி, சித்துமின ஜயசுந்தர இது குறித்து தெரிவிக்கையில், "WTW இன் ResQFR தீர்வை தழுவுவதில், இலங்கையில் உள்ள பொதுக் காப்புறுதி நிறுவனங்களுக்கிடையில் முன்னோடியாக இருப்பதானது, எமது அர்ப்பணிப்பிற்கு ஒரு சான்றாகும். இந்த மூலோபாய முதலீடானது, IFRS 17 இன் இணக்கத்திற்கான எமது உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துவதோடு, எமது நிதி வெளிப்பாடுகளில் துல்லியம் மற்றும் திறந்த தன்மையை உறுதி செய்கிறது. அதிகரித்து வரும் ஒழுங்குமுறைப்படுத்தல் பிரிவில் வழிநடத்துவதற்கும் எமது மூலோபாய நோக்கங்களை நிறைவேற்றுவதற்கும் ஒரு முக்கியமான சொத்தாக ResQFR இருக்கும் என நாம் உறுதியாக நம்புகிறோம்" என்றார்.

## செலிங்கோ லை:.ப் 18ஆவது ஆண்டாகவும் இலங்கையின் மிகவும் பிரபலமான ஆயுள் காப்புறுதி நிறுவனமாக முடிசூட்டப்பட்டது




செலிங்கோ லைஃப் 18ஆவது ஆண்டாக இலங்கையின் மிகவும் பிரபலமான ஆயுள் காப்புறுதி நிறுவனமாக முடிசூட்டப்பட்டது. 2024 மார்ச் 19 ஆம் திகதி இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவகத்தினால் (SLIM) நடாத்தப்பட்ட SLIM Kantar மக்கள் வருது வழங்கும் விழாவில் இந்த விருது வழங்கப்பட்டது.

இந்த விருது செலிங்கோ லைஃப் நிறுவனத்திற்கு அண்மையில் வழங்கப்பட்டது. செலிங்கோ லைஃப்பின் பிரபல்யத்தினை வலியுறுத்தும் இந்த விருது 2023 ஆம் ஆண்டிற்கான நிறுவனத்தின் நிதி பெறுபேறுகளின் அறிவிப்புடன் அதை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது. ஆயுள் காப்புறுதித் துறையில் சந்தை தலைவனாக தொடர்ந்து 20 ஆவது ஆண்டாக SLIM Kantar விருதினை பெற்று அதன் மேலாதிக்க தன்மையை உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த விருதானது நடுவர் குழுவிற்குப் பதிலாக நுகர்வோர் விருப்பங்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு கருத்துக்கணிப்பின் முடிவுகளால், தீர்மானிக்கப்படுவதால் இது மக்கள் உணர்வின் உண்மையான பிரதிபலிப்பாக அமைகிறது. ஆயுள் காப்புறுதி துறை விருதுகள் தொடங்கப்பட்டதில் இருந்து ஒவ்வொரு ஆண்டும் விருதை வென்றுள்ள இலங்கையின் ஒரே நிறுவனமாக செலிங்கோ லைஃப் தனித்து நிற்கிறது.

இந்த விருது குறித்து கருத்து தெரிவித்த செலிங்கோ லைஃப் நிறுவனத்தின் பிரதி பிரதான செயற்பாட்டு அதிகாரி திரு.சமிதா ஹேமச்சந்திர, 'வாடிக்கையாளர் உணர்வு மிக முக்கியமான அம்சமாகும் எந்தவொரு வணிகத்தின் வெற்றியிலும் மக்களின் விருப்பமாக இருக்க வேண்டும். தொடர்ந்து 18 வருடங்கள் அந்த சாதனையை தக்கவைத்துக் கொள்ளுவது ஒரு சாதனையாகும். எதிர்பார்ப்புகளை விட அதன் பொறுப்புகளை நிறைவேற்றியுள்ளது. எங்களின் இரண்டு தசாப்த சந்தை தலைமைத்துவம் என்பது எங்கள் வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது. அதில் செலிங்கோ லைஃப் மக்கள் விருதை வென்றுள்ளது என்பது மகிழ்ச்சியளிக்கிறது. இந்த விருது செலிங்கோ லைஃப் எதிர்பார்ப்புகளை விட அதிகமாக உள்ளது என்பதை உறுதிப்படுத்துகிறது. அதன் வாடிக்கையாளர்கள் மற்றும் சமூகம், முன்னெடுப்புக்களால் உத்வேகமாக செயற்படும் ஒரு நிறுவனமாக பார்க்கப்படுகிறது என்று குறிப்பிட்டார்.

## உள்ளடக்கத்தின் முக்கியத்துவம் தொடர்பான உரையாடல் முயற்சிக்கு லைவ்போய் ஆதரவு

எதிர்காலத் தலைமுறைகளின் அபிலாஷைகளையும், கனவுகளையும் வளமாக்கும் வகையில், செல்வாக்குச் செலுத்தும் பெண்களின் முக்கியத்துவம் தொடர்பில் முக்கியமான கலந்துரையாடலொன்றை முன்னெடுப்பதற்காக பல்வேறுபட்ட பின்னணிகளைக் கொண்ட, மதிப்பிற்குரிய குழுவினர் ஒன்றுகூடியுள்ளனர். இலங்கையில் பொதுத் துறையில் முன்னணி பெண் பிரபலங்களின் போற்றத்தக்க சாதனைகளை அங்கீகரித்து, கொண்டாட வேண்டிய



முக்கிய தேவையை வலியுறுத்தும் ஒரு மேடையாக இக்குழு கலந்துரையாடல் நிகழ்வு இடம்பெற்றது.

ஓய்வுபெற்ற பதில் பிரதம நீதியரசர் ஷிராணி திலகவர்த்தன,முன்னாள் வீடமைப்பு அமைச்சர் பேரியல் அஷ்ரப் ,பாலின மற்றும் குடும்ப சட்டச் செயற்பாட்டாளர், விரிவுரையாளர் சட்டத்தரணி ஜெருஷா குரொஸ்டிதம்பையா, மற்றும் சிறுவர் மற்றும் கட்டிளமைப் பருவ உளவியல் நிபுணர் கலாநிதி கிஸேல் தாஸ், ஆகிய முன்னணி பிரபலங்கள் இக்கலந்துரையாடல் குழுவில் இடம்பெற்றதுடன், Independent Collective Schooஅதிபர் மற்றும் இணை ஸ்தாபகர் யசோதரா பதாஞ்சலி, நிகழ்வை நெறியாள்கை செய்தார். இளம் பெண் பிள்ளைகளை ஊக்கப்படுத்தி, அதிகாரமளிப்பதில் வலுவான பெண் பிரபலங்களின் வகிபாகத்தின் முக்கியத்துவம் தொடர்பில் தமது சுயாதீன அபிப்பிராயங்களை குழுவினர் பகிர்ந்துகொண்டனர். கலாச்சார ரீதியாகவும், சமூகரீதியாகவும் பெண்களின் பல்வேறுபட்ட வகிபாகங்கள் தொடர்பான தமது தனிப்பட்ட கருத்துக்களை அவர்கள் இந்த உரையாடல் மூலமாக வெளிப்படுத்தியதுடன், இலங்கையில் பெண்களின் பங்களிப்புக்களை அங்கீகரித்து, அவற்றைப் பாராட்டவேண்டியமை தொடர்பான மூலோபாயங்களையும் அவர்கள் பகிர்ந்துகொண்டனர்.

குழுநிலை கலந்துரையாடலின் நிறைவில் யூனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் அழகு, உடல்நலம் மற்றும் தனிப்பட்ட பராமரிப்பு உற்பத்திகளுக்கான சந்தைப்படுத்தல் பணிப்பாளரான ஷமாரா சில்வா தனது நன்றிகளை வெளிப்படுத்தி, உரையாற்றுகையில், "அவர்களது உள்ளத்து உணர்வுகள் மூலமாக வெளிவந்த ஆழமான விடயங்கள், இந்த முயற்சியின் மூலமாக லைவ்போய் அடைந்துகொள்ள விரும்புகின்ற நோக்கங்களின் பிரதிபலிப்பை தூண்டுபவையாக அமைந்துள்ளன.

## தீவா கரத்திற்கு வலிமை: தொழில்முயற்சியாண்மைத் திறன் விருத்தி நிகழ்வின் வெற்றியாளர்கள் காலியில் கௌரவிப்பு



20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பாரம்பரியத்தைக் கொண்ட இலங்கையின் பெருமைக்குரிய வர்த்தக நாமமான தீவா (DIVA), 'தீவா கரத்திற்கு வலிமை' தொழில்முயற்சியாண்மைத்திறன்விருத்தி நிகழ்வில் சிறந்து விளங்கிய வெற்றியாளர்களுக்கு 2024 பெப்ரவரி 28 அன்று காலியில் விருது வழங்கி கௌரவித்தது. Women in Management (WIM) அமைப்புடன் இணைந்து நடாத்தப்பட்ட இந்நிகழ்ச்சித்திட்டம் பெண் தொழில் முயற்சியாண்மையையும் திறன் விருத்தியையும் மையமாகக் கொண்ட விரிவான பயிற்சி அமர்வுகளை உள்ளடக்கியிருந்தது. மிகக் கவனமான மதிப்பீட்டுச் செயன்முறை ஒன்றின் பின்னரே குறித்த பயிற்சி அமர்வுகளில் ஆகச் சிறந்து விளங்கிய நான்கு தொழில் முனைவோருக்கு இந்நிகழ்வில் விருது வழங்கப்பட்டது.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு அனைவரும் முகங்கொடுத்துவரும் நிலையில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வணிகங்களில் ஈடுபடும் தொழில்முனைவோர், நாட்டின் பொருளாதாரத்துக்கு கணிசமான பங்களிப்பை வழங்கி நாட்டை பொருளாதார வளர்ச்சியை நோக்கி வழிநடத்தும் சக்தியாக உருவெடுத்துள்ளனர். எமது இல்லத்தரசிகளும் தமது வீட்டுப் பொருளாதாரத்தை வலுப்படுத்தியவாறே தொழில்முனைவோர்களாக உருமாறியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. அதிலும் முக்கியமாக தையல், பின்னல், சமையற் கலை போன்ற தமது வழக்கமான வேலைகளைத் தாண்டி நாட்டின் தொழிற்படையின் முக்கிய அங்கமாகவும் தேசிய பொருளாதாரத்தை வழிநடத்திச் செல்லும் சக்தியாகவும் பெண் தொழில் முனைவோர் மாறியிருப்பது போற்றுதற்குரியது. தொழில் நேர்த்தி முதலான இவர்களது பல்வேறுபட்ட திறமைகள் தொழில் முயற்சியாண்மைத் துறைக்குள் நுழைவதற்கான பலத்தை அவர்களுக்கு வழங்கியிருப்பதோடு அதன்மூலம் குடும்பத்தின் பொருளாதாரத்தையும் நாட்டின் பொருளாதாரத்தையும் மேம்படுத்தும் வல்லமையையும் வழங்கியுள்ளது.

பெண் தொழில் முனைவோரின் இவ்வாறான அசாத்திய திறமைகளை இனங்கண்டு அவர்களின் வியாபார தொழில் நுணுக்கங்கள், திறன்கள், ஆற்றல்கள் என்பவற்றைப் பட்டை தீட்டி ஆகச்சிறந்த வழிகாட்டல்களை வழங்குவதனை தலையாய நோக்கமாகக் கொண்டு 'தீவா கரத்திற்கு வலிமை' என்னும் தொழில் முயற்சிசார் திறன் விருத்தி நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. வியாபாரம் ஒன்றை ஆரம்பிப்பதற்கும் அதனை ஒழுங்காக நடாத்திச் செல்வதற்கும் வியாபார உத்திகளை திறம்பட வகுப்பதற்கும் தேவையான நம்பிக்கை, அறிவு, திறன் என்பவற்றை வழங்கி பெண் தொழில் முனைவோருக்கு வலுவூட்டும் வகையில் இந்நிகழ்ச்சித்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

அமானா வங்கியினால்

## களுபோவில வைத்தியசாலையின் குழந்தைகள், சிறுவர் உளவியல் சிகிச்சை பிரிவு மறுசீரமைப்பு

மக்களுக்கு நட்பான வங்கியியல் மாதிரி கொண்டு இயங்கும் பொறுப்பு வாய்ந்த கூட்டாண்மை நிறுவனமான அமானா வங்கி, கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் (களுபோவில வைத்தியசாலை) குழந்தைகள் மற்றும் சிறுவர் உளவியல் சிகிச்சை பிரிவை மறுசீரமைப்பு செய்திருந்தது.

குழந்தைகள் மற்றும் சிறுவர்களின் உளவியல் ரீதியான பிரச்சனைகளுக்கு சிகிச்சைகளை வழங்கும் இலங்கையின் மட்டுப்படுத்தப்பட்ட சிகிச்சை வசதிகளில் ஒன்றான இந்த பிரிவின் மறுசீரமைப்புத் திட்டத்தில், வர்ணம் பூசல் மற்றும் அத்தியாவசிய தளபாடங்கள் மற்றும் சாதனங்களை வழங்கல் போன்றன அடங்கியிருந்தன. இந்த மேம்படுத்தல்கள் நோயாளர்களுக்கு நட்பான சூழலை ஏற்படுத்தும் வகையில் அமைந்திருப்பதுடன், உளவியல் சுகாதார ஆதரவை எதிர்பார்க்கும் நபர்களுக்கு உதவும் வகையில் அமைந்துள்ளது. மேலும், இந்த வர்ணம் தீட்டும் செயற்பாட்டில் வங்கியின் ஊழியர்கள் பலர் ஆர்வத்துடன் பங்கேற்றதுடன், சமூக ஈடுபாட்டில் அமானா வங்கியின் அர்ப்பணிப்பு இதனூடாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

## பட்டதாரிகளுக்கு வெளிநாட்டில் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தி தனது 32ஆவது பட்டமளிப்பு விழாவை நடத்தியுள்ள DIMO Academy




DIMO நிறுவனத்தின் கல்விப் பிரிவான DIMO Academy, அண்மையில் அதன் 32ஆவது பட்டமளிப்பு விழாவை நடாத்தியிருந்தது. இதில் German Automobile Mechatronics டிப்ளோமா மற்றும் Automobile Mechatronics சான்றிதழ் பாடநெறிகளை வெற்றிகரமாக நிறைவு செய்த 50 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். இதன்போது திறமைகளை வெளிப்படுத்திய, D.G. கசுன் இந்துஜ விக்ரமரத்ன, U.L.D. சமத் மிலிந்த குணசிங்க, சியம்பலாபிட்டியகே இஷான் பியத்ரோ சில்வா ஆகியோர் இப்பட்டமளிப்பு விழாவில் தங்கம், வெள்ளி, வெண்கலம் ஆகிய பதக்கங்களை வென்றனர்.

இவ்வருடம் டிப்ளோமா பட்டம் பெற்ற சிலர், தங்களுடைய பட்டமளிப்பு விழாவிற்கு முன்னதாக 4 புகழ்பெற்ற ஜேர்மன் நிறுவனங்களில் வெளிநாட்டில் வேலை வாய்ப்புகளைப் பெற்றுக் கொண்டமை இங்கு விசேட அம்சமாகும். DIMO Academy ஆனது, வாகனத் துறையுடன் ஏற்படுத்தியுள்ள ஒத்துழைப்பையும் தொழில் துறையில் தொடர்ச்சியாக மாறிவரும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் திறமையான பணியாளர்களை உருவாக்குவதற்கான அவர்கள் கொண்டுள்ள அர்ப்பணிப்பையும் இது பிரதிபலிக்கிறது.

DIMO நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரும், பிரதான மனித வள அதிகாரியும், குழுமத்தின் கல்விப் பிரிவை மேற்பார்வையிடும் திருமதி தில்ருக்ஷி குருகுலசூரிய இது பற்றி தனது கருத்துகளை பகிர்ந்து கொள்கையில், "DIMO Academy வழங்கும் இலவச Automobile Mechatronics சான்றிதழ் கற்கை மற்றும் மிகவும் பிரபலமான ஜேர்மன் Automobile Mechatronics டிப்ளோமா பாடநெறி ஆகியன, வாகனத் துறையில் சரியான திறன்களைக் கொண்ட பணியாளர்களை உருவாக்குவதில் தனித்துவமான பங்கைக் கொண்டுள்ளன.சர்வதேச தொழில்நுட்ப திறன்கள் மற்றும் அறிவு ஆகியவற்றை வழங்குவதன் மூலம் வாகனத் துறையில் அவர்களது வெற்றியை எம்மால் உறுதிப்படுத்த முடியும்." என்றார்.

DIMO Academy ஆனது, அதன் தனித்துவமான சுயகற்றல் அணுகுமுறை மூலம், மாணவர்கள் நடைமுறை ரீதியான சிக்கல்களைத் தீர்ப்பதற்கான அடித்தளத்தை வழங்குகிறது. அத்துடன், DIMO நிறுவனத்தின் உயர்தர வாகன சேவை மையங்கள் மற்றும் திட்டங்கள் மூலம் தொழில்துறை நடைமுறைப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

## LankaPay Technnovation 2024 விருது வழங்கலில் ஜொலித்த கொமர்ஷல் வங்கி



LankaPay Technnovation 2024 விருது வழங்கலில் கொமர்ஷல் வங்கி மூன்று தங்கப் பதக்கங்களையும் இரண்டு வெள்ளிப் பதக்கங்களையும் பெற்றுக் கொண்டது. இலங்கையில் கொடுப்பனவு முறையில் புத்தாக்க வழிமுறைகளைக் கண்டுபிடிப்பதில் முன்னோடிகள் என்ற தனது நிலையை வங்கி இதன் மூலம் தக்க வைத்துள்ளது.

'டிஜிட்டல்' கொடுப்பனவுகளில் ஒட்டு மொத்த சிறப்பு செயற்பாட்டுக்காக' வெள்ளி விருது வழங்கப்பட்டுள்ளது. 'வருடத்தின் மிகச் சிறந்த புத்தாக்க வங்கி' என்ற பிரிவில் தங்க விருது வழங்கப்பட்டுள்ளது. '

சில்லறை கொடுப்பனவுகளுக்கான சிறந்த வங்கி' என்ற பிரிவிலும் தங்க விருதும், வங்கியின் QR கொடுப்பனவு செயலியான ComBank Q+ மூலம் ' LankaQR வழியாக சில்லறை கொடுப்பனவுகளுக்கான சிறந்த கையடக்க தொலைபேசி செயலி' என்ற பிரிவிலும் தங்கப் பதக்கங்களும் வழங்கப்பட்டுள்ளன.

'வருடத்தின் சிறந்த LankaPay கார்ட் அமுலாக்கி' பிரிவில் ஒட்டு மொத்த வெள்ளி விருதும் வழங்கப்பட்டுள்ளது.

வங்கியின் மேலாண்மை மற்றும் டிஜிட்டல் கொடுப்பனவில் அதன் முன்னோடி உற்பத்திகள், சேவைகள் என்பனவற்றை இந்த விருதுகள் மீண்டும் உறுதி செய்துள்ளன.

'எல்லைகள் கடந்த தூரநோக்கு' எனும் தொனிப் பொருளில் LankaPay Technnovation விருதுகள் நிகழ்வை லங்காபே தேசிய கொடுப்பனவு வலையமைப்பின் செயற்பாட்டாளர்களான LankaClear (தனியார்) வரையறுக்கப்பட்ட நிறுவனம் நடத்தியது. கொழும்பு ஷங்கரி லா ஹோட்டலில் இந்நிகழ்வு இடம் பெற்றது.

இந்த நாட்டில் முதல் தடவையாக நாடு தழுவிய ரீதியில் ATM இயந்திர வலையமைப்பை அறிமுகம் செய்த வங்கி கொமர்ஷல் வங்கியே ஆகும். (Europay, Mastercard and Visa) ஒருங்கிணைக்கப்பட்ட பரிவர்த்தனை மூலம் ATM செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. EMV பரிவர்த்தனை மூலமான சிப் கார்ட் தளத்தை முதல் தடவையாக அறிமுகம் செய்து LankaPay ATM வலைமைப்பின் ஊடாக பாதுகாப்பான EMV பரிமாற்றத்துக்கு வழியமைத்ததும் இந்த வங்கியே. வங்கியின் கார்ட்டுகளை வைத்திருப்பவர்கள் LankaPay வலையமைப்போடு தொடர்புடைய ஏனைய வங்கிகளின் ATM கார்ட்டுகளையும் இந்த இயந்திரங்கள் வழியாக மிகவும் பாதுகாப்பான முறையில் பயன்படுத்த இது வழியமைத்துள்ளது.



சம்பத் வங்கி பிஎல்சியின் முழு உரிமம் பெற்ற துணை நிறுவனமான சியபத பினான்ஸ் பிஎல்சி, அண்மையில் அக்கரைப்பற்றில் தனது புதிய கிளையை திறந்து வைத்தது. சியபத பினான்ஸ் பிஎல்சியின் முகாமைத்துவ பணிப்பாளர் ஆனந்த செனவிரத்ன, அம்பாறை மேலதிக அரசாங்க அதிபர் வி. ஜெகதீசன், அக்கரைப்பற்று இராணுவ முகாம் சிவில் அலுவல்கள் இணைப்பதிகாரி மேஜர் ஜனக சுபசிங்க, சியபத பினான்ஸ் பிஎல்சி நிர்வாகத்தின் சிரேஷ்ட அதிகாரிகள், அக்கரைப்பற்று பொலிஸ் காரியாலய அதிகாரிகள் மற்றும் விசேட அதிதிகள் ஆகியோர் முன்னிலையில் தனது புதிய கிளையை, இல. 130, சாகம வீதி, அக்கரைப்பற்று எனும் இடத்தில் திறந்து வைத்துள்ளது.

## அதிவேக நெடுஞ்சாலைகள் எதுவும்...

என ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

இந்த நிறுவனம், தனியார் மயமாக்கப்படமாட்டாதென தெரிவித்த அமைச்சர், தேவையான நிர்வாக முறைகளை மாத்திரம் மாற்றியமைத்து வினைத்திறனுடன் செயற்படுத்தவுள்ளதாக தெரிவித்தார்.

சஹன்யா இன்வெஸ்ட்மென்ட் நிறுவனம் முற்றிலும் அரசாங்கத்துக்குச் சொந்தமான நிறுவனம். இது திறைசேரி மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமானது என்றும் அவர் கூறினார்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் செயற்பாட்டுப் பணிப்பாளர் P.M.H. Kandambi. யை பிரதம நிறைவேற்று அதிகாரியாக இவ்வாரம் நியமிக்கவுள்ளேன். நியமனத்தின் போது, நிறுவனம் செயல்முறை போன்றவற்றை அவர் தெளிவுபடுத்துவார்.

இவை இலாபமீட்டும் நிறுவனங்கள் அல்ல. பெரும் கடனை எவ்வாறு செலுத்துவது என்பதில் பெரும் நெருக்கடியில் உள்ள நிறுவனம்.இதனால் இலங்கையின் ஆற்றல் வணிகமயமாக்கப்படும் வரை பாதுகாக்கப்பட வேண்டிய நிறுவனங்களின் பட்டியலில் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை மின்சார சபை, ஸ்ரீலங்கன் நிறுவனம், மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை என்பன இடம்பெற்றுள்ளன. அவை மேம்பட்ட நிறுவனங்கள் அல்ல. அவை பெரும் நெருக்கடியில் ஒன்றிணைந்து பெரும் நெருக்கடியை உருவாக்குகின்றன. நெருக்கடிகளில் இருந்து மீண்டுவர தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவ மூலோபாய முறைகள் பயன்படுத்தப்பட வேண்டும். ஆனால் தனியார் மயப்படுத்தப்பட மாட்டாது.

## பெருந்தோட்டத்துறை மக்களுக்கு...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டான் ஆகியோர் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பெருந்தோட்டத்துறை மக்களுக்கு அறுதி உறுதிக் காணி வழங்குவதற்கான விசேட வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்காக 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் "பெருந்தோட்ட மக்களுக்கு காணி உரிமை வழங்கல்" எனும் பெயரிலான முன்மொழிவொன்று நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்திருந்தார். இந்த யோசனையை நடைமுறைப்படுத்துவதற்காக அமைச்சரவை அந்தஸ்தற்ற பெருந்தோட்ட தொழில் முயற்சி மறுசீரமைப்புக்கள் இராஜாங்க அமைச்சின் ஒத்துழைப்புடன் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு மற்றும் பெருந்தோட்ட வலயத்துக்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபையுடன் இணைந்து வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டது. இவ் வேலைத்திட்டத்தின் கீழேயே பிராந்திய பெருந்தோட்டக்கம்பனிகள்மற்றும்அரசுக்குச்சொந்தமான பெருந்தோட்டக் கம்பனிகளுக்குரிய தோட்டங்களில் வாழ்கின்ற 4,151 பயனாளிகள் அடையாளம் காணப்பட்டனர்.

## கஷ்டப் பிரதேச மாணவர்களுக்கு...

வழங்கியுள்ளது. சைக்கிள்களை கையளிக்கும் நிகழ்வு நேற்று (02) கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தலைமையில் பத்தரமுல்ல வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் நடைபெற்றது.நிகழ்வில் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் MIZUKOSHI Hadeaki, ஜப்பானிய 'Child fund' நிறுவனத்தின் பிரதிநிதி யுகோ இஷாந்தா மற்றும் இலங்கை 'Child fund' நிதியத்தின் தேசிய பணிப்பாளர் திருமதி ADITI GOSH ஆகியோர் கலந்துகொண்டனர்.

மொனராகலை, புத்தளம், முல்லைத்தீவு போன்ற போக்குவரத்து சிரமம் உள்ள 12 மாவட்டங்களிலுள்ள 108 பாடசாலைகளிலி ருந்து 1216 வயதுக்குட்பட்ட தெரிவான மாணவர்களுக்கு இச்சைக்கிள்கள் வழங்கப்படவுள்ளன. நாளாந்தம் இரண்டரை கிலோமீற்றர் தூரம் பாடசாலைக்கு நடந்து செல்லும் மாணவர்கள் இவற்றைப் பெறுவர். மாணவர்களின் குடும்பங்களின் நிதி நெருக்கடிகள் மற்றும் பிற சிரமங்களும் இங்கு அளவுகோலாக கொள்ளப்பட்டுள்ளன. இலங்கை 'Child fund' அமைப்பின் வேண்டுகோளுக்கிணங்க இலங்கைக்கு இந்த உதவித்தொகை பெற்றுக்கொள்ளப்பட்டது. ஜப்பானிய தூதரகத்தின் பங்களிப்புடனும் கல்வி அமைச்சின் வழிகாட்டுதலின் கீழும் சைக்கிள்கள் மாணவர்களுக்கு வெளிப்படைத்தன்மையுடன் வழங்கப்படவுள்ளன.

## கல்முனை தமிழர்களுக்கு தனியான...

பாராளுமன்றத்தில் தெரிவித்தார். இப்பிரச்சினைக்கு முஸ்லிம் அரசியல் தலைமைகளோ முஸ்லிம் எம்.பிக்களோ காரணமல்ல என்பதை சுட்டிக் காட்டிய அவர், மேன்முறையீட்டு நீதிமன்றம் தமிழ் தரப்பினர் கோரும் கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயம், காணி அதிகாரம் போன்றவற்றை இடைக்காலத் தீர்ப்பில் நிராகரித்துள்ளதால், கல்முனை வடக்கு உப பிரதேச செயலக பிரச்சினையில் அரசு எவ்வாறு தலையிட முடியும் எனவும் அவர் சபையில் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வங்கி (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி.க்கள் அம்பாறை மாவட்டத்தின் கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயம் தொடர்பாக பல்வேறு கருத்துக்களை தெரிவித்திருந்தனர். கல்முனை நகரத்தில் கல்முனை பிரதேச செயலகம் ஒன்றும் அதேவேளை கல்முனை உப பிரதேச செயலகம் ஒன்றும் இயங்கி வருகின்றது.

இந்த உப பிரதேச செயலகம் 1989 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06 ஆம் திகதி பொது நிர்வாக அமைச்சின் ஒரு கடிதத்தின் மூலம் உருவாக்கப்பட்டது. ஆனால் அது சம்பந்தமாக அச்சமயம் அமைச்சரவை தீர்மானமோ அல்லது வர்த்தமானி பிரகடனமோ வெளியிடப்படவில்லை.

யுத்த சூழ்நிலை காரணமாக, இயக்கங்களின் உறுப்பினர்கள் பலர் அச்சுறுத்தல்களை மேற்கொண்டு பலவந்தமான முறையிலே இந்த உப பிரதேச செயலகம் உருவாக்கப்பட்டது.

தமிழ், முஸ்லிம் ஒற்றுமை காரணமாக அன்றிருந்த முஸ்லிம் அமைச்சர் அதேபோன்று பின்பு வந்த அமைச்சர்கள் எல்லோரும் இதனை பேச்சுவார்த்தை ஊடாக தீர்க்க வேண்டும் என்பதற்காக தமிழ் மக்களுக்கென வேறு எல்லையுடனான ஒரு பிரதேச செயலகமும் முஸ்லிம் மக்களுக்கென ஒரு எல்லையுடனான பிரதேச செயலகமும் உருவாக்கப்பட வேண்டுமென்ற கொள்கை ரீதியான உடன்பாட்டுக்கு வந்திருந்தனர்.

குறிப்பாக இந்த உப பிரதேச செயலகம் ஒரு நிலத்தொடர்பற்ற ரீதியில் இயங்கி வருவதன் காரணமாக பூகோள ரீதியாக பல பிரச்சினைகள், சர்ச்சைகள் காணப்படுகின்றன.

இச்சூழ் நிலையில்தான், ஒரு எல்லையினுடனான இரு பிரதேச செயலகங்கள் உருவாக்கப்பட வேண்டுமென்ற இணக்கப்பாட்டுக்கு சமூகத்தலைவர்கள் முன் வந்திருந்தனர்.இருந்த போதும் துர்ப்பாக்கியமாக அது நடைபெறவில்லை.

இச்சபையில் திங்கட்கிழமை தமிழரசுக் கட்சியின் தலைவர் சிறிதரன் உரையாற்றிய போது, சில உண்மைகளை கூறியிருந்தார். அதாவது கல்முனை வடக்கு உப பிரதேச செயலக எல்லைக்குள் 3,500 முஸ்லிம் மக்கள் வாழ்கின்றனர். பள்ளிவாசல்கள், அரபுக்கல்லூரிகள் இருக்கின்றன , முஸ்லிம் பாடசாலைகள் இருக்கின்றனவென அவர் கூறியிருந்தார்.

கல்முனையில் இருக்கின்ற தமிழ்,முஸ்லிம் மக்கள் ஒரே மொழியை பேசி 4.5 கிலோ மீற்றருக்குள் அடர்த்தியாக வாழ்கின்றமையால் யுத்தகாலத்தில் சுயநல அரசியல் சக்திகளால் மக்கள் பிரிக்கப்பட்டனர். கல்முனையில் பொது நிர்வாகத்தின் கீழ் வாழ முடியாதெனக்காட்டி, ஒரு உப பிரதேச செயலகம் உருவாக்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான் பிரிந்து சென்றார்கள்.

பிரிந்திருந்தும் கூட பிரிக்கப்பட்ட உப பிரதேச செயலகத்துக்குள் உள்ள 3,500 முஸ்லிம்களின் விருப்பமில்லாமலே நிர்வாகம் செய்யப்படுகிறது. அங்கு பள்ளி வாசல்கள், முஸ்லிம் பாடசாலைகள், முஸ்லிம் மக்களின் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் காணிகள் உள்ளன. இவை பலாத்காரமான முறையில் உப பிரதேச செயலகத்துக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளதால் முஸ்லிம் மக்கள் பாரிய அநீதிக்குட்படுத்தப்பட்டதுதான் வரலாறு.

இவ்வாறு அநீதிக்குட்படுத்தப்பட்ட விடயம் சம்பந்தமாக நாம் பேச்சுவார்த்தை ஊடாக தீர்வு காண விரும்பி 2017 ஆம் ஆண்டு அப்போது பொது நிர்வாக அலுவல்கள் அமைச்சராக இருந்த வஜிர அபேவர்தனவின் வீட்டில் இரவு,பகலாக சம்பந்தன், மாவை சேனாதிராஜா,சுமந்திரன் போன்றோருடன் பேசியிருந்தோம்.

அதேபோன்று எல்லையை நிரந்தரமாக பிரிக்கின்றபோது பிரிக்கப்படும் முஸ்லிம் பெரும்பான்மை பிரதேச செயலக பிரிவில் 3,5004,000 தமிழ் மக்கள் வாழ வேண்டிவரும். அவ்வாறு வருகின்றபோது இந்த பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணலாமென்று நாம் எமது யோசனையை முன்வைத்தோம்.

எவ்வாறு கல்முனை வடக்கு உப பிரதேச செயலக பிரிவில் 3,500 முஸ்லிம் மக்கள் வாழ்கின்றார்களோ அதேபோன்று முஸ்லிம் பெரும்பான்மை பிரதேச செயலக பிரிவில் 3,5004,000 தமிழ் மக்கள் வாழ்கின்றபோது இதற்கொரு நிரந்தரமான தீர்வு குறிப்பாக கல்முனை வடக்கு தமிழ் மக்களுக்கு ஒரு பிரதேச செயலகம் மட்டுமல்லாமல் ஒரு உள்ளூராட்சி சபையும் கிடைக்கும்.

எனவே இவ்வாறான ஒரு தீர்வை முன்வைப்போம் எனக்கூறினோம்.ஆனால், ஒரு தமிழ் மகனும் கல்முனை பிரதேச செயலகத்துக்குள் வாழ முடியாது, இதற்கு உடன்பட முடியாதென்று கூறி, இன ரீதியான ஒரு பிரதேச செயலகத்தை உருவாக்க வேண்டும் என்பதாகவே யுத்தம் முடிந்த பின்பும் இவர்களின் சிந்தனை இருக்கிறது.

கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்துக்குள் 3,500 முஸ்லிம் மக்கள் வாழ முடியும் ஆனால் தமிழ்மக்கள் முஸ்லிம் பிரதேச செயலகத்திற்குள் வாழ முடியாது என்று கூறுவதனால் இன்று அங்கு இரு சமூகங்களையும் அசௌகரியம், மனவேதனைக்குள்ளாக்குகின்ற விடயத்தை தமிழ் அரசியல் தலைமைகள் செய்து கொண்டிருக்கின்றன , குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் பல அசௌகரியங்களுக்கு மத்தியில் காரைதீவு பிரதேச செயலகத்தினுள் 40 வீதமான முஸ்லிம் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

நாவிதன்வெளி பிரதேச செயலகத்தினுள் 40 வீதமான முஸ்லிம் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

எந்தவித பிரிவினைக் கோஷமோ எந்தவித தமிழ், முஸ்லிம் முரண்பாட்டு கோஷமோ இடம் பெறவில்லை.ஆனால் தேர்தல் நெருங்குகின்ற போது கல்முனையில் இவ்வாறான விடயங்களை உரத்து பேசுவதன் ஊடாக இதனை திசைதிருப்ப , அரசியல் ரீதியாக இலாபத்தை அடைய ஒற்றுமையாக வாழும் கல்முனை தமிழ்,முஸ்லிம் மக்களை குழப்பும் முயற்சி இடம்பெறுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு...

மதிப்பீட்டுக் குழு மற்றும் அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தரப் பெறுகைக் குழுவின் விதந்துரைகளின் அடிப்படையில், மேலதிக விமானத்துடன் கூடிய நான்கு (04) பெரிய ரக விமானங்களை குத்தகையின் கீழ் பெற்றுக் கொள்வதற்கான ஒப்பந்தத்தை வழங்குவதற்காக துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ORIX AVIATION க்கு 06 ஆண்டுகளுக்கு மாதாந்தம் 3,60,000 அமெரிக்க டொலர் வாடகைக்கு இரண்டு (02) விமானங்களுக்கான ஒப்பந்தத்தை செய்யவும்,

AERGO CAPITAL LIMTED நிறுவனத்துக்கு 08 ஆண்டுகளுக்கு மாதாந்த 3,65,000 அமெரிக்க டொலர் வாடகைக்கு இரண்டு (02) விமானங்களுக்கு ஒப்பந்தம் செய்யவும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## பண்டிகைக்கால தேவைகள் கருதி...

நோக்கிலும் அரசாங்கம் இந்த தீர்மானத்தை மேற்கொண்டுள்ளது.

நாட்டுக்கான வருடாந்த உளுந்து தேவை 20,000 மெற்றிக் தொன்னாக உள்ளது. இதைப் பெற்றுக் கொள்வதற்கான தேசிய உற்பத்தி உளுந்து சந்தைக்கு கிடைக்கும் வரை, சகல வருடங்களிலும் ஏப்ரல் மற்றும் டிசம்பர் மாதங்களில் சந்தையில் உளுந்து தட்டுப்பாடு நிலவுவதை அரசாங்கம் சுட்டிக்காட்டுகிறது.

அந்த வகையில் தற்போது உளுந்து இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள தற்காலிக தடையை நீக்கி 2007 / 48ஆம் இலக்க விசேட வர்த்தக பொருட்கள் சட்டத்தின் கீழ், அரச வணிக பல்நோக்கு கூட்டுத்தாபனத்தில் உணவு மேம்பாட்டு சபை மற்றும் இலங்கை 'ஹதபிம' அதிகார சபை ஆகியவற்றுக்கூடாக மாத்திரம் தேசிய அவசியத்தை கருத்திற்கொண்டு 2000 மெற்றிக் தொன் உளுந்தை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இது தொடர்பில் விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர சமர்ப்பித்துள்ள யோசனைக்கே அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

## விபத்து குறித்து முறையான...

தெரிவித்தார். அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக்கு வருகை தந்துகொண்டிருக்கும் போது விபத்துக்குள்ளாகியுள்ள சிங்கப்பூர் சரக்கு கப்பலில் பாரியளவிலான வெடிப்பொருட்கள் மற்றும் அபாயகரமான பொருட்கள் அடங்கிய கொள்கலன்கள் இருந்துள்ளமை உண்மையே. அந்த விடயங்கள் தொடர்பில் மத்திய சுற்றாடல் அதிகாரசபை விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

அதேவேளை, அந்த கப்பல் இலங்கைக்குள் வருவதற்கு மத்திய சுற்றாடல் அதிகாரசபையிடம் அனுமதி பெறப்படவில்லை. அதனால் அதுதொடர்பாக விசாரணையை ஆரம்பிக்குமாறு துறைமுகம் மற்றும் சுங்கத்துறைக்கும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த கப்பல் அமெரிக்காவின் பால்டிமோர் பாலத்தில் விபத்துக்குள்ளானதால்தான் கப்பலில் இருந்த அபாயகரமான பொருட்கள் தொடர்பில் அறிய முடிந்துள்ளது.

அதற்கிணங்க உரிய விசாரணைகளை மேற்கொண்டு பாராளுமன்றத்துக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இன்றைய பலன்கள்

(03.04.2024)

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம் :** சுப நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் போது சொந்த பந்தங்களுக்குள் உறவு பலப்படும். பங்குச்சந்தை லாபமகரமாக இருக்கும்.

**ரிஷபம் :** ஒரு சிலருக்கு அரசாங்க விருதும் கிடைத்து மகிழ்ச்சி படுத்தும். எதிர்பார்த்த லாபத்தை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள். மனைவியின் உடல் நலனிலும் பிள்ளைகளின் கல்வியிலும் சில சிரமங்களை சந்திக்க நேரிடும்.

**மிதுனம்:** அரசு பணியில் உள்ளவர்களுக்கு இது சோதனையான காலம். எந்த ஒரு விஷயத்திலும் ஒரு முறைக்கு இருமுறை யோசித்து முடிவெடுங்கள்.

**கடகம்:** கட்டிட பொறியாளர்கள் ,கலை சம்பந்தப்பட்ட பொருட்களை விற்பவர்கள், அரசு துறை அதிகாரிகள், வங்கித் துறை பணியாளர்கள், மொத்தமாக பொருட்களை வாங்கி விற்பனை செய்பவர்கள் போன்றவர்கள் தங்களின் துறையில் திருப்திகரமான வளர்ச்சி காண்பார்கள்.

**சிம்மம்:** கலைத்துறையில் உள்ளவர்களுக்கு அதிர்ஷ்டகரமான வாய்ப்புகள் தேடி வரும். சினிமா படம் எடுப்பவர்கள் சினிமா சம்பந்தப்பட்ட தொழிலில் முதலீடு செய்பவர்கள் போன்றோர் நன்கு யோசித்து எந்த முடிவையும் எடுங்கள்.

**கன்னி:** கடன் சுமை குறைய வாய்ப்புள்ளது. தந்தையின் உடல் நலனில் அக்கறை செலுத்துங்கள். பிள்ளைகளின் கல்வி மனைவியின் உடல் நலத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும்.

**துலாம்:** கடன் தொல்லைகள் குறையும். மின்சார பொருட்களை மிகக் கவனமாக கையாளுங்கள். புதிய தொழில் தொடங்க நினைப்பவர்கள் அதற்கான முயற்சியில் ஈடுபட சரியான தருணம் இது.

**விருச்சிகம்:** தாயாரின் உடல் நிலையில் சிறிது கவலை தோன்றக்கூடும். கலை உலகில் உள்ளவர்களுக்கு குறிப்பாக சினிமா துறையில் இருப்பவர்களுக்கு புகழ் சேரும்.

**தனுசு:** தொழில் செய்பவர்களுக்கு சாதகமான சூழ்நிலை நிலவுகிறது. காவல்துறையில் பணிபுரிபவர்கள் இடமாற்றுத்தால் ஏற்றம் பெறுவார்கள்.

**மகரம்:** வீட்டு உபயோக பொருட்கள் வாங்குவது பழைய வாகனங்களை சீரமைப்பது போன்ற செயல்களில் ஈடுபடுவீர்கள்.

**கும்பம்:** வாகனங்களையும் பொருட்களையும் பாதுகாப்பது அவசியம்.அரசுத் துறையில் உள்ளவர்கள் நிதானத்துடன் செயல்பட வேண்டிய நேரம் இது.

**மீனம்:** பிள்ளைகளின் உடல்நலனிலும் கல்வியிலும் அதிக கவனம் செலுத்துங்கள். மருத்துவ ஆலோசனை பெறாமல் மருந்துகளை உட்கொள்ள வேண்டாம்.

## ஞானசார தேரருக்கு பிணை...

பிணை மனு நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை காலை நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.இதன்போதே உயர் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய படபெந்திகே இந்த மனுவை நிராகரித்தார்.

கலகொட அத்தே ஞானசார தேரர் இஸ்லாத்துக்கு எதிராக தெரிவித்த அவதூறான கருத்துக்களுக்காக, அவருக்கு நான்கு ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

## மலையகப் பிரதேசங்களில்...

விண்ணப்பிக்க முடியுமென பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் ஆட்சேர்ப்புக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. மலையகத்தை பொறுத்தமட்டில் பல இளைஞர், யுவதிகள் விண்ணப்பிக்க தகுதியுடையவர்களாகவும் காணப்படுகின்றனர் . அது மட்டுமன்றி மலையக பொலிஸ் நிலையங்களிலேயே அதிகளவில் வெற்றிடங்களும் காணப்படுகின்றன.

ஆகவே, நேரத்தை வீணடிக்காமல் உடனடியாக விண்ணப்பிக்குமாறு அனைவரையும் கேட்டுக் கொள்வதோடு தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு மலையக பொலிஸ் நிலையங்களிலேயே நியமனம் பெற்றுத்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

## சர்வதேசத்தின் முறைமைக்கமைய...

70 லட்சம் வங்கி வாடிக்கையாளர்கள் பாதுகாக்கப்படுவதுடன், இதன் கீழ் குறிப்பாக புதிய வங்கி அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கு சட்டத்திருத்தம் இடம்பெறுவதாகவும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று மேற்படி சட்டமூலத்தை சமர்ப்பித்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். வங்கிகளின் பங்குதாரர்களான உரிமையாளர்களின் தகைமைகளை புதுப்பித்தல், உரிமைத்தன்மை தொடர்பில் சட்ட நியதிகளை திருத்துதல், இலாபத்தை நிர்ணயகப்பதற்கு முன்பதாக சொத்துக்கள் தொடர்பாக கவனம் செலுத்துதல் உள்ளிட்ட விடயங்கள் இந்த சட்டமூலத்தில் உள்வாங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

24 வர்த்தக வங்கிகள் ஆறு விசேட வங்கிகள் இலங்கையில் தற்போது செயல்படும் நிலையில் அவற்றின் சொத்துக்களின் பெறுமதி 20.4 ட்ரில்லியன் ரூபாவாக உள்ளது . அவற்றில் 16. 6 ட்ரில்லியன் வைப்பிலிடப்பட்டுள்ளன.

அந்த வகையில் ஐந்து கோடியே எழுபது இலட்சம் வாடிக்கையாளர்களில் 60 வீதமானவர்கள் ஐயாயிரத்துக்கும் குறைவான வைப்பைக் கொண்டுள்ளவர்களே என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## முஸ்லிம் பாடசாலைகளின்...

வகுப்பறைகள் தட்டுப்பாடு, சிங்கள மூலம் இஸ்லாம் பாடம் கற்பிக்கும் ஆசிரியர் இன்மை, அதிகமாக முஸ்லிம்கள் வாழும் பகுதிகளில் பாடசாலைகள் இன்மை உள்ளிட்ட விடயங்கள் குறித்தும் இதன் போது ஆராயப்பட்டது.

சுமார் 40,000 மாணவர்கள் சிங்கள மொழி மூலம் கல்வி கற்பதோடு அவர்களுக்கு இஸ்லாம் பாடம் கற்பிக்க ஆசிரியர் இன்மையினால் மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை தொடர்பில் இங்கு ஆராயப்பட்டது.

கொழும்பிலுள்ள 19 முஸ்லிம் பாடசாலைகளில் சுமார் 200 ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாக அதிபர்கள் மற்றும் அமைப்புகளின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியதோடு அவற்றை தீர்ப்பது பற்றியும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது. உயர்தரம் சித்தியடைந்தவர்களுக்கு இரண்டு வருட பயிற்சி வழங்கி நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

கொழும்பில் சில பிரதேசங்களில் முஸ்லிம் பாடசாலைகள் இன்மையால் மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளிலிருந்து விலகிச் செல்வது குறித்தும் சில பாடசாலைகளில் இடவசதி, மைதானவசதி இன்மை தொடர்பாகவும் சுட்டிக்காட்டப்பட்டது. சில பாடசாலைகளை வேறு இடத்துக்கு மாற்றுவதற்கு உகந்த காணியை வழங்குவது தொடர்பில் ஆராயுமாறு நகர அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை வழங்கினார்.

இடவசதி குறைபாட்டுக்கு தீர்வாக புதிய பாடசாலை கட்டடங்களை நன்கொடையாளர்களின் பங்களிப்புடன் நிர்மாணிப்பதில் உள்ள தடைகளை தீர்ப்பது பற்றியும் இங்கு ஆராயப்பட்டது.

கலந்துரையாடலில் தெரியவந்த சில பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து அறிவிக்குமாறு கல்வி அமைச்சு மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகளுக்கும் பணிப்புரை விடுத்த ஜனாதிபதி, முஸ்லிம் பாடாசலைகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் இம்மாத இறுதியில் மீண்டும் சந்தித்து மீளாய்வு செய்ய நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதன் போது அறிவித்தார்.

இதன்போது உயர் தரம் கற்க தெரிவாகியிருக்கும் மாணவர்களுக்கு தொழில் பயிற்சிகளை வழங்க வேண்டியதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார். தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, மேல் மாகாண ஆளுநர் எயார் மார்ஷல் ரொஷான் குணதிலக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, கல்வி அமைச்சின் செயலாளர் திலகா ஜயசுந்தர, மேல்மாகாண கல்வி அதிகாரிகள், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் அதிகாரிகள், நகர பாடசாலை அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள், முஸ்லிம் அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரும் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

## மாத்தளையில் அரச...

விகாரை வளாகத்திலும் நடாத்தப்படவுள்ளன . இதற்கமைய, அரச வெசாக் மகோற்சவத்தில் திட்டமிடப்பட்ட வேலைத்திட்டக் கோவையை நடைமுறைப்படுத்த அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதேபோன்று ,மே மாதம் 22, 23 மற்றும் 24 ஆம் திகதிகளில் இறைச்சிக் கடைகள் மற்றும் மதுபான விற்பனை நிலையங்களை மூடுவதற்கும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவகார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.




ஓய்வுபெற்ற அதிபர்கள், ஆசிரியர்கள் கௌரவிப்பு விழா

தினகரன் வாரமஞ்சரி

தினகரனின் 92 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு

களுத்துறை மாவட்டத்தில் உள்ள
தமிழ் மொழி பாடசாலைகளின் ஓய்வுபெற்ற அதிபர்கள் மற்றும்
பேருவளை தேர்தல் தொகுதியில் உள்ள பாடசாலைகளின்
ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் கௌரவிப்பு விழா

பேருவளை ஸேம் ரிபாய் ஹாஜியார் வித்தியாலய
அஷ்செய்க் முஸ்தபா வலியுல்லாஹ் கேட்போர்கூடத்தில்
12.05.2024 காலை 9 மணிக்கு

தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர்
தே. செந்தில்வேலவர் தலைமையில் நடைபெறும்.

எம். பாஸி ஸுபைர்
விழா ஏற்பாட்டுக் குழுத் தலைவர்
தொ.பேசி இல. 077 0812420

# அமைச்சரவை முடிவுகள்




**01. எஹலபொல அரண்மனையை ஸ்ரீ தலதா மாளிகைக்கு ஒப்படைத்தல்**

2024.02.19 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கமைய, எஹலபொல அரண்மனையை ஸ்ரீ தலதா மாளிகைக்கு ஒப்படைப்பதற்கு உரிய அனைத்துத் தரப்பினர்களுடன் கலந்துரையாடி விதந்துரைகளுடன் கூடிய அறிக்கையொன்றை அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

அதற்கமைய சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையின் மூலம், எஹலபொல குடும்பத்தை எடுத்தியம்பும் வகையில் நூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்த கண்டி இராச்சியத்தின் மகிமையையும் குறித்த சூழல் பின்னணியையும் எடுத்துக்காட்டும் வகையில் இக்கட்டிடத்தில் மெழுகுச் சிலைகளுடன் கூடிய அருங்காட்சியகத்தை அமைப்பதற்கும், அதன்மூலம் குறித்த வரலாற்றுத் தகவல்களை இன்றைய சமூகத்திற்கு மிகவும் கவர்ச்சிகரமாக எடுத்துக்காட்டவும், உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுப்பதையும் நோக்கமாகக் கொண்டு ஸ்ரீ தலதா மாளிகை எஹலபொல அரண்மனையை மையமாகக் கொண்டு கருத்திட்டமொன்று உருவாக்கியுள்ளது. அதனால், குறித்த அரண்மனையை ஸ்ரீ தலதா மாளிகைக்கு ஒப்படைப்பது பொருத்தமானதென விதந்துரைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, எஹலபொல அரண்மனை மற்றும் அதற்குச் சொந்தமான காணியை அற நிலையக் காணி உறுதி மூலம் ஸ்ரீ தலதா மாளிகைக்கு ஒப்படைப்பதற்காக ஜனாதிபதியினால் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**02. இலங்கை சமுத்திரவியல் பல்கலைக்கழகம் மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் நொத்ரா டேம் பல்கலைக்கழகத்திற்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம்**

வங்காள விரிகுடாவை அண்மித்த சமுத்திரங்கள் மற்றும் வளிமண்டலம் பற்றிய ஆய்வுக் கருத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்காக 2024 – 2028 ஐந்து (05) ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும் வகையில் இலங்கை சமுத்திரவியல் பல்கலைக்கழகம் மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் நொத்ரா டேம் பல்கலைக்கழகத்திற்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இக்கருத்திட்டத்தின் மூலம் இலங்கை சமுத்திரவியல் பல்கலைக்கழகம் உள்ளிட்ட ஏனைய தேசிய பல்கலைக்கழகங்களிலும் உயர் கல்வி நிறுவனங்களிலும் கற்கைகள், ஆய்வுகள், பட்டப்படிப்பை மேற்கொள்கின்ற மாணவர்கள் மற்றும் பட்டப்பின் படிப்பு மாணவர்களின் திறன்களை விருத்தி செய்வதற்கான வசதிகளை வழங்குவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

உத்தேசக் கருத்திட்டத்தின் மொத்தச் செலவாக 62,000 அமெரிக்க டொலர்கள் அமைவதுடன் அதில் 60,000 ஐக்கிய அமெரிக்காவின் நொத்ரா டேம் பல்கலைக்கழகம் மற்றும் வொஷிங்டன் பல்கலைக்கழகத்தால் வழங்குவதற்கு உடன்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, உத்தேசக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக நொத்ரா டேம் பல்கலைக்கழகத்திற்கும் இலங்கை சமுத்திரவியல் பல்கலைக்கழகம் மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் நொத்ரா டேம் பல்கலைக்கழகத்திற்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**03. இலங்கையில் வளிச்சீராக்கி இயந்திரங்களின் வலுசக்தி வினைத்திறனை சோதிப்பதற்கான ஆய்வுகூடத்தை தாபித்தல்**

பச்சைவீட்டு விளைவு வாயுக்கள் வெளியேற்றத்தைக் குறைக்கும் கருத்திட்டத்தின் கீழ் வளிச்சீராக்கி இயந்திரங்களின் வலுசக்தி வினைத்திறனை சோதிப்பதற்கு இலங்கையில் ஆய்வுகூடமொன்றை நிறுவுவதற்காக ஒத்துழைப்பு நல்குவதற்கு தென்கொரிய அரசு உடன்பாடு தெரிவித்துள்ளது.

கொரிய வலுசக்திப் பணியகத்தின் நிதியிடலுடன் இக்கருத்திட்டத்தின் ஆய்வுகூடத்தை நிறுவுவதற்கும், மற்றும் தேவையான மனிதவளப் பயிற்சி நடவடிக்கைகளை 2024 ஆம் ஆண்டில் முடிவுறுத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

உத்தேசக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான உடன்பாட்டைத் தெரிவித்து கொரிய அரசு மற்றும் இலங்கை அரசு கையொப்பமிடுவதற்கான பேச்சுவார்த்தைக் குறிப்பு மற்றும் நியதிகளுக்கு வெளிநாட்டு வளங்கள் திணைக்களம், வெளிவிவகார அமைச்சு, மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் ஆகியவற்றின் உடன்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

**04. பாராளுமன்ற அங்கீகாரத்திற்கான வர்த்தமானி அறிவித்தல்களை சமர்ப்பித்தல்**

கீழ்வரும் சட்டங்களுக்கமைய தயாரிக்கப்பட்டுள்ளதும், குறித்த வர்த்தமானி அறிவித்தல் மூலம் விதிக்கப்பட்டுள்ள அறிவித்தல்கள், கட்டளைகள், ஒழுங்குவிதிகளை பாராளுமன்ற அங்கீகாரத்திற்கு சமர்ப்பிப்பதற்காக நீதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

★ 2364/36 இலக்க 2023.12.31 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ள 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள கட்டளைகள்

★ 2364/37 இலக்க 2023.12.31 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ள 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள கட்டளைகள்

★ 2369/27 இலக்க மற்றும் 2374/19 இலக்க 2024.02.01 மற்றும் 2024.03.06 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ள 2003 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள கட்டளைகள்

★ 2368/24 இலக்க 2024.01.24 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ள 2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள அறிவித்தல்கள் (மோட்டார் வாகனங்கள் மீதான சொகுசு வரி)

★ 2366/34 இலக்க 2024.01.12 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ள 2021 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள்

★ 2361/44 இலக்க 2023.12.08 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ள மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள 03/2023 இலக்க மதுவரி அறிவித்தல்கள்

★ 2364/35 இலக்க 2023.12.31 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ள மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள 04/2023 இலக்க மதுவரி அறிவித்தல்கள்

★ 2366/33 இலக்க மற்றும் 2369/42 இலக்கங் கொண்ட முறையே 2024.01.12 மற்றும் 2024.02.02 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ள 2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள்.

**05. 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க விளையாட்டில் ஊக்குப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் 34(1) பிரிவின் கீழ் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் அவர்களால் தயாரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளைப் பாராளுமன்ற அங்கீகாரத்திற்கு சமர்ப்பித்தல்**

2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க விளையாட்டில் ஊக்குப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, ஆண்டுதோறும் தடை செய்யப்பட்ட பொருட்களின் பட்டியல் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டியுள்ளது. விளையாட்டுகளில் ஈடுபடுகின்ற வீரர்கள் மற்றும் விளையாட்டுகளில் ஈடுபடுத்தும் விலங்குகளுக்கு தடை செய்யப்பட்ட ஊக்க மருந்துகள் வழங்கப்படுவது அறிக்கையாகியுள்ளமையால், இவ்வாண்டிலிருந்து குதிரையேற்றம் மற்றும் குதிரைப் பந்தயங்களுக்கான தடை செய்யப்பட்ட ஊக்கமருந்துப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க விளையாட்டில் ஊக்குப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, 2373/14 ஆம் இலக்க 2024.02.27 ஆம் திகதிய விசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ள 2023 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க தடைசெய்யப்பட்ட ஊக்கிகள் (தடைசெய்யப்பட்ட பட்டியல்) ஒழுங்குவிதிகளை பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கு விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அமைச்சரவை யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**06. வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளைப் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்தல்**

2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்டங்களின் அறவீட்டுச் சட்டத்தின் கீழ் ஒருசில தெரிவு செய்யப்பட்ட பொருட்களின் வகைகளை இறக்குமதி செய்யும் போது விதிக்கப்பட்டிருந்த விசேட பண்டங்களுக்கான வரித் திருத்தத்தை வலுவாக்கம் செய்வதற்கு வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளை குறித்த சட்டத்தில் குறிப்பிட்டவாறான காலப்பகுதிக்குள் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்தல் வேண்டும்.

அதற்கமைய, 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்டங்களின் அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கீழ்க்காணும் வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளை பாராளுமன்ற அங்கீகாரத்திற்கு சமர்ப்பிப்பதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

★ 2360/52 ஆம் இலக்க 2023.11.30 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்

★ 2365/04 ஆம் இலக்க 2024.01.02 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்

★ 2365/84 ஆம் இலக்க 2024.01.07 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்

★ 2372/06 ஆம் இலக்க 2024.02.19 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்

★ 2373/42 ஆம் இலக்க 2024.03.01 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்

**07. பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் அபிவிருத்தி வேலைத்திட்டம் 2 ஆவது படிமுறையின் கீழ் பிரதான முனையக் கட்டிடம் பயணிகள் பாலம் இலக்கம் 02, மற்றும் பயணிகள் பாலம் இலக்கம் 03 உள்ளிட்ட கருத்திட்டங்களை அடையாளங் காணல்**

2023.10.30 திகதி எட்டப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய, கட்டுமான தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களுக்கு மேற்குறிப்பிட்ட கட்டுமானங்களுக்கான தேசிய போட்டி விலைமுறிக் கோரல் முறைமையின் கீழ் விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளதுடன், அதற்காக நான்கு (04) விலைமுறிகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தரப் பெறுகைக் குழுவின் பரிந்துரைகளுக்கமைய, விபரங்களுடன் கூடிய பதிலளிப்புக்களை வழங்கியுள்ள விலைமனுவைச் சமர்ப்பித்துள்ள குறித்த பணிகளுக்கான ஒப்பந்தத்தை வழங்குவதற்காக துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சரினால் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**08. பாடசாலை மாணவியர்களுக்கான சுகாதார துவாய் வழங்கும் வேலைத்திட்டம்**

இலங்கையில் மொத்தம் 04 மில்லியன் பேர் பாடசாலை மாணவர்களாக இருப்பதுடன், அவர்களில் 1.2 மில்லியன் மாணவிகள் பூப்படைந்தவர்களாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

குறித்த மாணவியர்களில் மிகவும் பின்தங்கிய பாடசாலைகள், பின்தங்கிய பாடசாலைகள், அணுகல் வசதி குறைந்த பாடசாலைகள், தோட்டப் பாடசாலைகள் மற்றும் வறுமைப்பட்ட மாணவர்களைக் கொண்டுள்ள நகர்ப்புறப் பாடசாலைகளில் கல்வி பயில்கின்ற 500,000 மாணவிகளுக்கு 2024 ஏப்ரல் மாதத்திலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் ஆண்டுதோறும் சுகாதார துவாய் வழங்குவதற்கான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக கல்வி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**09. சுற்றுலாத்துறையில் துரித அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காக அத்தியாவசிய போக்குவரத்து வசதிகளை உருவாக்கல்**

சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் செல்வதற்குப் பயன்படுத்துகின்ற வாகனங்களின் பயன்பாட்டுக்காலம் 06 வருடங்களுக்கு மேற்படாத வகையில் இருத்தல் வேண்டுமென சுற்றுலாத் துறையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையாக இருப்பினும், வாகனங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் இறக்குமதிக்கான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டமையால், சுற்றுலாத் துறையில் போக்குவரத்து வசதிகளுக்காகப் பயன்படுத்தப்படும் வாகனங்களில் நிலைமைகள் மகிழ்ச்சிக்குரிய மட்டத்தில் காணப்படாமையால், காலாவதியான வாகனங்களின் பாவனையால் முன்னணிமிக்க சுற்றுலாப் பயண இடமாக இலங்கை கொண்டுள்ள புகழுக்கு ஒருசில களங்கம் ஏற்படுவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

அதனால், இலங்கையின் பொருளாதார மறுமலர்ச்சி செயன்முறையில் சுற்றுலாத் துறையின் பங்களிப்பைக் கருத்தில் கொண்டு, இத்தொழிற்றுறையின் வளர்ச்சிக்குத் தேவையான வாகனங்களை இறக்குமதி செய்ய வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கமைய, விசேட வரிச்சலுகையை வழங்காமல் குறிப்பாக சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் செல்வதற்குப் பயன்படுத்தப்படுகின்ற 06–15 வரையான இருக்கைகளைக் கொண்ட 750 வேன் வண்டிகளும் (மின்னியல் மற்றும் இரட்டைரக வண்டிகள் உள்ளிட்ட), 16 –30 வரையான இருக்கைகளைக் கொண்ட சிறியரக பேரூந்துகள் மற்றும் 3045 வரையான இருக்கைகளைக் கொண்ட பேரூந்துகள் 250 இனையும் இறக்குமதி செய்வதற்காக சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## அம்பாறையில் சிறுபோக நெல் விதைப்பு மும்முரம்



**நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்**

அம்பாறை மாவட்ட வயல்வெளிகளில் சிறுபோக நெல் விதைப்பு வேலை மிகவும் மும்முரமாக தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்நிலையில் நாவிதன்வெளி பிரதேச செயலகத்துக்குட்பட்ட சவளக்கடை பிரதேசத்தில் இம்முறை 9,372 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக, அக்கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் வினோதன் தெரிவித்தார்.

விவசாயச் செய்கைக்கான ஆரம்பக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டமைக்கமைய இம்மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் விதைப்பு வேலை முடிவடைய வேண்டுமெனவும், அவர் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த பெரும்போகத்தின் போது, மழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 113 விவசாயிகளின் பெயர், நட்டஈடு வழங்குவதற்காக கமநல காப்புறுதிச் சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், அவர்களுக்கு விரைவில் நட்டஈடு வழங்கப்படவுள்ளதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

## இந்திய வியாபாரிகளால் தமது வியாபாரம் பாதிப்பு

### கிழக்கு வியாபாரிகள் கவலை

**பாண்டிருப்பு தினகரன் நிருபர்**

தற்போது கிழக்கு மாகாணத்தில் பண்டிகைக்கால வியாபாரம் களை கட்டத் தொடங்கியுள்ள நிலையில் இந்திய புடைவை வியாபாரிகளின் வருகையால் தமது வியாபாரம் பாதிக்கப்படுவதாக, உள்ளூர் வியாபாரிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த வருடம் சித்திரை புத்தாண்டும் ரமழான் பண்டிகையும் அடுத்தடுத்து வருவதால் வியாபார நடவடிக்கைகள் களை கட்டியுள்ளன. இந்நிலையில் இந்தியாவிலிருந்து வந்துள்ள புடைவை வியாபாரிகள், கிராமங்கள் தோறும் நடமாடும் விற்பனையில் ஈடுபடுவதுடன், அவர்கள் தவணை அடிப்படையில் கடன் வழங்கி வியாபாரம் செய்வதால் தமது வியாபாரம் பாதிக்கப்படுவதாகவும், உள்ளூர் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

இலட்சக்கணக்கில் முதலீடு செய்து, வரி கட்டி பல்வேறு சிக்கல்களுக்கு மத்தியில் வியாபாரம் செய்து வரும் தமக்கு, இந்திய வியாபாரிகளின் வருகையால் வருடத்துக்கு ஒருமுறை வரும் பண்டிகைக்கால வியாபாரம் பாதிக்கப்படுவதாகவும், உள்ளூர் வியாபாரிகள் மேலும் தெரிவிக்கின்றனர்.

## அட்டாளைச்சேனையில் இப்தார் நிகழ்வு




**அட்டாளைச்சேனை குறூப் நிருபர்**

அரச மருத்துவ அதிகாரிகளுக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்வுடன் ஏற்பாடு செய்யப்பட்ட இப்தார் நிகழ்வு, அட்டாளைச்சேனை பெரோனா பீச் வில்லா விடுதியில் சிறப்பாக நடைபெற்றது.

சமூக சுகாதார மருத்துவர் கே.எல்.எம். நக்பார் தலைமையில் கடந்த ஞாயிறு (31) நடைபெற்ற இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஷகீலா இஸ்ஸதீன் பிரதம அதிதியாகவும் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ.வேதநாயகம், திருகோணமலை மாவட்ட உயர் நீதிமன்ற நீதிபதி அஷ்ஷெய்க் என்.எம்.அப்துல்லா, கல்முனை மாவட்ட நீதிபதி எம்.எல்.எ.சம்சுதீன் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

இதன்போது கிழக்கிலங்கை அரபுக் கல்லூரி அதிபர் எ.எல்.எம்.அஷ்ரப் மார்க்க சொற்பொழிவாற்றியதுடன், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஷகீலா இஸ்ஸதீனின் சேவையை பாராட்டி அட்டாளைச்சேனை ஆதார வைத்தியசாலை மருத்துவ அதிகாரி பறூஸா நக்பர் பொன்னாடை போர்த்தி நினைவுப்பரிசு வழங்கி கௌரவித்தார்.



தினகரன் 92ஆவது பிறந்த தின நிகழ்வில்...

# மாவனல்லை நியூமென்ஸ் கல்வி நிலைய பணிப்பாளர் ஏ. பி. எம். ஹுஸைன் விசேட விருது வழங்கி கௌரவிப்பு



தினகரனின் 92 ஆவது பிறந்த தின நிகழ்வு லேக் ஹவுஸ் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. தினகரன் பத்திரிகையுடன் நெருங்கிப் பயணிக்கும் சமூகப் பணியாளர்களும், நீண்ட காலம் ஊடகத்துறையில் பணியாற்றிய ஊடகத் துறை சார்ந்தவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.




லேக் ஹவுஸ் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் சபைத் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசம் முன்னிலையில் தினகரன் , தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே. செந்தில் வேலவர் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் முக்கிய பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர்.

இதன் போது விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட மாவனல்லை நியூமென்ஸ் கல்வி நிலையத்தின் பணிப்பாளர் ஏ. பி. எம். ஹுஸைன் தினகரன் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி.

**உங்களது ஆரம்ப வாழ்க்கை பற்றிக் கூறுவீர்களா?**

நான் 1974.04.14 ஆம் திகதி மாவனல்லை ஹிங்குல் லோயா என்ற இடத்தில் பிறந்தவன். தாய் பெயர் கதீஜா பீபி . வயது 84 அவர் ஆரம்ப காலத்தில் ஆசிரியையாக கடமையாற்றியவர். திருமணத்துடன் அத்தொழிலை இடைநிறுத்தி விட்டார். தந்தை ஆதம்பிச்சை. வயது 88. அவர் கொழும்பில் வர்த்தகத் துறையில் ஈடுபட்டவர். எங்கள் குடும்பத்தில் ஆறுபேர். நான்காவது பிள்ளை கடைசிப் பிள்ளை நான்.

1980 களில் ஆரம்பக் கல்வியினை மாவனல்லை சாஹிராக் கல்லூரியில் கல்வி கற்பதற்காக இணைத்துக் கொள்ளப்பட்டேன். அதே பாடசாலையில் இடைநிலைக் கல்வி வரையிலும் கற்று, 1990 களில் க. பொ. த.சாதாரணப் பரீட்சைக்குத் தோற்றினேன். அதன் பிறகு தொடர்ந்து க. பொ. த உயர் தரம் விஞ்ஞானப் பிரிவில் கல்வி கற்று 1993 களில் பரீட்சைக்குத் தோற்றினேன். இக்கால கட்டத்தில் கல்வி பயிலும் போது பொருளாதார ரீதியாக பிரச்சினைகள எதிர்நோக்கியிருந்தோம். எவ்வாறாயினும் நாங்கள் கல்வியை விட்டு விடவில்லை. தாயார் உந்து சக்தியாக இருந்தார்.

நான் படிக்கின்ற போது மாணவத் தலைவராக இருந்துள்ளேன். அப்பொழுது வை. எல். எம். றாசிக் அதிபராகக் கடமையாற்றினார். மாணவப் பிரிவின் தலைவராக நான் தெரிவு செய்யப்பட்ட போது எனக்கு சின்னம் சூட்டி அந்த நியமனத்தை வழங்கி வைத்தார். அந்த ஞாபகார்த்த புகைப்படம் இன்னும் என்னிடம் இருக்கிறது. அவர் தற்போது உயிருடன் இல்லை.

மனைவியின் பெயர் எம். ஆர். எப். ரிஹானா. மகள் ஹஸ்ரா சாரா. பயோ மெடிக்கல் படித்துக் கொண்டிருக்கின்றார். அவர் எதிர்கால குறிக்கோள் வைத்தியராவது. மகன் எம். எச். ரிபா அஹ்மட். 10 ஆம் ஆண்டு கல்வி கற்றுக் கொண்டிருக்கின்றார். 2023 இல் சப்ரகமுவ மாகாணத்தில் இளம் கண்டு பிடிப்பாளர் போட்டியில் முதல் பரிசு பெற்றார். மகள் எம். எச். ஹயானா அய்ஸல். முன்னணிப் பாடசாலையில் கல்வி பயிலுகின்றார்.

**நீங்கள் தனியாக ஒரு கல்வி நிறுவனத்தை ஸ்தாபித்து இந்தளவுக்கு உயர்வதற்கு காரணமாக இருந்தவர் யார்?**

1993 களில் க. பொ. த உயர் தரப் பரீட்சை எழுதிய நாளில் இருந்து கற்பிக்க ஆரம்பித்து விட்டேன். நான் க. பொ. த உயர் தரம் படித்துக் கொண்டு இருக்கும் போது எனது வகுப்பு மாணவர்களுக்கு விளங்காத பாடங்களை விளங்கப்படுத்துவேன். இந்த முயற்சியை எனது தாயார் அவர்கள்தான் தூண்டி ஊக்குவித்தார்கள். 1994 இல் 'நியுமென்' என்ற பெயரில் தனியார் கல்வி நிறுவனத்தையும் ஸ்தாபித்தேன். இந்தக் கல்வி நிறுவனத்திற்கான பெயரையும் இட்டது எனது தாயார்தான். இந்தச் சந்தர்ப்பத்தில் என் தாயாருக்கும் தந்தைக்கும் நன்றி கூறிக் கொள்வதில் பெருமிதம் அடைகின்றேன்.

**இந்தக் கல்வி நிறுவனத்தை ஆரம்பிப்பதற்கான நோக்கம் யாது?**

இலங்கையின் கல்விக் கொள்கையின்படி ஆரம்பம் இடை நிலைக் கல்வி வரை கற்று பல்கலைக்கழகம் செல்வார்கள். இதில் பெரியதொரு தொகையிலான பிள்ளைகள் க. பொ. த.சாதாரணப் பரீட்சைக்கும் தோற்றியதுடன் இடை விலகி விடுவார்கள். அதாவது க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடையத் தவறிய மாணவர்கள் விளிம்பு நிலைக்கு பின்தள்ளப்படுகின்ற நிலைமைகள் காணப்பட்டன. அந்த மாணவர்களும் பல்கலைக்கழகம் செல்லலாம் என்ற தெளிவை வழங்குவதற்காக இந்த கல்வி நிறுவனம் தோற்றம் பெற்றது.

க. பொ. த சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடையத் தவறினாலும் க. பொ. த. உயர் கற்கையினை மேற்கொண்டு பரீட்சை எழுதி பல்கலைக்கழகம் செல்ல முடியும். இப்படியான மாணவர்களுக்கு வழிகாட்ட வேண்டும் என்ற அடிப்படையில் தான் இந்தக் கல்லூரியை ஆரம்பித்தேன். இது குறித்து இப்பொழுது பரவலாக எல்லோர் மத்தியிலும் தெளிவு இருக்கின்ற நேரத்தில் நாங்கள் கடந்த சுமார் மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் இத்திட்டத்தை ஆரம்பித்து வெற்றியுடன் நடைமுறைப்படுத்திக் கொண்டு இருக்கின்றோம் என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியும்.

எமது இந்தக் கல்வி நிறுவனத்தில் கல்வி கற்ற கணிசமானளவு மாணவர் மாணவிகள் பல்கலைக்கழகம் சென்று கல்வி கற்று இன்று உயர்ந்த நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

**நீங்கள் எதிர்நோக்கிய சவால்கள் பற்றி**

தனியார் கல்வி நிறுவனத்தில் க. பொ. த சாதாரணதரப் பெறுபேறுகள் இல்லாமல் பிரத்தியேகமான க. பொ. த.உயர் தர வகுப்புக்களை ஆரம்பித்து கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது இக்கல்வி நிறுவனம் முறையற்ற விதத்தில் செயற்படுகிறது. இக் கல்வி நிலையத்தில் கல்வி கற்பதில் பிரயோசனம் இல்லை என்ற பொய்யான குற்றச் சாட்டுக்களை முன் வைத்து மாணவர்களது வருகையை தடுப்பதில் ஆரம்ப காலத்தில்



முயற்சிகள் செய்தார்கள். இது தொடர்பில் பிள்ளைகள் விரக்தி நிலையில் இருந்தார்கள். இருப்பினும் அந்தப் பிள்ளைகளைத் திறன்படக் கற்பித்து அவர்களை பல்கலைக்கழகம் அனுப்பி சாதனைகள் படைத்தோம்.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் கீழ் தனியார் விஞ்ஞானக் கல்லூரியை ஆரம்பித்து க. பொ. த உயர் தர விஞ்ஞான பிரிவில் வகுப்புக்களை நடத்தி வருகின்றோம். இதன் மூலம் சிறந்த அறுவடைகளை பெற்று எமது மாணவர்கள் உயர் கல்வியினைக் கற்று வருகின்றார்கள். இன்று உதாரணமாக பேருவளை நளீமியா கலா பீடத்தில் கல்வி கற்ற பெரும்பான்மையான மாணவர்கள் இலங்கையில் உள்ள அரச நிறுவனங்களில் நிறையப் பேர் கடமையாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் யாவரும் வெளிவாரி பல்கலைக்கழகப் பரீட்சைக்குத் தோற்றி பட்டம் பெற்றவர்களே ஆவர். இதே போன்றுதான் எங்கள் நியுமென்ஸ் கல்வி நிறுவனத்தில் கல்வி கற்ற மாணவர்கள் யாவரும் வைத்தியராகவும் பொறியியலாளராகவும் கணக்காளர்களாகவும் பல்வேறு நாடுகளில் தொழில் புரிகின்றார்கள்.

குறிப்பாகச் சொல்லப் போனால் கல்வியில் விளிம்பு நிலையில் உள்ள பிள்ளைகளை ஒரு நல்ல நிலைக்கு கொண்டு வந்து பிற்காலத்தில் சரித்திரம் படைத்தவர்களாக உருவாக்குவதே எமது நோக்கம். அந்த அடிப்படையில் 28 வருட காலமாக இந்தக் கல்விப்பணியை மேற்கொண்டு வருகின்றேன். ஒரு தனி நபராக இருந்து செயற்பட்டு வருகின்றேன்.




**நீங்கள் ஒரு மாற்றுத் திறனாளியாக இருந்து கொண்டு பெரும் சாதனைகள் நிலைநாட்டி வருகின்றீர்கள்? அந்த வகையில் சவால்களை எப்படி எதிர்நோக்குகின்றீர்கள் என்று கூற முடியுமா?**

2002 இல் மின்சார ஊழியர் ஒருவர் வீட்டில் மின்வேலை செய்து கொண்டிருந்தார். இதன் போது அருகில் நின்று கொண்டிருந்தேன. இரும்புக் கம்பி மின்சாரக் கம்பியில் பட்டதால் என்னுடலை மின்சாரம் தாக்கியது. இதில் இரு கைகளை இழந்து கால் விரல்கள் இழந்து உடம்பில் 25 விகிதம் மின்சாரத் தாக்குதலுக்குள்ளாகி பாதிப்பு நிலை அடைந்தேன். ஆனாலும் உடல் நிலையை ஆரோக்கியமாக்கிக் கொண்டு ஒரு மாற்றுத் திறனாளியாக இருந்து கை விடாமல் தொடர்ந்து கல்வி நிலையத்தை இன்று வரை இயக்கி வந்துள்ளேன். குறையை குறையாக நினைக்காமல் மன உறுதியோடு மனைவி, பிள்ளைகள், ஆசிரியர் குழாம் ஆகியோர்களுடைய ஒத்துழைப்புடன் செயற்பட்டு வருகின்றோம்.

இந்தக் கல்வி நிலையத்தில் பணியாற்றுகின்ற ஆசிரியர் குழாத்தின் பங்களிப்பு அளப்பரியது. அவர்களுடைய ஒத்துழைப்பினால் இக்கல்வி நிறுவனத்தை தொய்வில்லாமல் திறன்பட படிப்படியாக ஒரு முன்னேற்றகரமான பாதையில் மேற்கொண்டு வருகின்றோம்.

எனக்கு இரு கைகள் இல்லா விட்டாலும் எனது காரை நானே செலுத்துமளவுக்கு இயங்கி வருகின்றேன். கைகள் உள்ள நேரத்தில் எவ்வகையிலான வேலைகளைச் செய்தேனோ அதே வேலைகளை கைகள் இல்லா நேரத்திலும் செய்து கொண்டு இருக்கின்றேன். வைத்திய சேவையைப் பெற்றுக் கொள்வதற்காக அமெரிக்காவுக்கும் தனியே சென்று வந்துள்ளேன் என்பது மிக முக்கியமான விடயமாகும்.

இந்த விபத்து ஏற்பட்ட ஆரம்பத்தில் நாள் முதல் இரு கைகளை இழந்தவன் என்ற நிலையிருந்தாலும் எனது மனைவின் பங்களிப்பு இருந்தமையால் எனக்கு கைகள் இல்லை என்ற நிலை இருக்கவில்லை. மனைவியினுடைய பங்களிப்பு விவரிக்க முடியாது. அதற்கு சொல்ல வார்த்தையில்லை. எனக்கு கையில்லை என்று நான் இது வரையிலும் யோசிக்க வில்லை. எல்லாவற்றுக்கும் பக்க பலமாக இருப்பவர் என் மனைவிதான்.

**உங்கள் சமூகப் பங்களிப்பு பற்றிக் கூறுவீர்களா?**

எங்கள் தாய், தந்தையர்கள் சிறிய வயதில் ஊட்டிய சிந்தனைகள்தான் இன்று நாங்கள் அடுத்தவர்களுக்கு செய்கின்ற சமூகப் பணியாகும். கல்விக்காக நிறையப் பங்களிப்புச் செய்துள்ளேன். வசதிகள் அற்ற பிள்ளைகள், கட்டணங்கள் அறவிடாமல் சலுகைகள் அடிப்படையில் இங்கே படித்தவர்கள் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக இருக்கின்றார்கள். ஆசிரியராக இருக்கின்றார்கள். இவ்வாறு பல்வேறு துறைகளில் சிறந்த உயர் பதவிகள் வகிக்கின்றார்கள் என்று கூறலாம்.

நூல்வெளியீடு போன்ற பொதுவாக கூட்டம் நடத்துவதற்கு எனது கல்வி நிலையத்தின் மண்டபத்தை வழங்கி உதவி செய்வேன். கேகாலை மாவட்டத்திலுள்ள சகல பாடசாலைகளுக்கு என்னால் இயன்ற பங்களிப்புக்களை வழங்கியுள்ளேன். இலவச கருத்தரங்குகள் நடத்துவதற்கான ஒத்துழைப்புக்களை வழங்கி வருகின்றேன். சில பாடசாலைகளில் நிலவும் சிறிய பௌதீக வளப் பற்றாக் குறைகளை நிவர்த்தி செய்வதற்காகவும் பங்களிப்புக்கள் நல்கியுள்ளேன். க. பொ. த சாதாரணப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள ஒரு பாடசாலைக்கு கணிதப் பாடத்தில் சகல மாணவர்களை சித்தியடையச் செய்யும் நோக்கில் ஒரு வேலைத் திட்டத்தை ஆரம்பித்து செயற்படுத்தி அப்பாடசாலை மாணவர்கள் 87 விகிதமான மாணவர்கள் சித்தியெய்தினார்கள். அதேபோன்று அப்பாடசாலையில் 85 மாணவர்கள் சித்தியினை அடைந்தனர்.

**நீங்கள் எவ்வகையிலான கல்வி நிலையங்களை நடத்தி வந்துள்ளீர்கள்?**

தற்போது மானல்லையில் அமைந்துள்ள எங்கள் கல்வி நிலையத்தில் முதலாம் ஆண்டு முதல் க. பொ. த உயர் தரம் வரையிலான பிள்ளைகள் கல்வி கற்கின்றனர். இவை தவிர கண்டியில் இரு சர்வதேசப் பாடசாலைகள் நடத்தி வந்தேன். ஒன்று 2011 -2018 களில் அல் இர்பான் சர்வதேச ஆண்கள் பாடசாலை. இப்பாடசாலையினை ஏழு வருடம் செய்தேன். 2019 களில் பிரைட் சர்வதேச பெண்கள் பாடசாலையினை ஆரம்பித்தேன். அதன் பிறகு அரச அங்கீகாரம் பெற்ற நியூமென்ஸ் உயர் தர விஞ்ஞானக் கல்லூரியினை ஆரம்பித்தேன். அது தற்போது வெற்றிகரமாக நடந்து கொண்டிருக்கிறது. இங்கு தங்கியிருந்து பிள்ளைகள் படித்து வருகின்றார்கள். நாட்டின் பல பாகங்களிலுள்ள பிள்ளைகளும் இங்கு கல்வி பயிலுகின்றனர். இக்கல்வி நிலையத்தில் இருந்து வைத்திய துறைக்கும் பொறியியற் துறைக்கும் கணிசமானளவு மாணவர்கள் பல்கலைக்கழகம் தெரிவு செய்யப்பட்டு வருகின்றனர்.

இவை தவிர ஏசியன் கெரஜ்வெட் கொலேஜ் என்ற பெயரில் பல்கலைக்கழக பட்டப் படிப்பு கற்கை நெறிகளையும் மேற்கொண்டு வருகின்றேன். இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவில் அங்கீகாரம் பெற்ற வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுடைய பட்டப் படிப்பை எமது ஏசியன் கெரஜ்வெட் கொலேஜ் ஊடாக கற்பித்து வருகின்றோம்.

அந்த வகையில் நாடளாவிய ரீதியில் நிறைய மாணவர் மாணவிகள் பயன் அடைந்து வருகின்றார்கள். இவ்வாறு பல்வேறு கல்வி நிறுவனங்களின் பணிப்பாளராகக் கடமையாற்றி வருகின்றேன் என்பது குறிப்பிடத்தக்கது.

**உங்களது கல்விச் சேவையை கருத்திற் கொண்டு கிடைக்கப் பெற்ற சான்றுகள் குறித்துக் கூற முடியுமா?**

நான் பாடசாலையில் கல்வி பயிலும் கால கட்டத்தில் கேகாலை மாவட்ட ஸ்ரீ லங்கா பௌத்த சங்கத்தின் தலைவர் சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்டது. சப்ரகமுவ கல்வி மேம்பாட்டுக்காக தொடர்ந்து பங்காற்றியமைக்காக மாவனல்லை கல்வி வலயத்தினால் சான்றிதழ் வழங்கி வழங்கப்பட்டது. 2014 ஆம் ஆண்டில் இந்தியாவிலுள்ள அமெரிக்கா பல்கலைக்கழகத்தின் மூலம் கலாநிதிப் பட்டம் வழங்கி வைக்கப்பட்டது.

நேர்காணல் : இக்பால் அலி

---

## கிழக்கின் குரல்

# நிலையான சமூக உறவை கட்டியெழுப்ப அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்

### தென்கிழக்கு பல்கலை உபவேந்தர் றமீஸ் அபூபக்கர்

**ஒலுவில் விசேட நிருபர்**

"நாட்டின் நிலையான அபிவிருத்திக்கும் சமூக உறவை கட்டியெழுப்புவதற்கும் நாம் எல்லோரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்" என, தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர், பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தெரிவித்தார்.

தென்கிழக்கு பல்கலைக்கழக சமூக நல்லிணக்க நிலையத்துடன் இணைந்து ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் பிரிட்டிஷ் கவுன்சில் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் மாற்றுவழி பிணக்கு தீர்வு தொடர்பான செயலமர்வில் கலந்துகொண்ட இளைஞர், யுவதிகளுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் சர்வமத கண்காட்சியும் ஒலுவில் விருந்தினர் விடுதியில் கடந்த ஞாயிறு (31) நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.



இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய அவர்,

"எதிர்காலத்தில் பிரச்சினைகளை பேசித் தீர்க்கக்கூடிய நிலையான திட்டவரைபை சர்வமத குழுவினர் ஏற்படுத்த வேண்டுமென்பதுடன், அதனூடாக நிரந்தர சமாதானத்தை கட்டியெழுப்ப முடியும்.

சகல சமூகங்களும் சமாதானத்தையும் சகோதரத்துவத்தையும் விரும்புகின்றது. ஒவ்வொரு சமூகத்தவர்களும் பரஸ்பர புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும். அப்போதே நாம் எதிர்பார்க்கின்ற நிலையான சமாதானத்தை அடைய முடியும்.

மத ஒற்றுமையையும் சமய சகவாழ்வையும் நம் தேசத்தில் கட்டியெழுப்புவதற்கு மூன்று இனங்களும் ஒற்றுமையாக வாழும் முன்மாதிரி பூமியாகிய அம்பாறை மாவட்ட மக்கள் பங்காளியாக இருப்பார்களென நம்புகிறேன்" என்றார்.

---

காசாவுக்கு

# சாய்ந்தமருது அல்ஹிலால் பாடசாலையால் நிதி உதவி

**கல்முனை விசேட, சாய்ந்தமருது விசேட நிருபர்கள்**

காசாவிலுள்ள சிறுவர்களின் நலன் புரி நடவடிக்கைகளுக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிதியத்துக்கு 2 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாவை சாய்ந்தமருது அல்ஹிலால் வித்தியாலயம் நன்கொடையாக வழங்கியுள்ளது.

பாடசாலை அதிபர், உதவி அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களிடமிருந்து இதற்கான நிதி திரட்டப்பட்டதுடன், இந்த நிதியை வலய கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹ்துல் நஜீமிடம் சாய்ந்தமருது அல்ஹிலால் பாடசாலை அதிபர் யூ.எல். நஸார் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (01) கையளித்து வைத்தார்.



வலயக் கல்விப் பணிமனையில் வைத்து இந்த நிதி கையளித்து வைக்கப்பட்டதுடன், இதில் கணக்காளர் வை.ஹபீபுல்லாஹ், பாடசாலை பிரதி அதிபர் நுஸ்ரத்பேகம், உதவி அதிபர்களான ஜஹ்பர், றொஸான் டிப்றாஸ், யூ.எல்.லாபிர், ஏ.எல். எம்.உவைஸ், ஆசிரியர் எம்.ஜாஸிர், அபிவிருத்தி உத்தியோகத்தர் எம். எம்.இல்யாஸ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

---

# மட்டக்களப்பு மாணவருக்கு இலவச கணினி பயிற்சி

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு பின்னர் பல்கலைக்கழகம் நுழைய முடியாத மற்றும் ஏனைய கற்கை நெறிகளை தொடர வசதி கிடைக்காத மட்டக்களப்பு மாவட்ட மாணவர்களின் நலன் கருதி இலவச கணினி பயிற்சி நெறி சிமாட் ஸ்ரீ லங்கா நிறுவனத்தால் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (01) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இவ்வாறான மாணவர்களுக்கு கணினி அறிவை வழங்கும் நோக்கில் சிமாட் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் இப்பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது.

மட்டக்களப்பு மாவட்ட உதவிச் செயலாளர் ஜீ.பிரணவனின் தலைமையில் நடைபெற்ற இதற்கான நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் ஜஸ்டினா முரளிதரன் கலந்துகொண்டார்.

---

# அம்பாறையில் களைகட்டி வரும் புடைவை வியாபாரம்

**நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்**

ரமழான் பண்டிகை மற்றும் சித்திரை புத்தாண்டு இம்முறை அடுத்தடுத்து வருவதால் கல்முனை, சாய்ந்தமருது, மருதமுனை பிரதேசங்களிலுள்ள புடைவைக் கடைகளில் வியாபாரம் அமோகமாக களை கட்டத் தொடங்கியுள்ளது.

இந்நிலையில் பலரும் கடைகளுக்கு திரண்டு சென்று புடைவைகளை கொள்வனவு செய்கின்றனர்.

மண்டூர் மத்திய முகாம், சவளக்கடை, நாவிதன்வெளி உள்ளிட்ட பிரதேசங்களிலிருந்து புடைவைக் கடைகளுக்கு மக்கள் செல்கின்றனர்.

தற்போது நிலவும் உஷ்ணமான காலநிலையை பொருட்படுத்தாமலும் மக்கள் புடைவைக் கொள்வனவில் ஈடுபடுவதாக, எமது செய்தியாளர் தெரிவிக்கின்றார்.



இந்நிலையில் மேற்படி பிரதேசங்களிலுள்ள கடைகளும் வியாபாரத்துக்காக பின்னிரவுவரை திறந்துள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

மாத்தளை மெர்க்ஸ் பௌண்டேஷன் ஏற்பாட்டில்...

# மூவின சமூக முக்கியஸ்தர்கள் பங்கேற்ற இன நல்லிணக்க இப்தார் நிகழ்வு












மாத்தளை, (MERCS) மெர்க்ஸ் பௌண்டேஷன் ஏற்பாட்டில் விசேட இப்தார் நிகழ்வு மாத்தளை ரைஸ்டார் ரீஜென்ஸ்சி திருமண மண்டபத்தில் அண்மையில் சிறப்பாக இடம்பெற்றது. இனங்களுக்கிடையே இன நல்லிணக்கம் புரிந்துணர்வை வலுப்படுத்தும் நோக்கில் சமூக நல்லிணக்கம் என்ற தொனிப்பொருளில் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டமை விசேட அம்சமாகும்.

மாத்தளை சர்வதேச ரோயல் ஆங்கிலக் கல்லூரியின் அதிபரும் மேற்படி அமைப்பின் தலைவருமான தேசமானிய கலாநிதி எம்.எம். ஹனீபா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மாத்தளை மாவட்ட செயலாளர் தேஜானி திலகரத்ன, மாத்தளை பிரதேச சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ரோஹன வலிகசேகர, மாவட்ட மேலதிக செயலாளர் திருமதி ரியால்தீன், மாத்தளை மாநகர சபை ஆணையாளர் நிஷந்த மாதுகே, மத்திய மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எம். சிவஞானம், மாத்தளை பௌத்த மந்திரத்தின் தலைவர் இசுறு ஜயவர்தன ஆகியோர் விசேட விருந்தினராக கலந்து கொண்டு இங்கு நல்லிணக்கம் தொடர்பாகவும் உரையாற்றினர்.

மேலும், மாத்தளை வைத்தியசாலை வைத்தியர்கள் மற்றும் பௌத்த, இந்து, கத்தோலிக்க ஆலயங்களிலுள்ள தர்மகர்த்தாக்கள், பள்ளிவாசல் நிர்வாகிகள், மௌலவிமார்கள், மாத்தளை கல்வி வலய அதிகாரிகள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், வர்த்தக பிரமுகர்கள், புத்திஜீவிகள் பலரும் இதில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இதில் விசேட சொற்பொழிவை மௌலவி லிஸான் ரம்ஸிலும் நன்றியுரையை அமைப்பின் செயலாளர் எம். எஸ். ஸுல்பிகார் ஆகியோர் நிகழ்த்தினர். கல்வி, கலாசாரம், சமயம், சுகாதாரம் சமூக மற்றும் மத நல்லிணக்கம் கொண்ட அமைப்பாக (MERCS) மெர்க்ஸ் பௌண்டேஷன் மாத்தளையில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

***(படமும் தகவலும்: எம்.சதூர்தீன் (JP), மாத்தளை சுழற்சி நிருபர்)***

# குருநாகல் முஸ்லிம் வர்த்தக சங்க ஏற்பாட்டில் இப்தார் விசேட நிகழ்வு

## சுமார் 1000 பேர் பங்கேற்பு






குருநாகல் முஸ்லிம் வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் குருநாகல் பெரிய பள்ளிவாசலில் நோன்பு துறக்கும் இப்தார் விசேட வைபவம் சங்கத்தின் தலைவர் எம். வை. ஏம். கியாஸ் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், குருநாகல் மாநகர ஆணையாளர் அஜந்த குணவர்த்தன கலந்து கொண்டு சிறப்பித்தார்.

மேலும் நிகழ்வில் குருநாகல் மாட்ட பொலிஸ் அத்தியட்சகர் கஸ்தூரி ஆராய்ச்சி, குருநாகல் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, சிங்கள வர்த்தக சங் கத்தின் தலைவர் சரத், வடமேல் மாகாண வர்த்தக சங்கத் தலைவர் கீர்த்தி, குருநாகல் மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் மொயினுதீன் அசார்தீன் மற்றும் ஜாமிஉல் அஸ்ஹர் ஜும்ஆப் பள்ளியின் தலைவர் மிலான் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் நகரிலுள்ள வர்த்தக நிலையங்களில் கடமையாற்றுகின்ற பெரு எண்ணிக்கையிலான மக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தமை விசேட அம்சமாகும்.

**இக்பால் அலி**

# மாணவர்களது கண் சுகாதாரத்தை கண்டறிய ஆசிரியர்களை பயிற்றுவிக்கும் செயற்றிட்டம்

## வடமாகாண ஆளுநரின் அறிவுறுத்தலுக்கிணங்க இன்று ஆரம்பம்

வடமாகாணத்திலுள்ள மாணவர்களது கண் சுகாதாரம் தொடர்பில் ஆராய்வதற்கான வேலைத்திட்டத்தின் முதற்கட்டப் பணிகள் இன்று (03) ஆரம்பிக்கப்படுகின்றன.

கண் சுகாதாரம் தொடர்பில் ஆசிரியர்களை பயிற்றுவிக்கும் செயற்பாடுகளை வலயக் கல்வி பணிமனைகளூடாக இன்று முதல் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இச்செயற்பாட்டின் ஆரம்ப நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்டு, பின்னர் ஏனைய மாவட்டங்களிலும் செயற்படுத்தப்படவுள்ளன.

ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிகளூடாக பாடசாலைகளில் மாணவர்களின் பார்வைத் திறன் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர், உரிய மாணவர்கள் பார்வை தொடர்பான சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்படவுள்ளனர். இவர்களில் தேவைப்படும் மாணவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்படவுள்ளன. மாணவர்களின் குடும்ப பொருளாதார நிலையினை கருத்திற் கொண்டு, மாணவர்களின் பாடசாலை கற்றல் நிறைவு பெறும் வரை தொடர்ச்சியாக இலவசமாக மூக்குக் கண்ணாடிகளை வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.



இந்த செயற்றிட்டத்தை ஆரம்பிப்பது தொடர்பில் வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தின் போது, ஆளுநரால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைய, மாகாண கல்வி மற்றும் சுகாதார அமைச்சுகள் இணைந்து இத்திட்டத்தில் பங்காற்றவுள்ளன.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் கண்வைத்திய நிபுணர் முத்துசாமி மலரவனின், வழிநடத்தலின் கீழ் 06 மாத காலத்துக்குள் இந்த செயற்றிட்டத்தை நிறைவு செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

மத்திய சுகாதார அமைச்சின் செயலாளர், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஆகியோரின் அனுமதியுடன் முன்னெடுக்கப்படும் இந்த விசேட திட்டத்திற்கு, மலேசியா நாட்டைச் சேர்ந்த அலாக்கா என்ற நிறுவனம் நிதி அனுசரணையை வழங்குவதுடன், ASSIST RR என்றழைக்கப்படும் புனர்வாழ்வும், புதுவாழ்வும் அமைப்பு திட்டத்தை நெறிப்படுத்துகிறது.

# வடக்கின் உதயம்

## வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொடர்ந்து அதிகரிக்கும் வெப்பம்

### செப்டெம்பர் மாதம் வரை தொடரும் என எச்சரிக்கை

**(யாழ். விசேட நிருபர்)**

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட்ட நாட்டின் பல பகுதிகளிலும் வெப்பநிலை மேலும் உயர்வடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. கரையோரப் பகுதிகளில் ஓரளவு வெப்பம் குறைவாக காணப்பட்டாலும் தாழ்நிலப்பகுதிகளில் வெப்பநிலை மிக உயர்வாக காணப்படும் என யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் நா.பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தின் வவுனியா, மாங்குளம், முறிகண்டி, நட்டாங்கண்டல், துணுக்காய், ஓமந்தை, கரிப்பட்ட முறிப்பு, சின்னத்தம்பனை, பாலைப் பாணி, மூன்றுமுறிப்பு, ஐயன் குளம், மடு, கீரி சுட்டான், தட்டாங்குளம் பகுதிகளில் காலை 10.00 மணி முதல் மாலை 3.30 மணி வரை வெப்பநிலை 41 பாகை செல்சியஸ் அண்மிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன்காரணமாக வடக்கு மாகாணத்தின் உள்நிலப்பகுதிகளின் பல இடங்களில் வெப்ப அலை (Heat Waves) வீசுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன.

வெப்பச்சலனம் காரணமாக ஆங்காங்கே ஒரு சில இடங்களில் பிற்பகல் 2.00 மணிக்கு பின்னரும் காலை 7.00 மணிக்கு முன்னரும் மிதமான மழைவீழ்ச்சி கிடைக்க வாய்ப்புள்ளது.

எனினும் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் வரை வெப்பநிலை உயர்வாகவே இருக்கும். எனவே அதிகரிக்கும் வெப்பநிலை, வெப்ப அலை தொடர்பிலும் எச்சரிக்கையாக இருப்பது சிறந்தது. அதிகரித்த வெப்பநிலையை கருத்திற் கொண்டு எமது அன்றாட செயற்பாடுகளை மேற்கொள்வது பொருத்தமாகவிருக்குமென அவர் தெரிவித்துள்ளார்.


## 'அரசறிவியலாளன்' நூல் வெளியீட்டுவிழா

**(கரவெட்டி தினகரன் நிருபர்)**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அரசறிவியல் ஒன்றியத்தின் இதழான 'அரசறிவியலாளன்' இதழ் வெளியீட்டுவிழா இன்று புதன்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் கைலாசபதி கலையரங்கில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரசறிவியல் ஒன்றியத்தின் தலைவர் சு.டிலக்சன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராசா, சிறப்பு விருந்தினராக கலைப்பீட பீடாதிபதி சி. ரகுராம், கௌரவ விருந்தினர்களாக அரசறிவியல்துறை தலைவர் பேராசிரியர் கே.ரீ. கணேசலிங்கம், அரசறிவியல் துறை விரிவுரையாளர்களான ந. தர்மினி, கு. யஸ்மிகா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

## நல்லூரில் இலக்கியச்சுடர் த. இராமலிங்கம் பங்குகொள்ளும் சிறப்பு நிகழ்ச்சிகள்



தமிழகத்தின் பிரபல பேச்சாளர் இலக்கியச் சுடர் த. இராமலிங்கம் பங்குகொள்ளும் சிறப்பு நிகழ்ச்சிகள் அறிவாலயம் ஆளுமை விருத்திப் பயிலகத்தின் ஏற்பாட்டில் நல்லூர் ஆதீன பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 6ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளன.

அறிவாலயம் ஆளுமை விருத்திப் பயிலக இயக்குநரும் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளருமாகிய இ.சர்வேஸ்வரா தலைமையில் காலை 9 மணிக்கு நடைபெறும் அமர்வில் பட்டிமன்றங்களில் பேசும் ஆர்வமுள்ள இளையோருக்கான பயில்களம் நடைபெறவுள்ளது. செந்தமிழ்ச்சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறவுள்ள மாலை அமர்வில் இலக்கியச்சுடர் த. இராமலிங்கத்தை நடுவராகக் கொண்டு சிந்தனை அரங்கம் நடைபெறவுள்ளது.

இளைஞர்களின் எதிர்காலத்தை சிறப்பாகச் செப்பனிடுவது எந்தச் சூழல் என்ற பொருளில் இடம்பெறும் சிந்தனை அரங்கில், வீட்டுச் சூழலே என தென்னாடு ஆசிரியர் ஜீவா சஜீவனும் கல்விச் சூழலே என மருத்துவபீட மாணவி ந. அபிராமியும் நட்புச் சூழலே என உதவி விரிவுரையாளர் விக்கி. சாரங்கனும் சமுதாயச் சூழலே என தமிழ்நாடு தேவகோட்டை வி.யோகேஸ்குமாரும் கருத்தாடவுள்ளனர்.

### கிளிநொச்சியில்

## சர்வதேச கண்ணிவெடிகள் விழிப்புணர்வு தின நிகழ்வு

சர்வதேச கண்ணிவெடிகள் விழிப்புணர்வு தினத்தை முன்னிட்டு MAG அமைப்பின் (Mines Advisory Group) ஏற்பாட்டில் நிகழ்வொன்று கிளிநொச்சியில் எதிர்வரும் சனிக்கிழமை (06) நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி பொது மைதானத்தில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணிவரை இந்நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு தேசிய கண்ணிவெடிகள் அகற்றும் நிலையம் அனுசரணை வழங்கவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக நகர அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கலந்து கொள்ளவுள்ளதுடன், அரசாங்க திணைக்களங்களின் உயர் அதிகாரிகளும் கலந்துகொள்ளவுள்ளனர். இதன்போது வெடிபொருட்களின் அபாயம் தொடர்பாகவும் கண்ணிவெடிகள் மற்றும் யுத்தத்தின் போது ஏனைய எச்சங்களை கையாளும் போதும் சிறந்த நடைமுறைகளை பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டும் வகையில் கருத்தரங்கு நடத்தப்படவுள்ளதாக இதன் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

அத்துடன், நட்புறவு கிரிக்கெட் போட்டி உள்ளிட்ட நிகழ்வுகளும் அன்றையதினம் கிளிநொச்சியில் நடைபெறவுள்ளதுடன், இதில் MAG இன் சகல பணியாளர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

## இளைஞனின் கை துண்டிப்பு; மைத்துனர் கைது

**(நாகர்கோவில் விஷேட நிருபர்)**

புலோலி வட்டுவனைப் பகுதியில் இளைஞன் ஒருவனின் கையை வாளால் வெட்டி மணிக்கட்டுடன் துண்டித்த சந்தேகநபரை பருத்தித்துறை பொலிஸார் கைது செய்துள்ளனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை (31) இரவு அப்பகுதியைச் சேர்ந்த செல்வநாயகம் செந்தூரன் என்பவரை அவரது மைத்துனர் வாளால் வெட்டியதில் மணிக்கட்டுடன் கை துண்டிக்கப்பட்டது.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய மைத்துனரான துன்னாலை மேற்கைச் சேர்ந்த 26 வயதுடைய சந்தேகநபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# தோட்ட மேற்பார்வையாளர்களாக முதன்முறையாக பெண்கள் நியமனம்





ஹற்றன் பிளான்டேஷன்ஸ் தோட்ட நிர்வாகம் உயர்தொழில் நுட்பத்துடன் தோட்ட மேம்பாட்டுத்திட்டங்களை முன்னெடுத்துவருகிறது.

பெருந்தோட்ட பெண்களுக்கு அதிகாரமளிக்கும் வகையில் தோட்ட உத்தியோகத்தர் தொழில் துறையிலும் விசேடமாக மேற்பார்வையாளர்கள் தரத்தில் இதுவரை முக்கியத்துவம் வழங்கப்படாதிருந்த பெண்களுக்கு முக்கிய இடத்தை நிர்வாகம் வழங்கியுள்ளது.

ஹற்றன் பிளான்டேஷன்ஸ் தனது தோட்ட மேம்பாட்டுத் திட்டத்தில் முன்னேற்றக்கரமான நடவடிக்கையின் கீழ் புதிய டிஜிட்டல் தொழில் நுட்பங்களை கொண்டு வரவுள்ளதாக ஹற்றன் பொது முகாமையாளர் வருண பெர்னாண்டோ ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

புனரமைப்பு திட்டத்தின் கீழ் மீள் நடல் உள்ளிட்ட அபிவிருத்திகளுக்காக 300 மில்லியன் ரூபாவுக்கும் மேம்பட்ட தொகை முதலீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

தொழிலாளர் பற்றாக்குறை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் தற்போது தோட்டங்களில் நிலவுவதால், தேயிலை கொழுந்து பறித்தல் உள்ளிட்டவற்றுக்கு இயந்திர தேயிலை அறுவடை முறையை இலங்கையில் விரிவுபடுத்த வேண்டுமென பொது முகாமையாளர் தெரிவித்தார்.

அதற்காக மகளிர் அறுவடைக் குழுத்தலைவர்களை நியமித்துள்ளதாகவும், இது இலங்கையில் முதன் முறையாக முன்னெடுக்கப்பட்ட முயற்சியாகும். சீனாவிலிருந்து 80 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான முதலீட்டில் இறக்குமதி செய்யப்பட்ட அறுவடை இயந்திரங்களை அறிமுகப்படுத்தியிருப்பதாகவும் பெர்னாண்டோ மேலும் தெரிவித்தார்.



# மலைச்சாரல்

### இந்திய உதவி உயர்ஸ்தானிகராலயத்தின் ஏற்பாட்டில்

## கண்டி ஹந்தானையில் 400இற்கும் மேற்பட்டவர்களுக்கு அன்னதானம்





உயிர்த்த ஞாயிறு தினத்தை முன்னிட்டு இந்திய உதவி உயர்ஸ்தானிகராலயத்தின் ஏற்பாட்டில் அன்னதான நிகழ்வொன்று கண்டி ஹந்தானை புனித செபஸ்டியன் தேவாலயத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கண்டி ஹந்தானை பெருந்தோட்டப்பகுதிகளில் வாழும் 400ற்கும் மேற்பட்டவர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

கண்டி உதவி உயர்ஸ்தானிகராலயம் ஆரம்பிக்கப்பட்டு 100 ஆண்டுகள் பூர்த்தியாவதை முன்னிட்டு, கலாசார உறவுகளை வலுப்படுத்தும் வகையில் பல்வேறு வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதில் ஒன்றாகவே மேற்படி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதில் இந்திய உதவி உயர்ஸ்தானிகர் டொக்டர் எஸ். ஆதிரா உட்பட ஸ்தானிகராலய உத்தியோகத்தர்கள், அருட்தந்தை எச். நெரியோ ஆபிரகாம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## மாவனல்லை மரண விசாரணை அதிகாரியாக நியமனம்



மாவனல்லையில் மரணவிசாரணை அதிகாரியாக கடுகண்ணாவையை பிறப்பிடமாகவும், மாவனல்லையை வசிப்பிடமாகவும் கொண்ட எம். ஆர். முகம்மத் மசூர் நியமிக்கப்பட்டுள்ளார். மாவனல்லை நீதிமன்ற நீதவான் டப்ளியூ. ஏ.எஸ். அனுராத வீரக்கொடி முன்னிலையில் திடீர் மரண விசாரணை அதிகாரியாக இவர் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

தனது ஆரம்பக் கல்வியை இலுக்குவத்தை முஸ்லிம் வித்தியாலயத்திலும், சாதாரண தர கல்வியை கண்டி புனித சில்வஸ்டர் கல்லூரியிலும் உயர்தர கல்வியை மாவனல்லை ஸாஹிரா தேசிய கல்லூரியிலும் பெற்ற இவர், தனது பட்டப்படிப்பையும், மொழிபெயர்ப்பாளர் கற்கை நெறியையும் பேராதனை பல்கலைக்கழகத்தில் கற்றுள்ளார்.

### பெருந்தோட்ட தொழிலாளர்களின் உரிமைகளை முன்னிறுத்தி

# மலையகம் எங்கும் 10,000 கையெழுத்து திரட்டும் பணி

## இன்று முதல் 10 ஆம் திகதி வரை இ.தொ.கா முன்னெடுப்பு

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஏற்பாட்டில் சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் பங்களிப்புடன் தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படை தேவைகளையும், உரிமைகளையும் அரசு அங்கீகரித்து அதற்கான சட்டமூலத்தின் ஊடாக தேவைகளை அமுல்படுத்த வேண்டி அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் மலையகம் எங்கும் 10,000 கையெழுத்து திரட்டும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதன் அறிமுக நிகழ்வு இன்று (03) கொட்டகலை காங்கிரஸ் தொழில் நிறுவன வளாகத்தில் நடைபெறவுள்ளதாக இ.தொ.கா ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. ஒருவாரகாலத்திற்குள் 10 ஆயிரம் கையெழுத்துக்களை திரட்டுவதற்கான பணிகள் ஏற்பாடாகிவருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தினால் தொழில் உரிமைகள் தொடர்பில் வெளியிட்டுள்ள பிரசுரத்தின் வாயிலாக C155,C187,C190ஆகிய எண்களின் அடிப்படையில் வேலைத்தள பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் சட்டத்தை உடனடியாக அங்கீகரித்தல், வேலைத்தள பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் சட்டத்தை அமுலுக்கு உடன் கொண்டுவருதல், வேலைத்தளங்களில் பெண்களுக்கு எதிரான வன்முறையை தடுத்தல். இவற்றை முன்நிறுத்தியே முழு மலையகத்திலும் சுமார் 10 ஆயிரம் கையெழுத்து திரட்டலை அவ்வப் பிரதேச தோட்டத் தொழிலாளர்கள் ஒன்றிணைந்துமேற்கொள்ளவுள்ளனர்.

இதன்படி, தலவாக்கலை, நுவரெலியா, ஹற்றன், இராகலை, பதுளை, பண்டாரவளை, புசல்லாவ, மாத்தளை, இரத்தினபுரி, அவிசாவளை உள்ளிட்ட பிரதேசங்களிலும் குறிப்பாக முழு மலையகத்திலும் இன்று தொடக்கம் 10ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் இக்கையெழுத்து திரட்டல் பணிகள் தொடரும்.

## பேராதனையில் ரயில் மோதி பல்கலைக்கழக மாணவன் பலி

**(அக்குறணை குறூப் நிருபர்)**

பேராதனை பெனிதெனிய பிரதேசத்தில் ரயிலில் மோதி பல்கலைக்கழக மாணவன் ஒருவன் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தொலைபேசியில் கதைத்தவாறு ரயில் பாதையில் சென்றுக்கொண்டிருக்கும் போதே இச்சம்பவம் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கற்கும் மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பேராதனை பொலிஸார் தெரிவித்தனர்.

மாணவன் ஹேண்ட்ஸ் ஃப்ரீயை (hand free ) தனது காதில் அணிந்துக்கொண்டு ரயில் பாதையில் நடந்துக்கொண்டிருக்கும்போது நாவலப்பிட்டி கண்டி ரயிலில் மோதியே இவ்விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். இதுதொடர்பிலான மேலதிக விசாரணைகளை பேராதனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

சாய்ந்தமருதில்

# பழுதடைந்த மீன்கள் அழிப்பு

## எலி எச்சங்கள் காணப்பட்ட உணவுகளும் PHIயினரால் மீட்பு

**கல்முனை மத்திய தினகரன் நிருபர்**

அம்பாறையின் சாய்ந்தமருது பிரதேசத்தில் பழுதடைந்த மீன்கள் மற்றும் பாவனைக்கு உதவாத உணவுப் பண்டங்களையும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கைப்பற்றியுள்ளனர்.

சாய்ந்தமருதிலுள்ள உணவகங்கள், சந்தை, சில்லறைக் கடைகள், மொத்த விற்பனை நிலையங்கள், சிறிய சூப்பர் மார்க்கட்டுகள் ஆகியவற்றில் நேற்று செவ்வாய்க்கிழமை (02) நான்காவது நாளாகவும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சோதனை மேற்கொண்டனர்.

இதன்போது பழுதடைந்த மீன்களையும் பேக்கரிகளில் மனித பாவனைக்கு உதவாத வகையில் எலி எச்சங்கள் காணப்பட்ட உணவுப் உணவுப் பண்டங்களையும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கைப்பற்றியுள்ளனர்.

இந்நிலையில் பழுதடைந்த மீன்களை எரிபொருள் ஊற்றி பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் அழித்துள்ளனர்.

நோன்பு காலத்தில் பொதுமக்களுக்கு சுத்தமான உணவுப் பண்டங்கள் விற்பனை செய்யப்படுவதை உறுதி செய்யும் நோக்கில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கலாநிதி ஸஹீலா இஸ்ஸதீனின் ஆலோசனைக்கமைய, சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி எம்.ஜே.கே.எம்.அர்ஷாத் காரியப்பர் தலைமையில் இச்சோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன்போது சுகாதார நடைமுறைகளை பேணி உணவுகளை தயாரிக்குமாறும், உணவங்களில் தூய்மையை பேணுமாறும், உணவு கையாளுகையில் முறையான ஒழுங்கை பேணுமாறும், சமையல் பாத்திரங்கள் உள்ளிட்ட பொருட்களின் சுகாதாரத்தை பேணுமாறும் உணவக உரிமையாளர்களுக்கு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

இந்நிலையில் இந்த அறிவுறுத்தல்களை பேணி நடக்காத உணவகங்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் எச்சரித்துள்ளனர்.

# தம்பலகாமம் பிரதேச செயலக இப்தார் நிகழ்வு



**தம்பலகாமம் குறூப் நிருபர்**

தம்பலகாமம் பிரதேச செயலகத்தின் இப்தார் நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை (01) மாலை அப்பிரதேச செயலக வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது.

சமய நல்லிணக்க விடயங்களை புரிந்துகொள்ளும் வகையிலும் இனங்களுக்கிடையில் சகவாழ்வு மற்றும் சகோதரதத்துவத்தை ஏற்படுத்தும் வகையிலும் தம்பலகாமம் பிரதேச செயலகத்தினுடைய இஸ்லாமிய நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் இப்தார் நிகழ்வு நடத்தப்பட்டது. இதன்போது நோன்பின் மகத்துவம் தொடர்பாக ஜம்மியத்துல் உலமா சபையின் தம்பலகாமம் பிரதேச தலைவர் மௌலவி குசைன் பயான் நிகழ்த்தினார்.

இதில் தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி, உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப், தம்பலகாமம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, சர்வமதத் தலைவர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்களாகிய பலரும் கலந்துகொண்டனர்.

# திருகோணமலை பாடசாலை அதிபர்களுக்கு செயலமர்வு

**தோப்பூர் குறூப் நிருபர்**

திருகோணமலை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அதிபர்களுக்கு 'Tredns in Education' எனும் தொனிப்பொருளின் கீழ் செயலமர்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை (01) திருகோணமலை MDTU கட்டட ஒன்றுகூடல் மண்டபத்தில் நடத்தப்பட்டது.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் ஏற்பாட்டிலும் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் சுஜாதா குலேந்திரகுமார் தலைமையிலும் இச்செயலமர்வு நடத்தப்பட்டதுடன், இதில் திருகோணமலை, கிண்ணியா மற்றும் மூதூர் கல்வி வலயங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அதிபர்கள் பங்குபற்றினர்.

இச்செயலமர்வில் வளவாளராக இந்தியாவின் தமிழ்நாட்டைச் சேர்ந்த கல்வியலாளர் புஸ்பலதா பூரணன் பங்குபற்றி விளக்கமளித்ததுடன், கிழக்கு மாகாண திட்டமிடல் பிரதி கல்விப் பணிப்பாளர் எஸ்.துஸ்யந்தன், பிரதி கல்விப் பணிப்பாளர் நிமலரஞ்சன் மற்றும் 100 அதிபர்களும் செயலமர்வில் பங்குபற்றினர்.

# இறக்காமத்தில் இளைஞர்களுக்கு தலைமைத்துவ பயிற்சிப்பட்டறை



**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**

இறக்காமம் பிரதேச இளைஞர் சம்மேளனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இளைஞர்களுக்கான தலைமைத்துவ பயிற்சிப்பட்டறையின் ஆரம்ப நிகழ்வு, இறக்காமம் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (01) நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து அங்கு இப்தார் நிகழ்வும் நடைபெற்றது.

இளைஞர் சம்மேளனத் தலைவர் எஸ்.எம்.அஹமட் றிஜாஸின் தலைமையில் இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர் ஏ.ஆர்.றியாஸின் நெறிப்படுத்தலில் நடைபெற்ற இப்பயிற்சிப்பட்டறையில் இறக்காமம் ஜம்மியத்துல் உலமா கிளைத் தலைவர் மௌலவி எம்.எச். வஹாப் வளவளாராக கலந்து கொண்டு உரையாற்றினார்.

இறக்காமம் பிரதேச செயலக உளவளத்துறை ஆலோசகர் ஏ.எச். றகீப், இறக்காமம் பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி எம்.ஐ.ஜௌபர் உட்பட பிரமுகர்கள், இளைஞர் சம்மேளன உறுப்பினர்களாகிய பலரும் கலந்து கொண்டனர்.

# குருக்கள்மடத்தில் விபத்து; சாரதி காயம்



**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு கல்முனை பிரதான வீதியில் குருக்கள்மடம் பிரதேசத்தில் நேற்று செவ்வாய்கிழமை (02) இடம்பெற்ற விபத்தில் கெப் ரக வாகன சாரதி காயமடைந்துள்ளார்.

சுற்றுலாப் பயணிகளை ஏற்றுக்கொண்டு பயணிக்கும் இந்த கெப் ரக வாகனம் அதன் வேகக் கட்டுப்பாட்டை இழந்து, வீதியோரத்திலிருந்த மின்கம்பமொன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதன்போது அவ்வாகனத்தில் சாரதி மாத்திரமே பயணித்ததாகத் தெரிவித்த பொலிஸார், சாரதியின் உறக்க களைப்பே விபத்துக்கு காரணமாக இருக்கலாமெனவும் தெரிவித்தனர்.

இதனால் இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான 4 பாரிய மின்கம்பங்கள் உடைந்து முற்றாக சேதமடைந்துள்ளதுடன், கெப் ரக வாகனமும் பாரிய சேதத்துக்குள்ளாகியது.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக களுவாஞ்சிக்குடி பொலிஸார் விரிவான விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

# சம்மாந்துறை பயனாளிகளுக்கு சௌபாக்கியா வீடுகள் கையளிப்பு

வீடுகளை அம்பாறை மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் கையளித்தார்



**கல்முனை மத்திய தினகரன் நிருபர்**

அம்பாறையின் சம்மாந்துறை பிரதேசத்தில் சௌபாக்கியா திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளை பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை (02) நடைபெற்றது.

சம்மாந்துறை சமுர்த்தி பிரிவின் ஏற்பாட்டில் இந்த வீடுகள் நிர்மாணிக்கப்பட்டதுடன், சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல். முஹம்மது ஹனிபாவின் தலைமையில் இந்த வீடுகள் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எம்.ஏ.சி.அஹமது ஷாபீர் பிரதம அதிதியாக கலந்துகொண்டதுடன், பயனாளிகளிடம் வீடுகளை திறந்துவைத்து கையளித்தார். இந்நிகழ்வில் கௌரவ அதிதியாக உதவி பிரதேச செயலாளர் யூ.எம்.அஸ்லம், சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் யூ.எல்.எம்.சலீம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# அட்டாளைச்சேனையில் 05 பயனாளிகளுக்கு காசோலை

**திராய்க்கேணி தினகரன் நிருபர்**



நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் நிதி அனுசரணையின் கீழ் அட்டாளைச்சேனையில் தெரிவு செய்யப்பட்ட 5 பயனாளிகளுக்கு நேற்று செவ்வாய்க்கிழமை காசோலை வழங்கி வைக்கப்பட்டது. தலா 3,000 ரூபா பெறுமதியான காசோலை ஒவ்வொரு பயனாளிக்கும் வழங்கி வைக்கப்பட்டது.

அ ட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் அதன் உதவி பிரதேச செயலாளர் சட்டத்தரணி நஹிஜா முசாபிரினால் பயனாளிகளுக்கு இக்காசோலை வழங்கி வைக்கப்பட்டது. இதன்போது சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் ஹஸ்பியாவும் கலந்து கொண்டார்.

# மட்டு. பொலிஸாரின் இப்தார் நிகழ்வு




மட்டக்களப்பு மாவட்ட பொலிஸாரின் இப்தார் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை பொலிஸ் அத்தியட்சகர் அலுவலக வளாகத்தில் நடைபெற்றது. (புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு அரசாங்கம்

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

வீதி அபிவிருத்தி அதிகாரசபை

விலைமனுக்களுக்கான அழைப்பு

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தப் பெயர் |
|---|---|
| RDA/SP/1500km/NP/12 | பரசங்குள லக்கா திட்ட வீதிக்கான மேம்படுத்தல் |

தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் மேலேயுள்ள வேலைக்காக விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர் வீஅஅ மற்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் **www.rda.gov.lk** என்ற இணையபக்கங்களை 2024 ஏப்ரல் 3 ஆம் திகதியிலிருந்து 2024 ஏப்ரல் 17 ஆம் திகதியன்று வரையும் பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

# கல்முனை ரஹ்மத் பவுண்டேஷனின் இப்தார்



**பெரியநீலாவணை விசேட நிருபர்**

கல்முனை ரஹ்மத் பவுண்டேஷன் ஏற்பாடு செய்த இப்தார் நிகழ்வு கல்முனை கிரீன் பீல்ட் வீட்டுத் திட்டத்தில் அமைந்துள்ள முகைதீன் பள்ளிவாசலில் நேற்று நடைபெற்றது.

கடந்த சுனாமி அனர்த்தத்தின் பின்னர் கல்முனை கிரீன் பீல்ட் வீட்டுத்திட்டம் அமைக்கப்பட்டதுடன், இந்த வீட்டுத் திட்டத்தில் வாழும் முஸ்லிம் மக்கள் தமது மதக் கடமைகளை நிறைவேற்றுவதற்கு உருவாக்கப்பட்ட பள்ளிவாசலே முகைதீன் பள்ளிவாசலாகும்.

இந்த இப்தார் நிகழ்வில் பள்ளிவாசல் கட்டுமான பணிக்கு உதவி செய்தவர்கள், பொதுமக்கள், நலன்விரும்பிகளாகிய பலரும் கலந்துகொண்டனர்.

சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டர்மினல்ஸ் லிமிட்டட்

2024 ஆம் ஆண்டின் சிங்கள/ தமிழ் புத்தாண்டு விடுமுறைக் கால எல்லையின்போது எரிபொருள் விநியோக செயற்பாடானது பின்வருமாறு முன்னெடுத்துச் செல்லப்படும்.

| திகதி | | கட்டளைகளை தயாரித்தல் | எரிபொருள் விநியோக இடங்கள் |
|---|---|---|---|
| | | கொலொன்னாவ, முத்துராஜவெல முனையங்கள் பேரளவிலான டிப்போக்களின் எண்ணெய் தாங்கி தொகுதிகள் | கொலன்னாவ,முத்துராஜவெல முனையங்கள் பேரளவிலான டிப்போக்களின் எண்ணெய் தாங்கி தொகுதிகள் |
| 2024.04.08 (திங்கட்கிழமை) | | 2024.04.09ஆம் திகதியன்று விநியோகிப்பதற்கான கட்டளைகளை தயாரித்தல் | எரிபொருள் விநியோகங்கள் வழமைபோல் நடைபெறும். |
| 2024.04.09 செவ்வாய்கிழமை) | | 2024.04.10ஆம் திகதியன்று விநியோகிப்பதற்கான கட்டளைகளை தயாரித்தல் | எரிபொருள் விநியோகங்கள் வழமைபோல் நடைபெறும். |
| 2024.04.10 (புதன்கிழமை) | | 2024.04.11 வியாழக்கிழமையன்று அவசர சேவைகளுக்காக மாத்திரம் விநியோகிப்பதற்கான கட்டளைகளை தயாரித்தல் | எரிபொருள் விநியோகங்கள் வழமைபோல் நடைபெறும். |
| 2024.04.11 (வியாழக்கிழமை) | | 2024.04.12ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்று விநியோகிப்பதற்கான கட்டளைகளை தயாரித்தல் | எரிபொருள் விநியோகங்கள் வழமைபோல் நடைபெறும். |
| 2024.04.12 (வெள்ளிக்கிழமை) | சிங்கள / தமிழ் புத்தாண்டிற்கு முன்தினம் | 2024.04.15ஆம் திகதி திங்கட்கிழமையன்று விநியோகிப்பதற்கான கட்டளைகளை தயாரித்தல் | எரிபொருள் விநியோகங்கள் வழமைபோல் நடைபெறும். |
| 2024.04.13 (சனிக்கிழமை) | சிங்கள-தமிழ் புத்தாண்டு தினம் | மூடப்பட்டிருக்கும் | மூடப்பட்டிருக்கும் |
| 2024.04.15 (திங்கட்கிழமை) | | 2024.04.16 ஆம் திகதி விநியோகிப்பதற்கான கட்டளைகளை தயாரித்தல் | எரிபொருள் விநியோகங்கள் வழமைபோல் நடைபெறும். |
| | கொலொன்னாவ தாங்கி | | முத்துராஜவெல முனையம் |
| | விநியோக அலுவலகம் | போக்குவரத்து அலுவலகம் கட்டளைகள் பிரிவு | விநியோக அலுவலகம் |
| தொலைபேசி இலக்கம் | 112572336, 112572158 | 0112531324, 0112696542, 112532131/0115668472 | 0112947586/0113193924,113193923 |
| தொலைநகல் | 112572380 | 112531325 | 112947589 |

விநியோக முகாமையாளர், சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டெர்மினலஸ் லிமிட்டட்.

தினகரன்
THINAKARAN
தினகரன்

# கேள்வி மற்றும் ஏனைய விளம்பரங்கள்

## சுகாதார சேவைத் திணைக்களம் - ஊவா மாகாணம்

### பெறுகை அறிவித்தல்

### நாய்களை மலடாக்குதல் — 2024

**ஊவா மாகாணத்தின் பதுளை மற்றும் மொனராகலை ஆகிய இரு மாவட்டங்களை உள்ளடக்குமாறு நாய்களை மலடாக்குவதற்காக கேள்விகள் கோரப்படுகின்றன.**

| தொ.இல | மாவட்டம் | மலடாக்க வேண்டிய நாய்களின் எண்ணிக்கை | கேள்விப்பிணைத் தொகை | மீளளிக்கப்படாத கேள்வி மாதிரிப் பத்திரக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 01 | மொனராகலை மாவட்டம் | 1000 | 60,000.00 | ரூ. 3500.00 |
| 02 | பதுளை மாவட்டம் | 1000 | | |

மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படுமாறு கேள்வி மாதிரிப்பத்திர கட்டணத்தை மாகாண சுகாதார சேவைத் திணைக்களத்தின் நிதி உதவியாளருக்கு காசாகச் செலுத்தி பற்றுசீட்டை சமர்ப்பித்தல் பின்னர் பற்றுச்சீட்டை சமர்ப்பித்த பின்னர் கேள்வி விண்ணப்பங்களை ஊவா மாகாண சுகாதார சேவைத் திணைக்களத்திலிருந்து விநியோகிக்கப்படும் - 2024.04.03 முதல் 2024.04.29 வரை வாரத்தின் வேலை நாட்களில் பிற்பகல் 3.30 வரை கேள்வி மாதிரிப் பத்திரங்கள் விநியோகிக்கப்படுவதுடன், காசு ஏற்கப்படுவது வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை மாத்திரமே கேள்விப்பிணைக் கட்டணத்திற்காக வங்கி பிணையொன்று சமர்ப்பிப்பதாயின் மேலே குறிப்பிடப்படும் கேள்விப் பிணைக் கட்டணம் போன்று இரு மடங்காக இருத்தல் வேண்டும்.

- கால்நடை மருத்துவர்களின் சங்கத்தில் பதிவு மற்றும் இரு வருட சேவை அனுபவமுள்ள நிறுவனங்கள் அல்லது தனி நபர்களுக்கு விண்ணப்பிக்கலாம்.
- சகல கொடுப்பனவுகளும் காசாக மாத்திரம் ஏற்கப்படும் - 02 பிரதிகளுடன் விநியோகிக்கப்படும் கேள்வி மாத்திரிப் பத்திரங்களை முறையாக ஒரே விதத்தில் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். கேள்வி மாதிரிப் பத்திர சோடியை அதாவது மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியை வேறுவேறாக உறைகளில் இட்டு பொறியிட்டு இவ் உறைகள் இரண்டையும் ஒரு உறையில் இட்டு உறையின் இடதுபக்க மேல் மூலையில் "நாய்களை மலடாக்குதல் - 2024" என்று குறிப்பிட்டு, அதற்குக் கீழ் விண்ணப்பதாரியின் பெயர் மற்றும் முகவரியைக் குறிப்பிடுதல் வேண்டும்.
- பொறியிடப்பட்ட கேள்விகள் 2024.04.29 பி.ப. 2.00 இற்கு முன் ஊவா மாகாண சுகாதார சேவைத் திணைக்களத்தின் கேள்விப்பெட்டியில் உள்ளிடல் வேண்டும். இல்லையெனில் மேற்படி நேரத்திற்கு முன்பு கிடைக்குமாறு தலைவர், திணைக்கள பெறுகைக்குழு, ஊவா மாகாண சுகாதார சேவைத் திணைக்களம், இல. 301, ஆர்.எச். குணவர்தன மாவத்த, பதுளை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். பூர்த்தியற்ற விண்ணப்பங்கள் மற்றும் குறித்த தினம் குறித்த நேரத்தின் பின்பு கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
- கிடைக்கப்பெற்றுள்ள சகல கேள்விகளும் 2024.04.29ம் திகதி கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் ஊவா மாகாண சுகாதார சேவைத் திணைக்களத்தின் பெறுகைக்குழு முன்னிலையில் திறக்கப்படும். இவ்வேளையில் கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பித்து கேள்விதாரர்களுக்கு சமுகமளிக்கலாம். கேள்விதாரருக்கு நேரடியாக வருகைதர முடியாவிடின் எழுத்துமூல அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவரை பங்குபற்ற வைக்க முடிவதுடன் அவரால் தமது அடையாளத்தை உறுதி செய்தல் வேண்டும்.
- வாரத்தின் வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் கேள்வி மாதிரிப் பத்திரங்களை பரீட்சிக்க முடிவதுடன், எந்தக் கேள்வியையும் ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரிக்கும் உரிமை பெறுகைக் குழுவிற்கு உரியது.

**தலைவர் - திணைக்கள பெறுகைக்குழு,**
**ஊவா மாகாண சுகாதார சேவைத் திணைக்களம்,**
**03ம் மாடி, இல 301, ஆர்.எச். குணவர்தன மாவத்த,**
**பதுளை.**
**தொ.பே இல. :- 055-2231981, பெக்ஸ் இல. :- 055-2223098**

## இலங்கை துறைமுக அதிகாரசபை

### விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமைவாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகாரசபையின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CMS/LP/24/PT/01/007 | 1280Nos. M 16 x 300mm, Stainless Steel Anchor Rods ( Grade SUS 316) | 96,000.00 | 1,000.00 | 17-04-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/PT/16/011 | 1225MM X 2250 MM 25MM THK. Medium Carbon Steel Plate | 102,000.00 | 3,500.00 | 18-04-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/PT/17/017 | 16 Nos. 1200 MM X 2400 MM,12MM THK. Stainless Steel Plate ( Grade SUS 316 ) | 120,000.00 | 3,500.00 | 18-04-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/PT/14/019 | 07 Nos. 1225MM X 2250MM X 40MM THK. Medium Carbon Steel Plate ( EN 9 Grade ) | 87,500.00 | 1,000.00 | 19-04-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/PT/04/018 | M 30X 400M, Anchor Rods (Grade 8.8) | 54,500.00 | 1,000.00 | 19-04-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/PT/03/003 | 17 Nos. Desktop Computer I 7 | 67,000.00 | 1,000.00 | 24-04-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/PT/16/004 | 35 Nos. Sheetfed Scanner | 95,000.00 | 1,000.00 | 24-04-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/PT/03/051 | 1050 Ltr. Caltex Rando MV 68 | 22,000.00 | 1,000.00 | 24-04-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/23/PT/06/052 | Spares for UD Nissan Primovers | 19,500.00 | 1,000.00 | 25-04-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/PT/16/051 | Spare Parts for the Terberg Yard Tractors / YT 220 | 28,000.00 | 1,000.00 | 25-04-2024 பி.ப. 1.30 மணி |
| CMS/LP/24/PT/01/053 | 20 Nos. of 1800 X 25-40PR TL Tyres for Top Lift Trucks | 180,000.00 | 3,500.00 | 25-04-2024 பி.ப. 1.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை (PCA 03 படிவம்) கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை பிரதான முகாமையாளர் (வழங்கல்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2024 ஏப்ரல் 03ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் முடிவுறுத்தப்படும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் முடிவுறுத்தப்படும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருள்வள முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகாரசபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி எண்கள்: 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் எண்: 2381652, 2470443**

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கம்

### போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

### வீதி அபிவிருத்தி அதிகாரசபை

### விலைமனுக்களுக்கான அழைப்பு

**SUPPLY OF DENSE GRADED AGG REGATE BASE COURSE & EMULSION CSS-1 (ABC & CSS-1) CHIEF ENGINEER REGION, KALUTARA**

| ஒப்பந்த இலக்கம் | பிரிவு | வேலையின் விளக்கம் |
|---|---|---|
| RDA/KD/CE/K/ABC/2024/01<br>RDA/KD/CE/K/ABC/2024/02<br>RDA/KD/CE/K/ABC/2024/03 | நிபொ பிரிவு களுத்துறை<br>நிபொ பிரிவு அகலவத்தை<br>நிபொ பிரிவு ஹொரண | Supply of Dense Graded Aggregate Base Course (37.5mm) required for Rehabilitation/Improvements of roads under the implementation of 1,500 km Alternative road system |
| RDA/KD/CE/K/CSS/2024/01 | நிபொ பிரிவு அகலவத்தை | Supply of Bitumen Emulsion CSS-1 & CRS-1 required for Rehabilitation/ Improvements of roads under the implementation of 1,500 km Alternative Road system Roads on Agalawatta EE Division, Kalutara |
| RDA/KD/CE/K/AS.L/2024/01<br>RDA/KD/CE/K/AS.L/2024/02<br>RDA/KD/CE/K/AS.L/2024/03 | நிபொ பிரிவு களுத்துறை<br>நிபொ பிரிவு அகலவத்தை<br>நிபொ பிரிவு ஹொரண | Asphalt laying of 1500 km project works (Asphalt Concrete & Emulsion for tact coat will be supplied by RDA) |

தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் களுத்துறை பிரதான பொறியியலாளரின் பிராந்தியத்தில் Dense Graded Aggregate Base Course (37.5mm) and Emulsion CSS-1 & CRS-1 Asphalt Laying ஆகியவற்றின் வழங்கலுக்காக விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர் 2024 ஏப்ரல் 3 ஆம் திகதியிலிருந்து 2024 ஏப்ரல் 17 ஆம் திகதி வரையும் **www.rda.gov.lk** என்ற களுத்துறை பிரதான பொறியியலாளரின் அலுவலகம், வீஅஅ/ நெடுஞ்சாலைகள் அமைச்சு ஆகியவற்றின் இணையபக்கங்களை பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு

### சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்

### விலைமனுக்களுக்கான அழைத்தல்

### சமுர்த்தி சமூக அடிப்படையிலான வங்கிகள் மற்றும் வங்கி சங்கங்களுக்காக அச்சடிக்கப்பட்ட வங்கி படிவங்களின் பெறுகை வழங்கல்

**IFB No. DSD/HO/MF/05/06/01/PROCU/BK/STA/Vol-1**

1. சமுர்த்தி சமூக அடிப்படையிலான வங்கிகள் மற்றும் வங்கி சங்கங்களுக்காக அச்சடிக்கப்பட்ட வங்கி படிவங்களின் பெறுகை வழங்கலுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை சமுர்த்தி அபிவிருத்தி திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.
2.

| தொ.இல | செய்விதி இலக்கம் | அம்சம் | அலகு (அளவு x 500) | எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 01 | S-9 | அங்கத்தினர்களுக்கான சேமிப்பு புத்தகம் | 1400 | 700,000 |
| 02 | S-11 | கூட்டுக்குழு சேமிப்பு புத்தகம்(கணனி) | 100 | 50,000 |
| 03 | S-12 | கெக்குழு சேமிப்பு புத்தகம் (கணனி) | 300 | 150,000 |
| 04 | S-13 | திரியமாத்தா சேமிப்பு புத்தகம் (கணனி) | 100 | 50,000 |
| 05 | S-53 | கட்டாயமான சேமிப்பு புத்தகம் (கணனி) | 300 | 150,000 |
| 06 | S-62 | துண ஷக்தி சேமிப்பு புத்தகம் (கணனி) | 200 | 100,000 |

3. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையை பாவித்து நடத்தப்படும். விலைமனுதாரர் அவர்களின் விலைமனுக்களை முழுமையாக சமர்ப்பிப்பதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும். ஒரு பகுதி விலைமனுக்களை சமர்ப்பித்தல் பதிலிறுக்கப்படவில்லையென கருதப்பட்டு நிராகரிக்கப்படும்.
4. விலைமனுதாரர் அச்சடித்தல் தொழிலில் 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தில் இருத்தல் வேண்டுமென்பதுடன் அச்சடிக்கப்பட்ட வங்கிசார் படிவங்களை வழங்குவதில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருடங்கள் இருத்தல் வேண்டும்.
5. 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டமூலத்தின் ஏற்பாடுகள் ஐந்து மில்லியன் ரூபாவிற்கு மொத்த ஆகுசெலவுகளுள்ள ஒப்பந்தங்களுக்கு பிரயோகப்படுத்தப்படுமென விலைமனுதாரர் இத்தால் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக விலைமனுதாரரொருவர் பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் தம்மை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை அவரது விலைமனு ஆவணங்களுடன் (PCA 3 Form) சமர்ப்பிக்குமாறு விலைமனுதாரர் இத்தால் அறிவிக்கப்படுகின்றனர்.
6. 2024 ஏப்ரல் 3 ஆம் திகதியிலிருந்து 2024 ஏப்ரல் 24 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக பன்னிரண்டாயிரத்து ஐந்நூறு இலங்கை ரூபாவை (12,500 இ.ரூபாவை) செலுத்திய பின்னர், பத்தரமுல்ல, ‘‘செத்சிரிபாய’’, 4 ஆம் மாடி, சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம், Micro நிதிப்பிரிவின் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக் கொடுப்பனவு முறையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
7. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை 2024 ஏப்ரல் 03 ஆம் திகதியிலிருந்து 2024 ஏப்ரல் 26 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் 0112887469/ 0112887489 ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாக பெற்றுக் கொள்ளலாம்.
8. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் ‘‘மூலப்பிரதி’’ மற்றும் ‘‘நகல்பிரதியென’’ தயாரிக்கப்பட்டு தனித்தனியான தபாலுறைகளில் அடக்கப்பட்டு ஒப்பந்தப் பெயர் மற்றும் IFB இலக்கங்கள் இலக்கமானது தெளிவாக குறிப்பிடப்பட்டு அவையிரண்டும் தனியொரு தபாலுறையில் அடக்கப்பட்டு அதனது இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்தப் பெயர் மற்றும் IFB இலக்கம் ஆகியன எழுதப்பட்டு 2024 ஏப்ரல் 29 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது 5 ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விலைமனுப் பிணையானது தொண்ணூற்றொரு நாட்களுக்கு விலைமனுக்களை சமர்ப்பிக்கும் திகதிக்கு அல்லது பெறுனரின் குறித்துரைக்கப்பட்ட நீடிக்கப்பட்ட எந்தவொரு நாளைக்கு முன்னராக கிடைக்கும் வகையில் அனுப்பப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் விலைமனுதாரர்களின் முன்னிலையில் அல்லது சமுகமளித்திருக்கும் அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்,**
**‘செத்சிரிபாய’,**
**பத்தரமுல்ல.**
**2024 ஏப்ரல் 03 ஆம் திகதியன்று.**

Daily News Classifieds, the Housewives' companion

# நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு

## தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை

## விலைக்கோரல் அறிவித்தல் – 2024–04–03

பின்வரும் வேலைகள் / வழங்கல்கலுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை சார்பில் பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | தேவையான கேள்விப் பிணை | தேவையான தகைமை | VAT உட்பட மதிப்பீட்டுச் செலவு (ரூபா) | தொடர்புகொள்ள வேண்டிய நபர் மற்றும் ஆவணங்கள் வழங்கப்படும் இடம் | இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|---|
| | **சிவில் கேள்விகள்** | | | | | | |
| 01 | கம்பஹா மினுவாங்கொட ஒன்றிணைக்கப்பட்ட நீர் வழங்கல் திட்டத்தினால் முன்மொழியப்பட்ட ரன்பொக்குணகம விநியோக வழிக்கு DI &uPVC குழாய்கள் மற்றும் பொருத்தல்களைப் பதித்தல் - பொதி 03<br>ஒப்பந்த இல: **NWSDB/WN/CP/A3-10/GOSL/2024/03** | 12,500/- + VAT** | ரூபா 267,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C5, C6 அல்லது C7 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் ஒப்பந்தத்தின் பதிவுச் சான்றிதழ் | 17.8 மில்லியன் | பிராந்திய ஒத்துழைப்பு நிலையம் (W/N) அலுவலகம், இல. 433/4A, கணேமுல்ல வீதி, கடவத்தை.<br>Tele:0112922129 Fax:0112922146 | 24/04/2024 மு.ப. 10.00 |
| 02 | கேகாலை நீர் வழங்கல் திட்டத்தில் எந்துருபொத புதிய பரிமாற்றம் மற்றும் விநியோக குழாய் வழியை பூர்த்தி செய்வதற்கு வீதிக்கு மேலாக குழாய் பதித்தல் மற்றும் Sheet Pile ஆதாரங்களை நிர்மாணித்தல்.<br>ஒப்பந்த இல: **RSC(SAB)/P&D/CIVIL/REH/ KEGALLE/2024/19R** | 4,000/- + VAT | ரூபா 39,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடை துறையில் C7, C8 அல்லது C9 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் ஒப்பந்தத்தின் பதிவுச் சான்றிதழ் | 3.9 மில்லியன் | பிஒநி (சப்ரகமுவ), தேநீவவச, புதிய நகரம், இரத்தினபுரி.<br>Tele: 045-2228274-6<br>Fax : 045-2228273 | 24/04/2024 பி.ப. 2.00 |
| 03 | ஹிரிவட்டுனயில் உள்ள பிராந்திய களஞ்சியசாலையில் தடுப்புச் சுவரை நிர்மாணித்தல் மற்றும் ஏனைய வேலைகள்<br>ஒப்பந்த இல: **RSC(SAB)/AGM(KEG)/REH/ REGIONALSTORES/ CIVIL/2022/02** | 12,500/- + VAT** | ரூபா 225,000/- | கட்டிட நிர்மாணம் மற்றும் சிவில் வேளைகளில் C5, C6 அல்லது C7 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் ஒப்பந்தத்தின் பதிவுச் சான்றிதழ் | 16.0 மில்லியன் | பிஒநி (சபரகமுவ), தேநீவவச, புதிய நகரம், இரத்தினபுரி.<br>Tele: 045-2228274-6<br>Fax : 045-2228273 | 24/04/2024 பி.ப. 2.00 |
| 04 | முன்மொழியப்பட்ட பலி ஆறு நீர் திட்டத்திற்கான மண் ஆய்வுகளை மேற்கொள்ளல்<br>ஒப்பந்த இல: **RSC/N/DGM/CB/SOILINVEST-PALIARU/2024/042** | 12,500/- + VAT** | ரூபா 162,000/- | ஆவணத்தின் பிரகாரம் அத்துடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் ஒப்பந்தத்தின் பதிவுச் சான்றிதழ் | 16.12 மில்லியன் | பிஒநி (வடக்கு) அலுவலகம், தேநீவவச, யாழ்ப்பாணம் வீதி, வவுனியா.<br>Tele:024-2227313/ 024-2225719/ 024-2227340<br>Fax:024-2225088/ 024-2227341 | 17/04/2024 பி.ப. 2.00 |
| 05 | மொரட்டுவ இரத்மலானை கழிவு நீர் திட்டம் - சொய்சாபுர கழிவுநீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியிலுள்ள கொங்கிறீட் கட்டமைப்பு சேகரிப்புப் பெட்டியின் திருத்தவேலைகள்<br>ஒப்பந்த இல: **GCWR/REPAIR/CONTAINMEN/SOYSAPURA /2023/ 06-1R2** | 12,500/- + VAT** | ரூபா 150,000/- | கட்டிட நிர்மாணம் அல்லது நீர்க்கசிவு தடுத்தல் துறையில் C5, C6 அல்லது C7 தரத்தில் CIDA பதிவு அத்துடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் ஒப்பந்தத்தின் பதிவுச் சான்றிதழ் | 12.79 மில்லியன் | பிபொமு (GCWRD), தேநீவவச, இல. 26/2, அத்திடிய வீதி, இரத்மலானை.<br>Tele: 011 2623681 Fax:011 2636205<br>மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையிலும் 1994381 எனும் பிரதான நடைமுறைக் கணக்கிலக்கத்திற்கு செலுத்துதல் வேண்டும். பெயரை "Tender Fees-DGM Tender Board" எனக் குறிப்பிடுதல் வேண்டும். | 24/04/2024 மு.ப. 10.00 |
| | **M & E கேள்விகள்** | | | | | | |
| 06 | அம்பத்தலை நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியில் முன்மொழியப்பட்டுள்ள மாளிகாகந்த, எலிஹவுஸ் மற்றும் கொத்தட்டுவ பம்பி முறைமைக்கு Medium Voltage Switchgears Panel மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல் மற்றும் நிறுவுதல்<br>ஒப்பந்த இல: **DPC/WP/W/AMB/M&E/RH/2022/40** | 35,000/- +VAT** | ரூபா 2,250,000/- | ஆவணத்தின் பிரகாரம் மற்றும் Medium Voltage (12kV/33kV) Metal Clad Air Insulated Switchgear Panels வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்நாட்டு முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | - | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328<br>Fax: 011-2635885 | 26/04/2024 மு.ப. 10.00 |
| 07 | தம்புல்ல நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிக்கு SCADA Battery Backup முறைமைகளை வழங்குதல் மற்றும் நிறுவுதல்<br>ஒப்பந்த இல: **RSC-C/CN/M&E/REH/DAMBULLA /2023/290** | 12,500/- + VAT** | ரூபா 113,000/- | Online UPS Battery System வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்நாட்டு முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | - | பிஒநி (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027<br>தம்புல்லை, இப்பன்கொட்டுவ **GDWTP** இல் 2024-04-03ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும். **(T:P-0662054904)** | 17/04/2024 பி.ப. 2.00 |
| 08 | பிங்கிரிய நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியிலுள்ள உள்ளீர்ப்புக்கு 01 எண்ணிக்கையான Submersible Auto Coupling பம்பித் தொகுதி மற்றும் துணைப்பாகங்களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்<br>ஒப்பந்த இல: **RSC (NW)/M&E/P/RC-BOI/BIN/2023/060** | 12,500/- + VAT** | ரூபா 200,000/- | பம்பித் தொகுதிகளை வழங்குவதற்கான வழங்குவதற்கான உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற உள்நாட்டு முகவர்கள் மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் | | பிஒநி (வட மேல்) அலுவலகம், தேநீவவச, தம்புல்லை வீதி, குருநாகல்.<br>Tele: 037-2223158<br>Fax : 037-2230086 | 24/04/2024 பி.ப. 2.00 |
| | **சேவைக் கேள்விகள்** | | | | | | |
| 09 | உபொமு அலுவலகத்திற்கான இயக்கம் மற்றும் பராமரிப்பு வேலைகளின் உதவிச் சேவைகளை வழங்குதல்<br>ஒப்பந்த இல: **ප්‍රාසං'ම/සහා(ක්‍රියා)/සේවා/ක්‍රියා/ කාර්යාලයීය සහාය සේවාව/2024/63** | 2,000/- +VAT | ரூபா 10,100/- | ஆவணத்தின் பிரகாரம் | - | பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027 | 17/04/2024 பி.ப. 2.00 |
| 10 | பாரிய கண்டி நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதியில் உள்ள பாரிய கண்டி நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதி உள்ளீர்ப்பு, நுண்ணறிவு பகிர்வு நிலையம், பூஸ்டர் பம்பி நிலையம் மற்றும் சேவை நீர்த் தேக்கத்திற்கு PPM சேவைகள் மற்றும் சுத்திகரிப்பிற்கான ஒப்பந்தம்.<br>ஒப்பந்த இல: **ප්‍රා.සේ.ම(ම)/ම.නිෂ්/සේවා/ක්‍රි.හා.න/විශාල් මහනුවර/2024/61** | 12,500/- + VAT** | ரூபா 180,000/- | ஆவணத்தின் பிரகாரம் | - | கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027<br>கட்டுகஸ்தொட்ட, பஹல கொண்டதெனிய **GKWTP** இல் 2024-04-03ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.<br>**(T:P-0812492300)** | 17/04/2024 பி.ப. 2.00 |
| 11 | குருநாகல் மாவட்ட நீர் வழங்கல் திட்டங்களின் நீர் மானி வாசித்தல், நீர்க்கட்டண பற்றுச்சீட்டுகளை விநியோகித்தல் மற்றும் ஏனைய வாடிக்கையாளர் சார்ந்த வேலை சேவைகள்<br>ஒப்பந்த இல: **RSC(NW)/M-KURU/SER/O&M/ KURU-DIS/2024/55** | 12,500/- + VAT** | ரூபா 207,000/- | தேர்ச்சிபெற்ற மற்றும் தேர்ச்சியற்ற தொழிலாளர் சேவைகளை (கேள்விக்கு இயைபான) வழங்குவதில் குறைந்தபட்சம் 02 வருடங்கள் அனுபவம் வாய்ந்த இயைபுடைய பிரதேசங்களிலுள்ள பிரதேச செயலகங்களின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள சமூக அடிப்படையிலான அமைப்புகள் (CBO) அல்லது வியாபாரப் பதிவின் கீழ் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் மற்றும் பொது ஒப்பந்தப் பதிவு சகிதம் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டப் பதிவின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ். | - | பிஒநி (வட மேல்) அலுவலகம், தேநீவவச, தம்புல்லை வீதி, குருநாகல்.<br>Tele: 037-2223158<br>Fax : 037-2230086<br>குருநாகல், முகாமையாளர் அலுவலகத்தில் 2024-04-19ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி முன்னோடிக் கூட்டம் இடம்பெறும். | 24/04/2024 பி.ப. 2.00 |
| | **வாகனங்களை வாடகைக்கமர்த்துதல்** | | | | | | |
| 12 | பெறுகை திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவிற்கு வேன் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: **NWSDB/PPMU/HIRING-VAN/2024/01** | 4,000/- +VAT | ரூபா 15,000/- | குறைந்தபட்சம் 05 ஆசனங்கள் கொள்ளளவு மற்றும் வாகன உரிமையாளர்கள் அல்லது இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் | 2.9 மில்லியன் | கேள்விகள் மற்றும் ஒப்பந்தங்கள் பிரிவு, தேநீவவச, காலி வீதி, இரத்மலானை.<br>Tele: 011-2605328<br>Fax: 011-2635885 | 24/04/2024 மு.ப. 10.00 |
| 13 | வட மத்திய முகாமையாளர் அலுவலகத்திற்கு வேன் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: **RSC-C/M&E/HIRING/O&M/ CN/2024/105** | 4,000/- +VAT | ரூபா 15,000/- | குறைந்தபட்சம் 05 ஆசனங்கள் கொள்ளளவு மற்றும் வாகன உரிமையாளர்கள் அல்லது இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் | - | பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027 | 17/04/2024 பி.ப. 2.00 |
| 14 | கடுகண்ணாவ பொறுப்பதிகாரி அலுவலகத்திற்கு க்றூ கெப் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: **RSC-C/M&E/HIRING/ O&M/ CS/2024/50** | 4,000/- +VAT | ரூபா 15,000/- | வாகன உரிமையாளர்கள் அல்லது இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் | - | பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068<br>Fax: 081-2388027 | 17/04/2024 பி.ப. 2.00 |
| 15 | பிராந்திய ஒத்துழைப்பு நிலையத்திலுள்ள (தெற்கு) திட்டமிடல் மற்றும் ஒருங்கிணைப்புப் பிரிவிற்கு வேன் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்.<br>ஒப்பந்த இல: **RSC(S)/HIRING/VAN/PLANNING & CO-ORDINATION/ O&M/2023-154** | 4,000/-+ VAT | ரூபா 15,000/- | குறைந்தபட்சம் 05 ஆசனங்கள் கொள்ளளவு மற்றும் வாகன உரிமையாளர்கள் அல்லது இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் | 3.83 மில்லியன் | பிஒநி (தெற்கு), 395, குமாரதுங்க மாவத்தை, பம்புரன, மாத்தறை.<br>Tele: 0412222105<br>Fax 0412221329 | 17/04/2024 பி.ப. 2.00 |
| 16 | கொழும்பு நகரம் - தெற்கு முகாமையாளர் அலுவலகத்திற்கு வேன் ஒன்றை வாடகைக்கமர்த்துதல்<br>ஒப்பந்த இல: **WC/M-CC South/M&E/HV/2024/01** | 4,000/-+ VAT | ரூபா 15,000/- | குறைந்தபட்சம் 05 ஆசனங்கள் கொள்ளளவு மற்றும் ஆவணத்தின் பிரகாரம் வாகன உரிமையாளர்கள் அல்லது இலங்கையில் வாகனங்களை வாடகைக்கமர்த்தும் நிறுவனங்கள் | 3.66 மில்லியன் | பிஒநி (மேற்கு - மத்திய) தேநீவவச, இல. 175A, கலுதொட்ட கட்டிடம், நாவல வீதி, நுகேகொட.<br>Tele:/Fax: 011-2856421/ 0112856420-2 | 19/04/2024 மு.ப. 10.00 |

தயவு செய்து PCA 3 படிவத்தைப் பெற்றுக்கொள்ள இணையதளத்தில் நிகழ்நிலை (online) ஊடாக கம்பனி பதிவாளருடன் பதிவு செய்து கொள்ளவும். ("**" எனக் குறியீடு இடப்பட்ட கேள்விகளுக்கு மட்டும்) பதிவு செய்து கொள்வதற்கு gmail பயன்படுத்த வேண்டுமென மேலும் தயவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது.

முடிவுத் திகதிக்கு முதல் நாள் வரை சாதாரண வேலை நேரங்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் மற்றும் வியாபாரக் கடிதத் தலைப்பிலான வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் கேள்வி ஆவணங்கள் வழங்கப்படும்.

சாதாரண வேலை நேரங்களில் ஆவணங்கள் வழங்கப்படும் இடத்திலேயே கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

சமுகம்தந்துள்ள கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்விகள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் கேள்விகள் திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும்.

**தலைவர்,**
**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை.**

# சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்

### 106 கார்கள் விற்பனைக்கு

WP-GM-2041 PERODUA KANCIL - MOTORCAR - 2001 - SILVER SPARKLINE கூடிய விலைக் கோரிக்கைக்கு. CBC பினான்ஸ் லிமிட்டட் 187, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி. தொ.பே. 081 2 081033. 022991

### 118 ஜீப்புகள், பிக்கப்புகள் விற்பனைக்கு

SG-DAC-5308 - TATA SUPER ACE - SINGLE CAB - 2015 - ARCTIC WHITE கூடிய விலைக் கோரிக்கைக்கு. CBC பினான்ஸ் லிமிட்டட் 187, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி. தொ.பே. 081 2 081033. 022998

### 122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

WP - YM-5069 BAJAJ - RE205 - THREE WHEELER - 2011 - BRIGHT RED கூடிய விலைக் கோரிக்கைக்கு. CBC பினான்ஸ் லிமிட்டட் 187, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி. தொ.பே. 0812 081033. 022984

WP- YL-3961 - BAJAJ - RE205 - TH REE WHEELER - 2011 - NEPTUNE BLUE கூடிய விலைக் கோரிக்கைக்கு. CBC பினான்ஸ் லிமிட்டட் 187, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி. தொ.பே. 081 2 081033. 023002

Repeat Your Ad For Better Offers

Marriage Proposals in the Sunday Observer Is the best way to fulfil your Future Dreams

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

## மாவட்ட செயலகம் களுத்துறை

### கேள்விகோரல் அறிவித்தல் – திருத்தம்

2024.04.02ம் திகதி தினமின, டெயிலி நியுஸ், தினகரன் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட கேள்விகோரல் அறிவித்தல் கீழ்க்காணுமாறு திருத்தப்படுவதாகவும் அது தவிர ஏனைய விடயங்கள் மேற்படி அறிவித்தலின் பிரகாரம் மாற்றமின்றி இருப்பதாகவும் இத்தால் அறிவித்துக்கொள்கிறேன்.

| | செயற்றிட்டம் | கேள்விப் பிணைப் பெறுமதியின் தொகை |
|---|---|---|
| 01 | மத்துகம பிரதேச செயலகத்தின் மேல் மாடியில் மிகுதி நிர்மாண வேலைகள், வெளிப்புற மலசலகூட அமைப்பு நிர்மாணம் மற்றும் பழைய கட்டிடத்தின் பழுதுபார்த்தல் வேலைகள் | ரூ.300,000.00 |

**கினிகே பிரசன்ன ஜனக்க குமார**
**தலைவர், பெறுகைக்குழு,**
**மாவட்ட செயலாளர்**
**மாவட்ட செயலகம், களுத்துறை**

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

## திருத்த அறிவித்தல்

### பொறியியல் அமைப்பு

### மேல் மாகாணம்

வல்பிட்ட மீன் பதப்படுத்தல் தொழிற்சாலை மற்றும் பழம் மற்றும் மரக்கறி பதப்படுத்தும் தொழிற்சாலைக்கு பட்டரி பெக் உடன் சூரிய ஒளி பெனல் முறையொன்றை வழங்கல், நிறுவுதல், பரீட்சித்தல், செயற்பட வைத்தல் மற்றும் பராமரித்தல்.

2024.03.28 ஆம் திகதியன்று 'டெயிலி நியுஸ், 'தினமின', மற்றும் 'தினகரன்' ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தல் பிரகாரம் பின்வரும் திருத்தங்கள் on capacities of BESS (at table) மேற்கொள்ளப்படல் வேண்டும்.

| No. | Place | Capacity (kWac) |
|---|---|---|
| 01. | Walpita Fish Canning Factory | RTPV Systems of tentatively 50Kw with suitable BESS of **100 kWh** |
| 02. | Fruit and Vegetable Processing Factory | RTPV System tentativel 50Kw with suitable BESS of **50 kWh** |

**தலைவர்,**
**பிரதி பிரதான செயலாளர் (பொறியியல்) (WPC)'s பெறுகைக் குழு,**
**பொறியியல் அமைப்பு,**
**204, 5 ஆம் மாடி,**
**டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்ல.**

**தொலைபேசி : 011-2092504**
**தொலைநகல் : 011-2092505**
**மின்னஞ்சல் : eng.org.wpc@gmail.com**
**03.04.2024**

## கிழக்கு மாகாண சுற்றுலா பணியகம்

### உட்துறைமுக வீதி, திருகோணமலை

### வெளிப்படுத்துகை விண்ணப்பங்கள் கோரல்

**அரச தனியார் பங்களிப்பின் கீழ் திருகோணமலை, உட்துறைமுக வீதியில் அமைந்துள்ள மீன்பிடி இறங்குதுறையை சுற்றுலா மையமாக பராமரித்தல்**

உள்ளூராட்சி, கிராமிய அபிவிருத்தி, சுற்றுலா அமைச்சின் கீழ் அமைந்துள்ள கிழக்கு மாகாண சுற்றுலா பணியகமானது, உட்துறைமுக வீதி திருகோணமலையில் அமைந்துள்ள மீன்பிடி இறங்குதுறையை அரச மற்றும் தனியார் பங்களிப்பின் கீழ் செயற்படுத்துவதற்கான செயற்றிட்டத்தை முன்னெடுத்துள்ளது.

முகாமைத்துவம் செய்வதற்காக கிழக்கு மாகாண சுற்றுலா பணியகமானது மேற்கூறப்பட்ட துறையில் முதலீடு செய்ய விரும்பும் தனியாரின் விருப்பை வெளிப்படுத்துவதற்கான வேண்டுகோள் விண்ணப்பங்களை கோரியுள்ளது. இதில் துறைசார் முன் அனுபவம், தொழில் திறமை, நிதி நிலைமை மற்றும் முகாமைத்துவ தகைமைகள் கருத்தில் கொள்ளப்படும்.

இது தொடர்பான மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள கிழக்கு மாகாண சபையின் www.ep.gov.lk என்ற இணையதளத்தில் பார்வையிடலாம்.

**பொது முகாமையாளர்**
**கிழக்கு மாகாண சுற்றுலா பணியகம்**
**உட்துறைமுக வீதி**
**திருகோணமலை**
**01.04.2024**

## இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு

### போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

### வீதி அபிவிருத்தி அதிகாரசபை

### விலைமனுக்கோரல்

### வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்காக சேவை வழங்கல்

1. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் (RDA) கம்பஹா மாவட்ட கொள்முதல் குழுத் தலைவரினால் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கம்பஹா நிறைவேற்று பொறியியலாளர் பிரிவிற்கு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள சேவையினை வழங்குவதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

I. **RDA/GAM/CE/TEN/2024/20** - கம்பஹா நிரைவேற்று பொறியியலாளர் பிரிவில் கம்பஹா வேலைத்தளப் பிரிவிற்காக ஒப்பந்த அடிப்படையிலான தேர்ச்சிபெறாத தொழிலாளர்களை வழங்குதல்.

II. **RDA/GAM/CE/TEN/2024/21** - கம்பஹா நிரைவேற்று பொறியியலாளர் பிரிவில் கடவத்தை வேலைத்தளப் பிரிவிற்காக ஒப்பந்த அடிப்படையிலான தேர்ச்சிபெறாத தொழிலாளர்களை வழங்குதல்.

III. **RDA/GAM/CE/TEN/2024/22** - கம்பஹா நிரைவேற்று பொறியியலாளர் பிரிவில் பட்டிவில வேலைத்தளப் பிரிவிற்காக ஒப்பந்த அடிப்படையிலான தேர்ச்சிபெறாத தொழிலாளர்களை வழங்குதல்.

IV. **RDA/GAM/CE/TEN/2024/23** - கம்பஹா நிரைவேற்று பொறியியலாளர் பிரிவில் மினுவாங்கொட வேலைத்தளப் பிரிவிற்காக ஒப்பந்த அடிப்படையிலான தேர்ச்சிபெறாத தொழிலாளர்களை வழங்குதல்.

2. மேலதிக தகவல்களுக்கு பின்வரும் இணையதளங்களை பார்வையிடவும்.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு - **www.mohsl.gov.lk**
வீதி அபிவிருத்தி அதிகாரசபை - **www.rda.gov.lk**

**தலைவர்,**
**பிராந்திய கொள்முதல் குழு, தலைமை பொறியியலாளர் பிரிவு,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை - கம்பஹா.**
**தொலைபேசி : 033-2226752, 033-2221020**

SELACINE

## இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு

### போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

### வீதி அபிவிருத்தி அதிகாரசபை – சப்ரகமுவ

### கேள்வி கோரல்

| ஒப்பந்த இலக்கம் | நிர்மாண ஒப்பந்தம் | CIDA | கேள்விப் பிணைமுறி (ரு) |
|---|---|---|---|
| RDA/SP/1500KM/SBP/KGL/20 | எலகபிட்டிய கம்மெத வீதி மறுசீரமைத்தல் | C7,C6 | 52,000.00 |
| RDA/SP/1500KM/SBP/KGL/21 | ரன்வல வெலமெத வீதியின் மறுசீரமைத்தல் | C7,C6 | 78,000.00 |
| RDA/SP/1500KM/SBP/RTP/06 | பிடலிகன்னவல மெத்தேகம வீதி மறுசீரமைத்தல் | C5,C6 | 132,000.00 |
| RDA/SP/1500KM/SBP/RTP/07 | உஸ்பிம் பத்தன வீதி மறுசீரமைத்தல் | C5,C6 | 200,000.00 |
| RDA/SP/1500KM/SBP/RTP/08 | பஹலகம தெல்வின்ன ஊடாக வெலகே வீதிமறு சீரமைத்தல் | C5,C6 | 230,000.00 |

கேகாலை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் மேற்படி வீதி ஒப்பந்தத்திற்காக தேசிய போட்டி கேள்விகோரல் முறைமையின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன. ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு 2024 ஏப்ரல் 04 முதல் 2024 ஏப்ரல் 17 வரை கீழ்க்காணும் தொ.பே.இலக்கங்களில் அல்லது வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் www.rda.gov.lk என்ற இணையதளத்திற்கு பிரவேசித்து மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**மாகாண பொறுப்பு பணிப்பாளர் பணிமனை (சப்ரகமுவ)**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை**
**இரத்தினபுரி - தொ.பே - 045 - 2222608**

## இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு

### போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

### வீதி அபிவிருத்தி அதிகாரசபை

### விலைமனுக்கோரல்

### வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்காக வாகனங்கள் வழங்கல்

1. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் (RDA) கம்பஹா நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவின் கொள்முதல் குழுத் தலைவரினால் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கம்பஹா மாவட்டத்திற்கான கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள வாகனங்களை வழங்குவதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

**RDA/GAM/EE/TEN/2024/17** - கம்பஹா பொறியியலாளர் பிரிவு கடவத்தை வேலைத்தளப் பிரிவில் கியூப் 01 டிப்பர் வாகனம் ஒன்றினை (Tipper) 2024 ஆம் ஆண்டுக்காக வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல்.

2. மேலதிக தகவல்களுக்கு பின்வரும் இணையதளங்களை பார்வையிடவும்.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு - **www.mohsl.gov.lk**
வீதி அபிவிருத்தி அதிகாரசபை - **www.rda.gov.lk**

தலைவர்,
பிராந்திய கொள்முதல் குழு,
நிறைவேற்று பொறியியலாளர் பிரிவு,
வீதி அபிவிருத்தி அதிகாரசபை - கம்பஹா.
தொ.பே 033-2225033

SELACINE

## கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை 2024 – 2025

### பிரதேச செயலாளர் பிரிவு - புத்தளம்

2024ஆம் ஆண்டு ஜூலை மாதம் 01ம் திகதி முதல் 2025ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30ம் திகதி வரையுள்ள காலத்திற்கான கள்ளுத் தவறணை குத்தகை விற்பனைக்கான கேள்விப்பத்திரங்கள் 2024.05.08 ம் திகதி காலை 10.30 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

| | | |
|---|---|---|
| இலக்கம் | : | 01 |
| பிரிவு | : | புத்தளம் பிரதேச செயலாளர் பிரிவு |
| கிராமம் | : | சேனைக்குடியிருப்பு |
| தவறணை திறந்து வைக்கப்பட்டிருக்கும் நேரங்கள் | : | காலை 10.00 முதல் இரவு 9.00 மணி வரை |
| தவறணை கேள்விப்பத்திரம் ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும் | : | 2024.05.08 மு.ப. 10.30 மணி |
| கேள்விப்பத்திர வைப்புப் பணம் | : | ரூபா.1000.00 |

02.மேலதிக தகவலுக்காக 2024.04.19 திகதிய வர்த்தமானி அறிவித்தலை பார்க்கவும்.

**எஸ்.பீ.வீரசேகர,**
**பிரதேச செயலாளர்,**
**புத்தளம்.**

**பிரதேச செயலகம்,**
**புத்தளம்.**
**2024.03.25**

## சுகாதாரம், போஷணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு

### அபேக்ஷா வைத்தியசாலை – மஹரகம

### பெறுகை அறிவித்தல்

01. எமது வைத்தியசாலைக்குத் தேவையான உருப்படிகளைக் கொள்வனவு செய்வதற்காக தகைமை வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| கேள்வி மாதிரிப் படிவ இலக்கம் | உருப்படியின் பெயர் | மீளளிக்கப்படாத கட்டணம் |
|---|---|---|
| 01 | கட்டிடப் பொருட்கள் | ரூபா 1,000.00 |
| 02 | சீருடைக்கான துணிகள் | ரூபா 1,000.00 |
| 03 | பொலித்தீன் குப்பை பேக் | ரூபா 1,000.00 |

02. இலங்கை சந்தைக்காக மேற்குறிப்பிடப்பட்ட உருப்படிகளை வழங்கும் எந்தவொரு விலைமனுதாரர், பிரதிநிதியொருவர் அல்லது பெயரிடப்பட்டவர் மட்டும் மேற்படி கேள்விக்காக முன்வர தகைமை பெறுவர்.

**கேள்வி மாதிரிப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளும் வேளையில்**

I. மஹரகம அபேக்ஷா வைத்தியசாலை பணிப்பாளருக்கு அனுப்பும் வேண்டுகோள் கடிதம்.
II. சகல கேள்வி மாதிரியின் பொருட்டும் மீளளிக்கப்படாத 1,000.00 ரூபா ரொக்கப் பணத்தை மஹரகம அபேக்ஷா வைத்தியசாலை கணக்காளருக்குச் செலுத்தப்பட வேண்டும்.
III. வியாபாரப் பதிவுச் சான்றிதழின் சான்றுபடுத்திய பிரதியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
IV. 2024-04-08ஆம் திகதி முதல் 2024-04-29ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் நிதிப் பிரிவிலிருந்து கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**கேள்விப்படிவங்களைச் சமர்ப்பிக்கும் வேளையில்**

I. இலங்கையினுள் மேற்படி ஒப்பந்த வழங்கலுக்காக செல்லுபடியாகும் பதிவுச் சான்றிதழின் பிரதியைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
II. ஒவ்வொரு கேள்வி இல.1 பொருட்டு 2% வீதத்துக்கான கேள்விப் பிணை முறியைச் சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் கேள்வி இல.02 மற்றும் 03 இற்காக 1% கேள்விப் பிணையை சமர்ப்பித்தல் வேண்டும். (கேள்விப் பிணைக்காக காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது)
III. ஒவ்வொரு கேள்விப் படிவங்களும் இரு பிரதிகளில் (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியாக) சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் கேள்வியைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் இயைபுடைய உருப்படியின் பெயரை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.
IV. அனைத்துக் கேள்விகளும் வழங்கப்பட்டுள்ள கேள்வி ஆவணங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள மாதிரியில் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
V. 2024-04-29ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் பிராந்திய பெறுகைக் குழு தலைவருக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். முழுமையற்ற மற்றும் தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.
VI. கேள்விகள் திறக்கப்படும் வேளையில் விண்ணப்பதாரர் அல்லது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் மட்டும் கலந்துகொள்ளலாம்.

03. விலைகள் சகிதமான கேள்விப் படிவங்களை 2024-04-29ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு மஹரகம அபேக்ஷா வைத்தியசாலை பணிப்பாளர் அலுவலகத்தில் திறக்கப்படும். மேலதிக விபரங்களை மஹரகம அபேக்ஷா வைத்தியசாலை கணக்காளரிடம் பெற்றுக்கொள்ளலாம். பிராந்திய பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**தொலைபேசி இல. : 0112839589/0112850252/0112850253**
**தொலைநகல் : 0112839589**

**தலைவர்,**
**பிராந்திய கேள்விச் சபை,**
**அபேக்ஷா வைத்தியசாலை, மஹரகம.**

The Housewives' companion Classifieds on Daily News

# பெறுகை அறிவித்தல்

## அரசாங்க அச்சுத் திணைக்களம்

**ஒப்பந்த இலக்கம் - DGP/OS/04/Clean.s/2024-2025**

**சுத்திகரிப்புச் சேவையைப் பெற்றுக்கொள்ளல்**

எண்-42

கொழும்பு-08, டொக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்த, இல. 118ல் அமைந்துள்ள அரசாங்க அச்சுத் திணைக்கள வளாகத்தில் உத்தேச இடத்துடன் சம்பந்தப்பட்ட சுத்திகரிப்புச் சேவைகளை நடத்திச் செல்வதற்கான கீழ்க்காணும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்துள்ள அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்களிடமிருந்து மாத்திரம் ஒரு வருட காலத்திற்கு (2024/2025) தேசிய போட்டி கேள்விகோரலின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன.

**இதற்காக பூர்த்தி செய்ய வேண்டிய அடிப்படை தகைமைகள் கீழ்க்காணுமாறு அமையும்**

01. வியாபாரப் பெயர் பதிவு செய்யும் சட்டவாக்கத்தின் கீழ் மேற்படி சேவைக்காக பதிவு செய்தல்
02. அரச அமைச்சு, திணைக்களம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் சுத்திகரிப்புச் சேவையை வழங்குதல் பற்றிய குறைந்தபட்சம் கிட்டிய 03 வருட அனுபவம் இருப்பதுடன், தற்போது அவ்வாறான நிறுவனங்களுக்கு சேவை வழங்கும் நிறுவனமாக இருத்தல் வேண்டும். (கவனிக்கவும் : விண்ணப்பத்துடன் மேற்படி இல. 01, 02 தகைமைகளைக் காட்டும் குறித்த சான்றிதழ்களின் உறுதி செய்யப்பட்ட போட்டோ பிரதி இணைத்து அனுப்புதல் வேண்டும்.)
03. கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்காக அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் அரசாங்க அழுத்தகர் பெயரில் எழுத்துமூல வேண்டுதலை மேற்கொள்ளல் வேண்டும். மேற்படி வேண்டுதலின் பின்னர் மீளளிக்கப்படாத ரூ. 2500.00 தொகையை அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் காசாளரிடம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்த பின்னர் 2024.04.03 முதல் 2024.04.24 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை கீழ்க்காணும் முகவரியில் அமைந்துள்ள அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் வேறு வழங்கல்கள் பிரிவில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள முடிவதுடன் இக்கேள்வி ஆவணக் கட்டணத்தை கட்டணம் இன்றியே பரீட்சித்துப் பார்க்கலாம்.
04. கேள்விதாரர் தமது கேள்வியுடன், இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்த வர்த்தக வங்கியிலிருந்து, அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் "அரசாங்க அழுத்தகர்" பெயரில் ரூ 100,000.00 கேள்விப்பிணை / வங்கிப்பிணைகளை அல்லது மேற்படி பெறுமதிக்கு அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் கணக்குப்பிரிவின் காசாளர் கருமபீடத்திற்கு செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும்.
05. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்கள் அடங்கிய விண்ணப்பங்களை, உறையில் இட்டு, 2024.04.25 பி.ப. 2.00 இற்கு முன் கிடைக்குமாறு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது திணைக்களத்தின் வேறு வழங்கல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். உங்களது கேள்விகள் சமர்ப்பித்தல் உறையின் இடதுப்பக்க மேல் மூலையில் "அரசாங்க அச்சுத்திணைக்களத்தின் சுத்திகரிப்புச் சேவைக்கான கேள்வி 2024/2025" என்று குறிப்பிடுதல் வேண்டும். 2024.04.25 பி.ப. 2.00 இற்கு கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைவதுடன், உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். இவ்வேளையில் உங்களுக்கு அல்லது உங்களது பிரதிநிதி ஒருவர் சமுகமளிக்கலாம்.
06. பெறுகைக்கு முன்னரான கூட்டம் 2024.04.18 மு.ப. 10.00 இற்கு திணைக்கள கேட்போர் கூடத்தில் நடத்தப்படும்.
07. மேலதிக விபரங்களை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 8.30 முதல் பி.ப. 3.30 வரை கீழே முகவரி குறிப்பிடப்பட்டுள்ள அலுவலகத்தின் வேறு வழங்கல்கள் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**அரசாங்க அச்சுத் திணைக்களம்,**
**இல.118, டொக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்த, கொழும்பு - 08,**
**2024.04.03**
**தொ.பே. இல. : 0112673311 / பெக்ஸ் : 0112698653**
**இணையதளம் : www.documents.gov.lk**
**மின்னஞ்சல் : othersupplydgp@gmail.com**

---

**நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு**

## நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சில் உணவகத்தை நடத்திச் செல்வதற்கான கேள்வி கோரல்

**ஒப்பந்த இலக்கம் : MF/06/23/98/2024**

லோட்டஸ் வீதி, கொழும்பு - 01 இல் அமைந்துள்ள நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சில் உணவகத்தை 2024/2025ம் ஆண்டிற்காக நடத்திச் செல்வதற்காக தகைமையுள்ள நிறுவனங்களிலிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

02. இதற்காக விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்ப்பின், 2024.04.03 முதல் 2024.04.24 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை நிதி பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளரின் பெயரில் கணக்காளர் (கொடுப்பனவுகள்) இடம் எழுத்துமூல வேண்டுதலைச் சமர்ப்பித்து மற்றும் மீளளிக்கப்படாத ரூபா.1000.00 கட்டணத்தை அமைச்சின் காசாளரிடம் செலுத்திய பின்னர் நிதி, பொருளாதார உறுதிப்பாடுகள் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் புதிய கட்டிடத்தின் மேல் தரை மாடியில் அமைந்துள்ள கணக்குப் பிரிவிலிருந்து கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம். அவ்வாறே கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கு தேவைப்படின் அதற்காகவும் மேற்படி நேரம் மற்றும் தினங்களில் நிதி / பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் கணக்குப் பிரிவில் அதனை பரீட்சித்துப் பார்க்கலாம்.

03. கேள்விதாரர்களுக்கான தகைமைகள்

I. குறைந்தபட்சம் 03 வருட காலம் அரச அல்லது அரச சார்பு நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் உணவகங்களை நடத்திச் சென்றிருக்க வேண்டியதுடன் அனுபவம் பற்றி ஆவணங்கள் மூலம் உறுதி செய்தல் வேண்டும்.

II. உணவு வழங்குதல், உணவகங்களை நடத்திச் செல்லல் பற்றிய வியாபாரங்களை நடத்திச் செல்லல் பற்றி விநியோகிக்கப்படும் வியாபார பெயர் பதிவுச்சான்றிதழ்

III. உணவு தயாரிப்போரின் திறன் பற்றி மற்றும் உணவு பரிமாறுவோரின் திறன் பற்றி விசேட கவனம் செலுத்தப்படும்.

IV. அரச அல்லது அரச சார்பு நிறுவனங்கள் அல்லது தனியார் நிறுவனங்கள் மூலம் அபகீர்த்தியானோர் பட்டியலிடப்பட்ட வழங்குநர்கள்/ ஒப்பந்ததாரர்களுடன் ஒப்பந்த உடன்படிக்கை மேற்கொள்ளப்படும். கேள்விதாரர் அவ்வாறான அபகீர்த்தியானோர் பட்டியலிடப்படாத நிறுவனம் என்பது பற்றிய எழுத்துமூல உறுதிமொழியை அளித்தல் வேண்டும்.

V. சகல கேள்விதாரர்களும் செயலாளர், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் பெயரில் 2024.07.11 வரை செல்லுபடியாகும் கேள்வி பாதுகாப்பு உறுதிமொழி (Bid Security Declaration) சமர்ப்பித்தல் வேண்டும்.

04. பொறியிடப்பட்ட கேள்விகள் "மூலப்பிரதி" மற்றும் "நகல்பிரதியென" இரு பிரதிகளுடன் வேறுவேறாக பொறியிட்டு 2024.04.25 பி.ப.2.00 இற்கு முன்பு பிரதம கணக்காளர், கணக்குப்பிரிவு, நிதி,பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு, மேல் தரை மாடி, புதிய கட்டிடம், லோட்டஸ் வீதி,கொழும்பு - 01 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது மேல் தரை மாடியில் அமைந்துள்ள கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். விலைமனுக்களை சமர்ப்பிக்கும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் **உணவகத்தை 2024/2025ம் ஆண்டிற்காக நடத்திச் செல்வதற்கான விலைமனுக்கோரல்"** என்று குறிப்பிடுதல் வேண்டும்.

05. கேள்விகள் திறத்தல் 2024.04.25 பி.ப. 2.00 இற்கு இடம்பெறுவதுடன் அன்றே அந்த நேரத்திலேயே உங்களுக்கு அல்லது உங்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்க முடிவதுடன் கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் நேரம் முடிவடைந்த பின்னர் சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் நிராகரிக்கப்படும். அத்துடன் கேள்விகள் திறக்கப்படுவதற்காக ஏற்கப்படமாட்டாது.

06. கேள்விக்கு முன்னரான கூட்டம் 2024.04.17 பி.ப.10.00 இற்கு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் கணக்குப் பிரிவில் நடைபெறுவதுடன் கூட்டத்தின் முடிவின் பின்னர் உணவக வளாகத்தை பரிசீலிக்க முடியும். குறித்த வளாகத்தை பரிசீலித்த பின்னர் ேள்விகளை சமர்ப்பிக்க முடியும்.

07. உணவகத்திற்கு தேவையான மேசை மற்றும் கதிரை, மின்சாரம், நீர் மற்றும் ஏனைய உபகரணங்கள் போன்ற வசதிகளும் இவ் அமைச்சினால் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களை கணக்காளர் (வழங்கல்கள்) (தொ.பே.இலக்கம் : 0112484538 விசாரித்து) பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர் - அமைச்சு (சிறிய) பெறுகைக் குழு,**
**நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு**
**செயலகம், கொழும்பு - 01, தொ.பே. - 0112484600**

---

**இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு**
**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**

## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## கி.மீ. 1,500 வீதி செயற்திட்டங்களுக்கான விலைமனுக்கோரல் (IFB)

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்ததின் பெயர் | பொறியியலாளர்களின் மதிப்பீட்டுத் தொகை (மேலதிக செலவுகளுடன்) ரூ.மில்லியன்) | CIDA தரம் | மனுப் பாதுகாப்பு பிணைத் தொகை (ரூ) | ஒப்பந்த காலம் (நாட்கள்) |
|---|---|---|---|---|---|
| **மேல் மாகாணம்** | | | | | |
| RDA/SP/1500KM/WP/30 | கொன்கொடமுல்ல சாந்த அந்தோணியார் தேவாலய வீதியை மேம்படுத்தல் (ஸ்மார்ட் சேர்ட் வீதி) | 31.86 | C5 மற்றும் C4 | 450,000.00 | 91 |
| RDA/SP/1500KM/WP/39 | அரலிய மாவத்தையை மேம்படுத்தல் | 24.17 | C5 மற்றும் C4 | 350,000.00 | 91 |
| RDA/SP/1500KM/WP/40 | ஜா-எல பன்டிகொட அப்பலொனியகந்த மேலிருந்து பன்டிகொட தேவாலயம் குறுக்காக இதினிம்ம விகாரை வரையான வீதியை மேம்படுத்தல் | 31.64 | C5 மற்றும் C4 | 450,000.00 | 91 |
| **தென் மாகாணம்** | | | | | |
| RDA/SP/1500KM/SP/MTR/12 | 13ம் கட்டை, வடு கெதர வீதியை மேம்படுத்தல் | 26.9 | C5 மற்றும் C4 | 404,000.00 | 91 |
| RDA/SP/1500KM/SP/GAL/02 | பன்வில - இஹல பன்வில - திரிவானாகெட்டிய - நாத்தவெல வீதியை மேம்படுத்தல் | 38.9 | C5 மற்றும் C4 | 584,000.00 | 91 |
| RDA/SP/1500KM/SP/GAL/03 | மொரகொட K.F.F வித்தியாலயத்திற்கு அருகிலிருந்து இஹல மாலவன வரையான வீதியை மேம்படுத்தல் | 27.1 | C5 மற்றும் C4 | 406,000.00 | 119 |
| RDA/SP/1500KM/SP/GAL/04 | கொபேத்துடுவ வீதியை மேம்படுத்தல் | 25.2 | C5 மற்றும் C4 | 377,000.00 | 119 |
| RDA/SP/1500KM/SP/GAL/06 | இந்துரன்வில குருல்லவெல கல்காவ வரையிலான வீதியை மேம்படுத்தல் | 30.4 | C5 மற்றும் C4 | 456,000.00 | 119 |
| RDA/SP/1500KM/SP/HMB/16 | பிட்டவல வெவக்கு அருகிலிருந்து வெவ்சிரிபுர பிரதான சந்தி வரையிலான வீதியை மேம்படுத்தல் | 50.8 | C4 மற்றும் அதற்கு மேல் | 762,000.00 | 119 |
| RDA/SP/1500KM/SP/HMB/18 | பில்லவல தொடக்கம் கஜநாயக்க பாடசாலை வீதியை மேம்படுத்தல் (0+000 - 2+700 and 0+000 – 0+255 ) | 34.1 | C5 மற்றும் C4 | 512,000.00 | 91 |
| **வடமேல் மாகாணம்** | | | | | |
| RDA/SP/1500KM/NWP/12 | போதிராஜபுர பாடசாலை மத்திய அட்டவிலுவ வீதியை மேம்படுத்தல் | 61.9 | C4 மற்றும் அதற்கு மேல் | 930,000.00 | 119 |
| RDA/SP/1500KM/NWP/13 | முதலப்பாளி வீதியை மேம்படுத்தல் | 50.6 | C5 மற்றும் C4 | 760,000.00 | 119 |
| RDA/SP/1500KM/NWP/15 | ஹேனபொல கிராம வீதியை மேம்படுத்தல் | 27.0 | C5 மற்றும் C4 | 405,000.00 | 119 |
| RDA/SP/1500KM/NWP/16 | கொட்டுகச்சிய சந்தி, கச்சமடுவ கிராம வீதி வரை மேம்படுத்தல் | 36.7 | C5 மற்றும் C4 | 550,000.00 | 119 |
| RDA/SP/1500KM/NWP/17 | அரசன்வெவ முதல் எலபன்ட் குறுக்காக கலவெவ சந்தி வரை மேம்படுத்தல் (0+000 - 2+750 Km) | 35.6 | C5 மற்றும் C4 | 500,000.00 | 119 |
| RDA/SP/1500KM/NWP/19 | வாகொல்ல சந்தி முதல் சாலியல வீதி வரை (தேத்தாவ பஹலகம வழியாக) | 24.52 | C5 மற்றும் C4 | 350,000.00 | 119 |
| RDA/SP/1500KM/NWP/21 | கிரவெவ அமுனுவெல பரணகம - (விலபொல குறுக்காக 255 பல்லேவெல வீதியை மேம்படுத்தல் | 60.1 | C4 மற்றும் அதற்கு மேல் | 900,000.00 | 119 |
| **வட மத்திய மாகாணம்** | | | | | |
| RDA/SP/1500KM/NCP/POL/01 | கிரித்தலே ஜனபதய பாடசாலை வீதியை மேம்படுத்தல் | 31.41 | C5 மற்றும் C4 | 500,000.00 | 90 |
| RDA/SP/1500KM/NCP/POL/02 | ஹிங்குரக்கொட பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் சமரவீர மோட்டர் உள்சுற்று வட்டார வீதியை மேம்படுத்தல் | 29.5 | C5 மற்றும் C4 | 300,000.00 | 90 |
| RDA/SP/1500KM/NCP/POL/03 | சுரங்கப்பாதை சந்தி சருபிம வீதி வரை மேம்படுத்தல் | 44.08 | C5 மற்றும் C4 | 500,000.00 | 90 |
| RDA/SP/1500KM/NCP/ANP/01 | மெக்கிச்சாவ, பழுவெவ முதல் நெக்கட்டுனுவெவ வீதி வரை மேம்படுத்தல் | 42.3 | C5 மற்றும் C4 | 430,000.00 | 90 |
| RDA/SP/1500KM/NCP/ANP/02 | வராகொட சந்தி, கெலே கும்புக்வெவ வீதியை மேம்படுத்தல் | 36.47 | C5 மற்றும் C4 | 400,000.00 | 90 |
| RDA/SP/1500KM/NCP/ANP/03 | இல-359 அரசமரத்தடி சந்தை முதல் முருத்தகஸ் சந்தி வரை மேம்படுத்தல் | 61.22 | C4 மற்றும் அதற்கு மேல் | 700,000.00 | 90 |
| RDA/SP/1500KM/NCP/ANP/04 | ஹிரிபிட்டிய சந்தி முதல் உஸ்கல சந்தி வீதியை மேம்படுத்தல் | 48.05 | C4 மற்றும் அதற்கு மேல் | 500,000.00 | 90 |

மேற்குறிப்பிடப்பட்ட ஒப்பந்தங்களுக்காக **தேசிய மனுக்கோரல் போட்டி முறையின்** கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றது. ஆர்வமுள்ள மனுதாரர்கள் **2024.04.02** ஆம் திகதி முதல் **2024.04.22** ஆம் திகதி வரை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் இணையதளம் **www.rda.gov.lk** இனை பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**தலைவர்,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கொள்முதல் குழு,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை.**

SELACINE

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz It's what you want
Classified
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343
077 7 270 067
E-mail - classified@lakehouse.lk
WE ACCEPT
BANK OF CEYLON BOC Lake House Branch Acc. No. 000000377

# பங்களாதேஷுக்கு எதிரான தொடர் வெற்றிக்கு இலங்கைக்கு இன்னும் 3 விக்கெட்டுகள் தேவை

## தடுமாறும் பங்களாதேஷ் அணி 243 ஓட்டங்களை பெற வேண்டும்

பங்களாதேஷுக்கு எதிரான இரண்டாவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி வெற்றியை நெருங்கியுள்ளது. பங்களாதேஷ் அணிக்கு 511 ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயித்த நிலையில், பங்களாதேஷ் அணியின் வெற்றிக்கு அந்த அணி இன்னும் 243 ஓட்டங்களை பெற வேண்டி இருப்பதோடு இலங்கை அணி இன்னும் 3 விக்கெட்டுகளையே வீழ்த்த வேண்டி உள்ளது.



சட்டொக்ராமில் நடைபெற்று வரும் இந்த டெஸ்ட் போட்டியின் கடைசி நாள் இன்று (03) என்பதோடு இலங்கை அணி வெற்றி பெறும் பட்சத்தில் தொடரை 2–0 என முழுமையாக கைப்பற்றிவிடும்.

போட்டியின் நான்காவது நாளான நேற்று இலங்கை அணி 102 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளை இழந்த நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்தது. எனினும் 157 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுகளை இழந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. அஞ்சலோ மத்தியூஸ் மாத்திரம் அரைச்சதம் ஒன்றை பெற்றார். வலது கை வேகப்பந்து விச்சாளர் ஹசன் மஹ்மூத் 4 விக்கெட்டுகளை பதம்பார்த்தார்.

இந்த டெஸ்ட் போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி முதல் இன்னிங்ஸுக்கு 531 ஓட்டங்களை பெற்றதோடு பங்களாதேஷ் அணி தனது முதல் இன்னிங்ஸுக்காக 178 ஓட்டங்களையே பெற்றது.

இதன்படி பங்களாதேஷ் அணிக்கு 511 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. நேற்று பகல்போசண இடைவேளைக்கு முன்னரே சவாலான வெற்றி இலக்கை நோக்கி தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த பங்களாதேஷ் அணி முக்கிய இடைவெளிகளில் விக்கெட்டுகளை பறிகொடுத்தது.

ஆரம்ப வீரர் மஹ்மூத் ஹசன் ஜோய் 24 ஓட்டங்களை பெற்றிருந்தபோது பிரபாத் ஜயசூரியவின் பந்துக்கு போல்டானார். தொடர்ந்து சாகிர் ஹசன் 19 ஓட்டங்களுடன் வெளியேறினார். அணித் தலைவர் நஜ்முல் ஹொஸைன் ஷான்டோ 20 ஓட்டங்களையே பெற்றார்.

மத்திய வரிசையில் மொமினுல் ஹக் வேகமாக 50 ஓட்டங்களை பெற்றபோதும் பிரபாத் ஜயசூரிய அவரது விக்கெட்டை சாய்த்தார். ஷகீப் அல் ஹசன் (36) மற்றும் லிட்டோன் தாஸ் (38) இருவருக்கும் நின்று பிடிக்க முடியவில்லை. ஷஹதாத் ஹொஸைன் 15 ஓட்டங்களை பெற்ற நிலையில் கமிந்து மெண்டிஸின் பந்துக்கு எல்.பி.டபிள்யு. முறையில் ஆட்டமிழந்தார்.

இதன்படி நேற்று ஆட்ட நேர முடிவின்போது பங்களாதேஷ் அணி 67 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 268 ஓட்டங்களை பெற்றது.

பங்களாதேஷ் அணி ஐந்து இன்னிங்ஸ்களின் பின்னரே முதல் முறையாக இன்னிங்ஸ் ஒன்றில் 200க்கும் மேல் ஓட்டங்களை பெற்றுள்ளது.

ஆட்டநேர முடிவின்போது மஹ்தி ஹசன் மிராஸ் 44 ஓட்டங்களுடனும் தைஜுல் இஸ்லாம் 10 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் உள்ளனர்.

இலங்கை சார்பில் பந்துவீச்சில் லஹிரு குமார, பிரபாத் ஜயசூரிய மற்றும் கமிந்து மெண்டிஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

# நாடு திரும்பினார் சந்திமால்



குடும்ப மருத்துவ அவசர நிலை ஒன்று காரணமாக இலங்கை துடுப்பாட்ட வீரர் தினேஷ் சந்திமால் பங்களாதேஷுக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் நேற்று முன்தினம் (1) மூன்றாம் நாள் ஆட்டத்துடன் நாடு திரும்பியுள்ளார்.

அவர் உடன் நாடு திரும்புகிறார் என்று இலங்கை கிரிக்கெட் சபை நேற்று அறிவித்துள்ளது.

'இந்த சந்தர்ப்பத்தில் தினேஷ் சந்திமாலின் தேவைக்கு இலங்கை கிரிக்கெட், அவரது சக அணியினர் மற்றும் பயிற்சியாளர்கள் முழு ஆதரவை வழங்குவதோடு அவர் மற்றும் அவரது குடும்பத்தின் தனிப்பட்ட விடயங்களுக்கு பொதுமக்கள் மதிப்பளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்' என்று இலங்கை கிரிக்கெட் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சந்திமால் இந்த டெஸ்ட் போட்டியிலும் இரண்டு இன்னிங்ஸ்களிலும் துடுப்பெடுத்தாடிய நிலையில் (59, 9) அவரால் நேற்று பங்களாதேஷின் இரண்டாவது இன்னிங்ஸிலேயே களத்தடுப்பில் ஈடுபட முடியாமல்போனது.

# சனசமூக அணி சம்பியன்

காரைதீவு குறூப் நிருபர்

காரைதீவு விளையாட்டுக் கழகம் பத்தாவது தடவையாக நடத்திய கே.எஸ்.சி. பிரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் விபுலானந்தா சனசமூக நிலையம் சம்பியன் கிண்ணத்தை வென்றது.



காரைதீவு விபுலானந்தா மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (31) நடைபெற்ற இந்தப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் விபுலானந்தா விளையாட்டுக் கழகத்தை எதிர்கொண்ட விபுலானந்தா சனசமூக அணி 7 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது.

# புனித செபஸ்டியன் வெற்றி



மொரட்டுவை புனித செபஸ்டியன் கல்லூரி பூப்பந்து அணி 19 வயதுக்கு உட்பட்ட அகில இலங்கை பாடசாலை பூப்பாந்து போட்டியில் தொடர்ந்து மூன்றாவது முறையாக சம்பியனாகத் தெரிவானது.

இலங்கை பாடசாலை பூப்பந்து சங்கத்தினால் நடைத்தப்பட்ட இந்தத் தொடர், கொழும்பு றோயல் கல்லூரி உள்ளக அரங்கில் நேற்று முன்தினம் (01) நிறைவடைந்தது. இதில் மொத்தம் 33 ஆடவர் அணிகளும் 28 மகளிர் அணிகளும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.



## சர்வதேச செய்திகள்

# இஸ்ரேலின் தாக்குதலில் காசாவில் ஏழு தொண்டுப் பணியாளர்கள் பலி

## சர்வதேச அளவில் கண்டனம்: உதவி விநியோகத்திலும் நெருக்கடி

காசாவில் உணவு உதவிகளை எடுத்துச் சென்ற தொண்டு அமைப்பின் வாகனம் மீது இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் ஏழு பேர் கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்து அங்கு உதவி நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் தொண்டு அமைப்புகள் தமது பணிகளை இடைநிறுத்த ஆரம்பித்துள்ளன.



சைப்ரஸில் இருந்து கடல் வழியாக காசாவுக்கு எடுத்துவரப்பட்ட உணவு உதவிகளை எடுத்துச் செல்லும் வாகனம் மீதே இஸ்ரேல் நேற்று முன்தினம் (01) வான் தாக்குதல் நடத்தியுள்ளது. இது சர்வதேச அளவில் பெரும் கண்டனத்திற்கு காரணமாகியுள்ளது.

அமெரிக்காவை தளமாகக் கொண்ட 'வேர்ல்ட் சென்ட்ரல் கிட்சன்' என்ற தொண்டு அமைப்பின் ஊழியர்களே இதில் கொல்லப்பட்டதை அந்த அமைப்பு உறுதி செய்துள்ளது. இதில் அவுஸ்திரேலியா, போலந்து, பிரிட்டன், அமெரிக்கா மற்றும் கனடா மற்றும் பலஸ்தீன இரட்டை பிரஜைகள் கொல்லப்பட்டிருப்பதாக அந்த அமைப்பு குறிப்பிட்டது.

தொண்டு நிறுவனத்தின் சின்னம் பொறிக்கப்பட்ட இரு கவசக் கார்கள் மற்றும் ஒரு சாதாரண வாகனங்கள் மோதல் இடம்பெறாத மத்திய காசா பகுதியில் பயணித்துக் கொண்டிருந்தபோதே அந்த வாகனத் தொடரணி இலக்கு வைக்கப்பட்டதாக தொண்டு அமைப்பு குறிப்பிட்டது.

'(இஸ்ரேலிய இராணுவத்துடன்) ஒருங்கிணைந்து செயற்பட்டபோதும், காசா கடல்வழி பாதை ஊடாக எடுத்து வரப்பட்ட 100 தொன்னுக்கும் மேற்பட்ட மனிதாபிமான உதவியை இறக்கி டெயிர் அல் பலாவில் உள்ள களஞ்சியத்தில் இருந்து புறப்பட்ட நிலையிலேயே இந்த வாகனத் தொடரணி தாக்கப்பட்டுள்ளது' என்று வேர்ல்ட் சென்ட்ரல் கிட்சன் அமைப்பு கூறியது.

இந்த உதவிகள் கடந்த திங்கட்கிழமை காலையிலேயே சைப்ரஸில் இருந்து ஒரு தெப்பம் மற்றும் இரு கப்பல்கள் மூலம் காசா கடற்கரையை அடைந்தது. இது காசாவுக்கு கடல் வழியாக உதவிகள் அனுப்பப்பட்ட இரண்டாவது சந்தர்ப்பமாக இருந்தது.

'இந்த துயர சம்பவத்தின் சூழ்நிலைகளை புரிந்து கொள்ள உயர் மட்டத்தில் ஒரு முழுமையான ஆய்வு நடத்தப்படும்' என்று இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டுள்ளது.

கொல்லப்பட்டவர்களில் அவுஸ்திரேலிய நாட்டவரான சோமி பிரான்கொம் என்ற தொண்டு பணியாளர் இருப்பதை உறுதி செய்த அந்நாட்டு பிரதமர் அன்டனி அல்பன்ஸ், 'இது முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது' என்றார்.

மத்திய நகரான டெயிர் அல் பலாஹ்வில் உள்ள மருத்துவமனை ஒன்றின் பிணவறையில் உடல்கள் வைக்கப்பட்டிருப்பதாக ஏ.எப்.பி. செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. தொடர்ந்து இந்த உடல்கள் எகிப்துக்கு நேற்று அனுப்பப்பட்டுள்ளன. அதில் ஒருவர் தொண்டு நிறுவனத்தின் சின்னம் பொறிக்கப்பட்ட டீசேர்ட்டை அணிந்திருப்பதும் மூன்று வெளிநாட்டு கடவுச்சீட்டுகள் வைக்கப்பட்டிருப்பதும் அங்கிருந்து வெளியான படங்கள் காட்டுகின்றன.

வெள்ளை மாளிகை, இந்தத் தாக்குதலினால் மனமுடைந்திருப்பதாகவும் பெரும் கவலை அடைத்திருப்பதாகவும் அமெரிக்க தேசிய பாதுகாப்பு கௌன்சில் பேச்சாளர் அன்ரினே வொட்சன் தெரிவித்துள்ளார்.

'கடும் தேவையுடைய மக்களுக்கு உதவிகளை வழங்கும் மனிதாபிமான உதவிப் பணியாளர்கள் பாதுகாக்கப்பட வேண்டும்' என்று அவர் எக்ஸ் சமூகதளத்தில் குறிப்பிட்டார்.

இந்தத் தாக்குதலை அடுத்து காசாவில் தமது உதவி செயற்பாடுகளை நிறுத்துவதாக வேர்ல்ட் சென்ட்ரல் கிட்சன் அமைப்பு தெரிவித்துள்ளது. அமெரிக்காவை தளமாகக் கொண்ட மற்றொரு தொண்டு அமைப்பான அனேரா என்ற அமைப்பு காசாவில் பணிகளை நிறுத்துவதாக அறிவித்துள்ளது.

கிட்டத்தட்ட ஆறு மாதங்களாக நீடிக்கும் போரினால் காசாவில் பாரிய மனிதாபிமான நெருக்கடி ஏற்பட்டிருக்கும் சூழலில் அங்கு உதவிகள் செல்வதை அதிகரிப்பதற்கு இஸ்ரேல் மீது கடும் அழுத்தம் ஏற்பட்டுள்ளது.

கடந்த மார்ச் 19 ஆம் திகதி ஐ.நா. ஆதரவில் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில், காசாவில் இருக்கும் பாதி அளவான மக்கள் பெரும் பட்டினியை அனுபவித்து வருவதாகவும் அதன் வடக்கில் விரைவாக பஞ்சம் ஒன்று ஏற்படும் நிலை உருவாகி இருப்பதாகவும் எச்சரிக்கப்பட்டிருந்தது.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி போர் வெடித்தது தொடக்கம் காசாவில் இஸ்ரேல் முழு முற்றுகையை செயற்படுத்தி வருவதோடு மனிதாபிமான உதவி விநியோகங்களை இஸ்ரேல் தடுப்பதாக ஐக்கிய நாடுகள் குற்றம்சாட்டுகிறது.

காசாவில் அவசர உதவி விநியோகத்தை உறுதி செய்யும்படி இஸ்ரேலுக்கு சர்வதேச நீதிமன்றமும் உத்தரவிட்டுள்ளது. அங்கு 'பஞ்சம் ஏற்பட்டு வருவதாகவும்' அந்த நீதிமன்றம் குறிப்பிட்டிருந்தது.

வெளிநாட்டு அரசுகள் வான் மற்றும் கடல் வழியாக உதவிகளை வழங்கி வருகின்றபோதும் தரைவழியான உதவி விநியோகங்களே தேவைகளை பூர்த்தி செய்வதாக அமையும் என்று ஐ.நா. நிறுவனங்கள் தொடர்ந்து வலியுறுத்து வருகின்றன.

மறுபுறம் காசாவில் இஸ்ரேலின் தாக்குதல்கள் நேற்றும் தொடர்ந்தன. தெற்கு காசாவின் ரபாவில் உள்ள வீடு ஒன்றின் மீது நடத்தப்பட்ட குண்டு வீச்சில் ஒரே குடும்பத்தில் ஆறு பேர் கொல்லப்பட்டனர். டெயிர் அல் பலாவில் இருக்கும் பள்ளிவாசல் ஒன்றின் மீதான வான் தாக்குதல் ஒன்றில் சிறுவர்கள் உட்பட பலர் கொல்லப்பட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

தவிர, மத்திய மற்றும் கிழக்கு கான் யூனிஸ் நகரில் வீடுகள் மீது நடத்தப்பட்ட செல் வீச்சில் பலரும் கொல்லப்பட்டிருப்பதோடு காசா நகரின் செய்தூன் பகுதியில் இடம்பெற்ற வான் தாக்குதலில் மூவர் கொல்லப்பட்டு மேலும் ஆறு பேர் காயமடைந்துள்ளனர்.

கடந்த 24 மணி நேரத்தில் காசாவில் மேலும் 71 பேர் கொல்லப்பட்டிருப்பதோடு 102 பேர் காயமடைந்திருப்பதாக காசா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

காசாவில் கடந்த ஆறு மாதங்களாக இடம்பெறும் இஸ்ரேலின் தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை தற்போது 33 ஆயிரத்தை நெருங்கி 32,916 ஆக அதிகரித்துள்ளது.

# இஸ்ரேலுக்கு பதிலளிக்க ஈரான் ஜனாதிபதி சூளுரை

சிரிய தலைநகர் டமஸ்கஸில் உள்ள ஈரான் துணைத் தூதரகத்தின் மீதான இஸ்ரேலின் தாக்குதலை கண்டித்திருக்கும் ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி, 'கோழைத்தனமாக இந்த குற்றச்செயலுக்கு பதிலளிக்காது விடமாட்டோம்' என்று சூளுரைத்துள்ளார்.



'முன்னரங்கில் இருக்கும் எதிர்ப்புப் போராளிகளின் நம்பிக்கை மற்றும் உறுதிக்கு முன் தொடர்ந்து தோல்விகளை சந்திக்கும் சியொனிச அரசு தன்னை பாதுகாத்துக்கொள்ள குருட்டுத்தனமான படுகொலைகளை நிகழ்த்துகிறது' என்று ரைசி தனது உத்தியோகபூர்வ இணையதளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஈரானிய தூதரகத்துடன் இணைக்கப்பட்ட ஐந்து மாடி கட்டடத்தின் மீது நேற்று முன்தினம் (01) இடம்பெற்ற வான் தாக்குதலில் ஈரானிய புரட்சிக் காவல் படையின் ஏழு உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர். இவர்களில் ஈரானிய குத்ஸ் படையின் மூத்த தளபதிகள் இருவரும் அடங்குகின்றனர்.

இந்தத் தாக்குதல் தொடர்பில் இஸ்ரேல் எந்த பதிலும் அளிக்கவில்லை.

காசாவில் போர் வெடித்தது தொடக்கம் பிராந்தியத்தில் பதற்றம் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தனிப்பட்ட தரவுகளை அழிக்கிறது 'கூகுள்'

இணையவாசிகள் 'incognito' சேவை வழி தனிப்பட்ட முறையில் இணையதளத்தை பயன்படுத்துபர்வகளை மறைமுகமாக கண்காணிக்கும் வழக்கு ஒன்றை தீர்க்கும் வகையில் பில்லியன் கணக்கான தரவு பதிவுகளை அழிப்பதற்கு கூகுள் இணங்கியுள்ளது.




அமெரிக்காவின் சான் பிரான்சிஸ்கோ மத்திய நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் (01) முன்மொழியப்பட்ட நிபந்தனையில், கிரோம் புரோசரின் மறைமுகமான செயற்பாட்டின் மூலம் அதனை பயன்படுத்தும் மக்களுடன் தொடர்புபட்ட 'பில்லியன் கணக்கான தரவுப் பதிவுகளை நீக்குவது அல்லது திருத்தம் செய்வதற்கு' கூகுளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த வழக்கு 2020 இல் குறைந்தது 5 பில்லியன் டொலர் இழப்பிடு கோரி தொடுக்கப்பட்டிருந்தது.

இந் நிலையில் வழக்கை தீர்ப்பதற்கு பணம் செலுத்தத் தேவையில்லை என்று குறிப்பிடப்பட்டபோதும் இது கிரோம் பயனர்கள் தமக்கு அநீதி இழைக்கப்பட்டதாக கருதி கூகுள் மீது வழக்கு தொடுக்க வழி ஏற்பட்டுள்ளது.

இந்த தரவு அழிப்பு அமெரிக்காவுக்கு வெளியிலும் பொருந்து என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் இணையவாசிகள் மூன்றாம் தரப்பு 'கூகீஸ்' அம்சத்தை 5 ஆண்டுகளுக்கு மறுக்க அனுமதிக்கப்படுவர்.

# 'அல் ஜசீரா' தடைக்கு இஸ்ரேலில் புது சட்டம்

கட்டாருக்கு சொந்தமான அல் ஜசீரா உட்பட தொலைக்காட்சி ஒளிபரப்புகளுக்கு தடை விதிக்க அரசுக்கு அதிகாரம் அளிக்கும் சட்டம் ஒன்றுக்கு இஸ்ரேலிய பாராளுமன்றத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.




இதனை அடுத்து அல் ஜசீராவின் உள்ளூர் அலுவலகத்தை மூடுவதற்கு உடன் நடவடிக்கை எடுப்பதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கை தொடர்பில் அமெரிக்கா கவலையை வெளியிட்டுள்ளது.

வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் காசாவுக்குள் நுழைய தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், அந்தப் பகுதியை தளமாகக் கொண்ட அல் ஜசீரா செய்தியாளர்கள் மாத்திரமே காசா போர் குறித்த செய்திகளை களத்தில் இருந்து வெளியிட்டு வருகின்றனர்.

இந்நிலையில் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக கருதப்படும் வெளிநாட்டு ஒளிபரப்புகளுக்கான அனுமதிக்கு தற்காலிக தடை விதிக்கவே இஸ்ரேல் பாராளுமன்றம் ஆதரவு அளித்துள்ளது.

இந்தத் தடை 45 நாட்களுக்கு அமுல்படுத்த முடியும் என்பதோடு தொடர்ந்து அதனை புதுப்பிக்க வேண்டி உள்ளது. இந்தச் சட்டம் ஜுலை வரையும் அல்லது காசா போர் முடியும் வரையும் அமுலில் இருக்கும்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஏப்ரல் மாதம் 3ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.